
ரவீந்திரநாத் தாகூர்



யன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

தமிழ் நாட்டுச் சிறுகதைகள் — 10

அழகி

முதலிய கதைகள்

க. நா. சுப்ரமண்யம், பி. ஏ.,

எழுதியவை

1. அழகி
2. ஒரு கடிதம்
3. கொலைபாதகன்
4. வாஸவதத்தை
5. கவி
6. இரண்டாவது கலியாணம்
7. விதியும் மதியும்
8. தர்மம்
9. மார்க்கண்டன்
10. முதல் கதை
11. பிரும்மாவுக்கு உதவி
12. நாரீ திலகம்
13. கிறுக்கெழுத்து
14. வரவேற்பு
15. நசிகேதன்

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

G. A. Moni

கவி ரவீந்திரநாத தாகுர்

கதைக் கோவை

(முதல் தொகுதி)

40 — பிரபல எழுத்தாளர்கள்

40 — சிறந்த சிறு கதைகள்

கிளேஸ் பதிப்பு ரூ. 3—0—0

பெதர் வெயிட் ரூ. 3—8—0

மாடல் அச்சுக்கூடம்,
சென்னை —1941913.

கவி

ரவீந்திரநாத தாகூர்

ஆசிரியர்:
க. நா. சுப்ரமண்யம், பி. ஏ.

அல்லயன்ஸ் கம்பெனி,
மயிலாப்பூர், சென்னை

[விலை ரூ. 1

பொருளடக்கம்

முகவுரை

இரண்டு நாளைக்கு முன்பு (6-9-41), லண்டனிலுள்ள கான்வே ஹாலில், இடங்காணாத படி கூட்டம் கூடிவிட்டது. காலஞ்சென்ற தாகுருக்குப் பாராட்டுச் சொல்லுவதற்காகத் தான். யார் யார் வந்து பேசினார்கள்? ருஷிய நாட்டுப் பிரதிநிதி, ஸ்பெயின் தேசத்து அரசியல் தலைவர், சைனாவின் பிரதிநிதி, அமெரிக்கப் பத்திரிகை உலகத்தில் சிறந்த ஆசிரியை, இவர்களோடு காண்டர்புரி சர்ச்சுக்கு உபதலைவரா யுள்ள டாக்டர் ஜான்ஸன் முதலானவர்கள் வந்து பேசினார்கள்.எல்லாரும் தாகுரின் நூல்களை ரொம்பவும் அனுபவித்து ரொம்பவும் பாராட்டிப்பேசினார்கள்.'தாகுர்,பேராசிரியர்;மேல்நாட்டு ஹோமர், டால்ஸ்டாய், ஷேக்ஸ்பியர் முதலியவர்களோடு ஒத்து நிற்கும் பேராசிரியர்' என்றெல்லாம் பேசினார்கள். 'தேச வரம்பு, கால வரம்பு எல்லாவற்றையும் கடந்து செல்லுகிறது அவர் வாக்கு' என்று டாக்டர் ஜான்ஸன் பேசினார்.

அப்படியானால் எவ்வளவு பரந்த கீர்த்தி யுள்ளவர் தாகுர் என்று சொல்லவேண்டிய தில்லை.

தாகுர் எழுதாத உயர்ந்த விஷயம் கிடையாது. வாழ்க்கைத் தத்துவம், கலைத் தத்துவம், சமய தத்துவம் எல்லாவற்றையும் அளந்து விட்டார்.

அத்தகைய மகான் பாரத மாதாவின் அரும்புதல்வராய்ப்பிறந்தது நம்முடைய யோகம். அவரைப் பற்றிய விபரக்குறிப்புகள் கொஞ்சம் தெரியவேண்டும் என்ற ஆசை நமக்கு இருப்பதும் இயலபுதானே?

ஸ்ரீ. க. நா. சுப்ரமண்யம் அவர்கள் அத்தகைய குறிப்பு ஒன்று உதவுகிறார்கள்.


அனேக விஷயங்களை நாம் கூர்ந்து கவனிக்க வேண்டும். ஏதோ நம்முடைய பள்ளிக்கூடங்கள் ரொம்பப் பிரயோசனமான காரியம் என்று நினைத்துக் கொண்டிருக்கிறோம். தாகுர் சொல்லுவதையும் தாகுரைப்பற்றிச் சொல்லுவதையும கேட்டால், நினைப்பு மாறிவிடும். இந்த ஓர் உண்மையைத் தெரிந்துகொள்ளுவதற்காகவே தாகுருடைய சரித்திரம் உபயோகம்?

ஆங்கிலத்திலேயே அனேக குறிப்புகளை வாசித்திருந்தபோதிலும் க. நா. சு. அவர்கள் உதவிய புஸ்தகத்தை வாசிக்கும்போது தனியான சுவையை அனுபவித்தேன். நமக்கு எப்படியும் தாய்மொழிதானே உவந்தமொழி?

'சூறாவளி' என்னும் அழகிய பத்திரிகை சிறிது காலம் தமிழ்நாட்டில் உலவி வந்தது. அதற்கு ஆசிரியராய் இருந்த காரணத்தால் தமிழுலகம் க. நா. சு. அவர்களை நன்றாய்த்தெரியும். அவர்கள் உதவும் புஸ்தகத்தை எல்லாரும் அனுபவிப்பார்கள் என்று நம்புகிறேன்.

டி. கே. சிதம்பரநாத முதலியார்.

8-9-41.



கவி ரவீந்திரநாத தாகுர்

கவி ரவீந்திரநாத தாகுர்

"மனித ஜாதியிலே மஹாகவி ஒருவன்தான் உண்மையிலே நின்று நிலைத்தவன்......தன் நாட்டுக்கும் காலத்துக்கும் அமரத்வம் அளிப்பவன் அவனே... இல்லாததைத் தந்து இருப்பதை சரியானபடி உபயோகிப்பவன் அவனே......தடுக்கவேண்டியதைத் தடுத்து மனித ஜாதியை, மனித குலத்தின் விதியை, திருத்தி அமைப்பவனும் அவனே...மனித ரிடையே சோம்பலும் அசிரத்தையும் தோன்றும்போது தார்க்கோலாகத் தூண்டி, உத்ஸாகமூட்டி, உயிரை வளர்ப்பவனும் அவனே......அவன் சொல்லும் ஒவ்வொரு வார்த்தையும் மனிதன் உள்ளத்திலே பாய்ந்து தைக்கும் அம்பு......அவனுடைய

ஒவ்வொரு வார்த்தையும் கண்ணில் ரத்தம் சொட்டச்செய்யும்...எட்டாததோர் மலைச் சிகரத்திலே கோடி சூரியப் பிரகாசத்துடன் உலகெலாம் ஒளி வீசி நிற்பவன் அவன்... இப் பிரபஞ்சத்தின் அச்சு அவன்; ஆணி அவன்...அவன் புத்தியே புத்தியின் எல்லை ...அவன் எவ்விஷயத்தையும் பற்றி விவாதிப்பதில்லை; அவன் சொல் ஒன்றே போதும். ......அவன் நியாயமும் தீர்ப்பும் ஒரு வார்த்தையில் சொல்லி வழங்குபவன்......மற்ற நியாயாதிபதிகளைப் போலில்லை அவன்; அவன் வழங்கும் நியாயம் சூரியனுடைய ஒளியைப்போன்றது: எதையும் எங்கும் சூழ்ந்து பரவிக்கொள்ளும் சக்தி படைத்தது......ஆதரவு அளிப்பாரின்றி, உலகோரால் கைவிடப்பட்டு, திக்குத்திசை தெரியாது நிற்கும் எதையும் ஆதரிப்பவன் அவன்......அவன் சிந்தனைகளே இன்ப கீதங்கள்......எட்டாத தூரமும் அவன் கண்கள் எட்டிப் பார்ப்பதனால், நம்பிக்கை கொண்டவன்: உண்மையை அறிந்தவன்: காலத்தின் எல்லையையும், நித்யத்தையும், அதற்கப்பால் உள்ளதையும் அறிந்தவன் அவன்...சாதாரண மனிதர்களிடையிலும் நித்யத்தையும் பிரும்மத்தையும் காண்பவன் அவன்...அவன் வருகையே உலகை வென்றுவிடும்......அவன் வந்துபோன வழி

யைப் பார்: அங்கு இனி சிறுமையில்லை; ஏக்கமில்லை; ஏமாற்றமில்லை; பொய் யில்லை; உயர்வு தாழ்வில்லை; ஜாதி மத மில்லை; நிற வேற்றுமையில்லை; நரக மில்லை; நரகத்துக்கோர் அவசியமுமில்லை... ...மஹாகவிக்கு அல்ப மென்பதும், சொல்ப மென்பதும், சிறியதென்பதும் தெரியாது. அல்பமானது என்று முன்னர் கருதப்பட் டதை அவன் அணுகித் தொட்டு மூட்டும் போது அது பிரபஞ்சத்தில் அடங்காத தாக விரிந்து விடும்......அவன் முனிவன்; ஞானி; எல்லாவற்றையும் கண்டு கொண் டவன்......அவன் மனிதன்.........பக்குவம் பெற்றவன்...பரிபூர்ண மடைந்தவன்...... மற்றவர்களும் அவனைப் போன்றவர்கள் தான்; ஆனால் அவன் ஒருவனே அதை அறிந்து கொண்டவன்......இந்தப் பிரபஞ் சத்துக்கு ஒரு திவ்யமான, பரிபூர்ணமான காதலன் உண்டு; அவன்தான் மஹாகவி... இதுவரை இருந்ததினின்றும், இப்போது இருப்பதினின்றும் நித்யமான, முக்ய மான, அவசியமான அம்சங்களை எடுத்து இனி இருக்கப்போவதைச் சமைப்பவன் — அவனே மஹாகவி......நிகழ்ந்ததும், நிகழு வதும், நிகழப்போவதும் கூடுமிடம் அவன் கவிதை......இது நல்லது, இது கெட்டது, இதைச் செய், இதைச் செய்யாதே என்று

அவன் சொல்லுவதில்லை ...... அவன் வருகையே தர்மத்தை நிலைக்கச் செய்யும் ...... அவன் ஞானி ; ஆத்ம விசாரம் செய்தவன் ; ஆத்மாவை அறிந்தவன் ...... அவனுடைய எளிமை கலையின் கலை : சொல்லின் சிகரம் : எழுத்தின் திவ்யப் பிரகாசம்......கவியின் எளிமையைவிடச் சிறந்த ஆபரணம் இந்தப் பிரபஞ்சத்திலேயே கிடையாது...... சுதந்திர தேவதையின் குரல் அவன்...... தன் தேசத்தை அவன் அன்புடன் அறிந்து ஆனந்தித்ததைப் போல அவனையும் அவன் தேசம் அன்புடன் அறிந்து ஆனந்திப்பதே மஹா கவியின் ஒரு லக்ஷணம்......"

— வால்ட் விட்மன்.

"உன் புகழைப் பாடி இசைக்கவே நான் இங்கிருக்கிறேன்; உன்னுடைய கோயிலிலே, இதோ இந்த மூலையில், எனக்கொரு இடம் இருக்கிறது.

உன் பிரபஞ்சத்திலே எனக்கு ஒரு தொழிலுமில்லை. வியர்த்தமான என் வாழ்க்கை காரண காரியமற்ற கீத அலைகளாக உன் காலடியில் மோதி உடைகிறது.

நள்ளிரவிலே, பூஜை நேரத்திலே, உன் இருட் கோயிலிலே என்னை அழைத்து உன் எதிரில் நின்று பாட உத்திரவிடு.

காலை நேரத்திலே ஸ்வர்ண வீணையின் தந்திகள் மீட்டப்படும்போது, என்னை அழைத்துப் பாட உத்திரவிடு......

"இந்தப் பிரபஞ்ச விருந்துக்கு எனக்கும் ஓர் அழைப்பு வந்தது. நான் தன்யனானேன்......என் கண்கள் கண்டு கண்டு களித்தன; என் காதுகள் கேட்டுக் கேட்டு மகிழ்ந்தன.

இந்தப் பிரபஞ்ச விருந்து சம்பிரமத்திலே எனக்கும் ஒரு பங்குண்டு. என் கீதங்களை இசைத்து என்னாலான வரையில் பாடிவிட்டேன்.

இனி நான் உன் கோயிலுக்குள் புகுந்து உன் முகத்தைத் தரிசிக்கலாமா? உன் உருவத்தைக் கண்டு வணங்கலாமா? அதற்குரிய பருவமும் பக்குவமும் நான் பெற்றுவிட்டேனா?

"எனக்கு அழைப்பு வந்துவிட்டது. சகோதரர்களே! நான் போய்வருகிறேன்......உங்களை வணங்கி விடைபெற்றுக்கொள்ளுகிறேன்.

என்னுடைய வீட்டில் எனக்கிருந்த உரிமைகளை நான் இதோ விட்டு விட்டேன்...உங்களுடைய கடைசி, அன்பான வார்த்தைகளைத்தான் நான் இப்போது வேண்டி நிற்கிறேன்.

நாம் வெகுகாலமாய் அண்டை அண்டை வீடுகளில் வசித்து வந்தோம். ஆனால் என்னால் அளிக்க முடிந்ததைவிட அதிகமாகவே நான் பெற்றுக் கொண்டேன்... நாள் புதிதொன்று பிறந்துவிட்டது. மலைமேல் ஏறி வரும் சூரிய ஒளியின்முன் என் மூலையில் ஒளிதந்த தீபம் மங்கி அணைந்தே போய்விட்டது. எனக்கு அழைப்பு வந்துவிட்டது. நான் பிரயாணத்துக்குத் தயாராக இருக்கிறேன்.

"போகும்போது நான் கடைசியாகச் சொல்ல விரும்பும் வார்த்தைகள் இவைதான் — நான் கண்டதைவிடப் பெரிய, சிறந்த காட்சி வேறில்லை.

ஒளிக் கடலிலே மலரும் தாமரையின் தேனைப் பருகினேன் நான்; தன்யனானேன் — இதுவே நான் கடைசியாகச் சொல்ல விரும்பும் வார்த்தை.

கணக்கில்லாத உருவங்கள் நடமாடித் திரிந்து விளையாடும் இந்தக் கூடத்திலே என் விளையாட்டு முடிந்துவிட்டது. இங்கு நான் உருவமில்லாதவனைக் கண்டுகொண்டு விட்டேன்.

கைக்கு எட்டாத அவனுடைய ஸ்பர்சத்தினால் என் உடலும் உள்ளமும் புளகாங்கிதமாயின.

இன்றுதான் என் முடிவு வரவேணுமென்றால் — வரட்டும்!......இதுவே என் கடைசி வார்த்தை.

"பிரபோ! என் கடவுளே! என் புலன்கள் எல்லாம் விரிந்து, உன் பாதாரவிந்தங்களை எட்டித்தொட்டு உன்னைப்போற்றி மகிழ அருளுவாய்.

மாரிக்காலத்து மேகம் போல என் மனமெலாம் கனமாக உன்னை அறிந்து உன் வாயிலில் காத்து நிற்க அருளுவாய்.

என் வேறு வேறு கீதங்களெல்லாம் இசைந்து ஒரே இலக்குடன் ஓடி உன் புகழெனும் மோனக் கடலிலே கலக்க அருளுவாய்.

மலைமேல் இருப்பிடம் நாடிப் பறக்கும் நாரைகள்போல என் வாழ்நாட்கள் எல்லாம் நித்யமான இருப்பிடமாகிய உன் அடி சேர அருளுவாய்!"

— தாகூர்

ஆகஸ்டு 7, 1941

இன்று புனிதமான தினம். பிராம்மணர் வேதபாராயணம் செய்ய ஆரம்பிக்க வேண்டிய நாள்: ஆவணி அவிட்டம்: அத்துடன் காயத்திரி ஜபம்: பௌர்ணமி. ஒரு வருஷத்தில் செய்துள்ள பாபங்களை யெல்லாம் பிராயச்சித்தம் செய்து அழித்துவிடும் நாளாம் இது .... இதெல்லாம் பழைய, இப்போது அர்த்தமற்றுப் போய்விட்ட, ஒரு நாகரிகத்தின் சின்னமாக இருக்கலாம். ஆனால் அதுதான் எப்படிப்பட்ட நாகரிகம்! .... என்னைப்பற்றியவரையில் இதெல்லாம் அர்த்தமற்றது என்றுதான் தோணுகிறது; ஆனால் என்னையும் அதன் பிடிப்பு இன்னும் விட்டபாடில்லையே!....புரோகிதர் வருகிறார். தினசரி வாழ்க்கையிலே அவர் மஹா பாபிதான் என்பது எனக்கும் தெரியும். ஆனால் அவர் இன்று ஒரு நாகரிகத்தின் சின்னமாக, அதன் இன்றைய அலையாக வருகிறார்.

அவர் வாய் மந்திரத்தை முணுமுணுக்கிறது —
தப்புத்தப்பாகத்தான். நானும் அவருடன்
மந்திரத்தைச் சொல்லிவருவேன் என்று
அவர் எதிர்பார்க்கவில்லை. காலம் கலிகாலம்
என்றும், வருஷம் 1941 என்றும், அவருக்குத்
தெரியும். அவர் எதிர்பார்ப்பது வெற்றிலை
பாக்குடன் தக்ஷிணைதான் .... அவர் சொல்
லும் மந்திரங்கள் எல்லாம் என் காதில் வந்து
மோதுகின்றன. என்னையும் அறியாமலே அவர்
சொல்லும் மந்திரங்களில் பல, நான் ஹிந்துவா
கப் பிறந்திருக்கும் ஒரு தோஷத்தினால், எனக்கு
அர்த்தமாகின்றன ; அதன் அர்த்த விசேஷங்
கள் என் மனதைக்கவருகின்றன .... வேறு
ஏதோ ஞாபகமாக நான் அவர் சொல்லுகிற
படியெல்லாம் செய்து விட்டு, அவர் தரும்
பூணூலை மாட்டிக்கொள்ளுகிறேன் ; தக்ஷிணை
யைத் தந்துவிட்டு எழுந்து விடுகிறேன். ....
அடுத்த ' ஹுடம் ' விருந்து. அது என்றுமுள்ள
ஒரு உண்மை. பழைய நாகரிகத்தின்படி ஏற்பா
டானதுதான் என்றாலும் அது இன்னும் ரஸிக்
கத்தான் ரஸிக்கிறது .... அதுவும் ரொம்பப்
பழைய நாகரிகம்தான் .... கொள்கைகளைப்
பற்றி நாம் எப்படி வேணுமானாலும் நம் மனதை
மாற்றிக்கொள்ளலாம். அரசியல் கட்சி ஒன்றி
லிருந்து இன்னொன்றுக்கு தினம் நாலுதரம்

தாண்டிப் பார்த்துவிடலாம். கடவுள் உண்டா இல்லையா, சோஷலிஸம் அவசியமா இல்லையா, ஆத்மா முக்கியமா உடல்தான் அவசியமா, லக்ஷியம் பெரிசா ரஸமான வாழ்வு வாழ்வதுதான் பெரிசா, என்பதுபோன்ற எவ்வளவோ முக்யமான விஷயங்களையும்பற்றி அதிகமாகப் பட்டுக்கொள்ளாமல் நாம் விவாதித்து விதம் விதமாக முடிவுகள் கட்டி மகிழலாம்.........ஆனல் இந்த உணவு விஷயத்தில் மட்டும் அதெல்லாம் ஒன்றும் சரிப்படாது. ஒரே ஒரு தெய்வந்தான் இங்கு ஆட்சி செலுத்துகிறது .... தஞ்சாவூர்க்காரனுகிய எனக்கு என் வீட்டு மோர்க்குழம்பும் பொரிச்ச குழம்பும் ரஸிப்பதுபோல வேறு எதுவும் ரஸிப்பதில்லை; ரஸிக்காது என்பது நிச்சயம்....

விருந்துச் சாப்பாடானதால் சற்று நேரங் கழித்துத்தான் கிடைக்கும்........சாப்பாடு முடியும்போது மணி ஒன்றாகிவிடுகிறது. நேரங் கழித்து வயிறார உண்டகளைப்பு. பாயை எடுத்து விரித்துவிட்டு, கையில் தாகுர் கவிதைத்திரட்டு ஒன்றுடன், பாயில் சாய்கிறேன். படிப்பதாக ஒன்றும் உத்தேசமில்லை; அதுவும் கவிதை படிக்க அது தக்க சமயமல்ல. இருந்தாலும் தாகுரைப்பற்றி ஒரு புஸ்தகம் எழுதுவதில்

இப்போது ஈடுபட்டிருப்பதால் சில நாளாக எப்போதும் தாகுர் எழுதியதோ, தாகுரைப் பற்றி எழுதப்பட்டிருப்பதோ ஏதாவது ஒன்று என்னுடன் இருக்கும். கவி தாகுர் இந்த எண்பது வருஷங்களில் கண்டிருக்கும் கனவுகள் பலவற்றை நானே இப்போது மறுபடியுங்கண்டு அநுபவிக்க முயன்றுகொண்டிருக்கிறேன்........எனக்கு வங்காளி பாஷை தெரியாது. ஆங்கிலத்தில் தாகுருடையது என்று வெளிவந்திருப்பவை எல்லாவற்றையும் படித்துப் படித்துப் பார்த்திருக்கிறேன்.... கவியே செய்திருக்கும் மொழிபெயர்ப்புக்களில் சில எனக்கு அர்த்தமே ஆகவில்லை; வேறு சில கவிதைகளைப் படிக்கும்போது உள்ளம் நெகிழ்கிறது: என்னையும் அறியாமலே உள்ளத்திலே ஒரு இசை பிறந்துவிடுகிறது.

இதுவரையில் இல்லாததோர் உத்ஸாகத்துடன் முதல் தடவையாக நான் அவருடைய வாழ்க்கைச் சம்பவங்களை அறிந்துகொண்டு அப்படியாவது அவர் எழுத்தில் அர்த்தமாகாததெல்லாம் அர்த்தமாகாதா என்று பார்த்துக் கொண்டிருக்கிறேன். கே. எஸ். ராமஸ்வாமிசாஸ்திரி, எர்னஸ்ட் ரைஸ், எஸ். ராதாகிருஷ்ணன், எட்வர்ட் தாம்ப்ஸன் இவர்களெல்லோரும் தாகுரைப்

பற்றிப் புஸ்தகங்கள் எழுதியிருக்கிறார்கள். 1931-ல் கவியின் எழுபதாம் வயதில் அவருக்கு அளிக்கப்பட்ட 'பொன்மலர்' புஸ்தகத்திலே பல ரஸமான விஷயங்கள் இருக்கின்றன. தாகூரே எழுதியிருக்கும் பழைய ஞாபகங்களும், வங்காளி வாழ்க்கைச் சித்திரங்களும், பல கடிதத்திரட்டுகளும், இன்னும் புஸ்தகமாக வெளிவராத கட்டுரைகளும் இருக்கின்றன. ரைஸ், ரதன்ஸ்டீன் முதலிய பல பெரியவர்கள் தாங்கள் தாகூரைச் சந்தித்ததைப்பற்றி ரஸமான குறிப்புகள் எழுதிவைத்திருக்கிறார்கள். மாடர்ன் ரிவ்யூ, இண்டியன் ரிவ்யூ, விசுவ பாரதி போன்ற பத்திரிகைகளும் இருக்கவே இருக்கின்றன. இந்தியாவுக்கு யாத்திரீகர்களாக வந்துபோகும் பலர் தாகூரையும் விசுவபாரதியையும்பற்றிச் சில சமயம் ரஸமாக எழுதி இருக்கிறார்கள். புஸ்தகாலயத்தில் என் மேஜை முன் இரண்டொரு நாளாக புஸ்தகங்களும், பத்திரிகை இதழ்களும் மலைபோல வந்து குவிந்து கொண்டிருக்கின்றன. புஸ்தகாலய மேலதிகாரியும், அவருக்கென்றே கிடைத்திருக்கும் குமாஸ்தாக்களும் என்னிடம் கோபித்துக் கொள்ளுகிறார்கள். "அலமாறியில் ஒரு புஸ்தகம் கூடப் பாக்கிவைக்கவில்லையே?" என்கிறார்கள். அவர்களுக்கு வேலைவைக்கவேணுமென்ற

ஒரே காரணத்துக்காகத்தான் நான் அவ்வளவு புஸ்தகங்களையும் புரட்டிப் போட்டிருக்கிறேன் என்று அவர்கள் எண்ணம்போலும்!........ அதெல்லாவற்றையும் படித்துவிட்டேன். புதுசாக வெளிவந்திருக்கும் சில புஸ்தகங்களைப் படிக்க ஆவல் இருக்கிறது. புஸ்தகம் கிடைக்க வில்லை........ஆனால் ... கவியைப்பற்றிப் பிறர் எழுதியிருப்பதை எல்லாம் வாசித்து என்ன பிரயோசனம்? கவிக்கும் வாசகனுக்கும் இடையே எவ்வளவு பேதாவியானாலும் விமர்சகன் ஒரு திரையாகத்தானே விழுகிறான் ?....

கவியின் எழுத்தைத் தவிர நமக்குக் கவியின் உள்ளத்தையும், உண்மையையும் தெளிவாக எடுத்துக் காட்டக்கூடியது வேறு என்ன இருக்கிறது?........கவி தாகுரின் எழுத்துக்களைத் திரும்பத் திரும்ப வாசிக்கிறேன். கவியை அறிய வேறு வழி இருப்பதாகத் தெரியவில்லை........ திரும்பத்திரும்ப அவர் எழுதியிருப்பதை யெல்லாம் வாசிக்கிறேன்.வங்காளியில் தாகுர் எழுதியிருப்பதில் பாதிகூட ஆங்கிலத்தில் வரவில்லையாம்....தமிழில் வந்திருப்பதோ வெகு சொல்பம்...எனக்கு வங்காளி பாஷை தெரியாது. வங்காளியிலே அவர் சாஹித்திய கர்த்தா....அவர் கவிதையை ஒரு சமயம் அறிந்துகொண்டாலும்

சங்கீதத்தை அறியமுடியுமா ?....திரும்பத் திரும்பத் திரும்ப என்னல் வாசிக்க முடிந்ததையெல்லாம் வாசிக்கிறேன்........கவி கண்ட கனவு என் அகத்திலே லேசாக உருவகமாக ஆரம்பித்திருப்பதுபோலத்தான் தோணுகிறது...........

இந்தச் சமயம் நான் கவி தாகுரைப்பற்றிப் புஸ்தகம் எழுத முனைந்திருப்பதுபற்றி நண்பர் ஒருவர் என்னைக் கேலி செய்கிறார். இப்போது தாகுருக்கு உடம்பு சரியாயில்லை. தளர்ந்த வயதில் ஆபரேஷன் செய்துகொண்டு கிடக்கிறார். ஒரு வாரமாக தினசரித் தாள்களில் அவருடைய உடல் நிலையைப்பற்றிக் கவலைக்கிடமான செய்திகள் வந்துகொண்டிருக்கின்றன. நண்பர் சொல்லுகிறார்: "இரண்டு மூன்று வருஷங்களுக்கு முன் ரவீந்திரநாத தாகுர் ஆச்சுப் போச்சு என்று கிடந்தாரே, ஞாபகம் இருக்கிறதா ? .... அப்பொழுதே நமது தினசரி ஒன்றின் பிரபல இலக்கிய விமர்சகர் தாகுரைப்பற்றி சாவுக்கட்டுரை எழுதித் தயாராக வைத்துவிட்டார். அந்தத் தடவை தாகுர் அவரை ஏமாற்றிவிட்டார். .... இப்பொழுது நீயும் புஸ்தகம் எழுத ஆரம்பித்துவிட்டாய்!...."
.... இந்தக் கேலியை எண்ணிச் சிரிப்பதா, அழுவதா என்றுதான் எனக்குத் தெரியவில்லை.....

இதற்குப் புறம்பான விஷயம் ஒன்றும் ஞாபகம் வருகிறது. பதினாறு பதினேழு வருஷங்களுக்கு முன் நடந்த ஒரு சம்பவம் .... நான் அப்போதுதான் ஹைஸ்கூலில் எட்டிப் பார்த்திருந்தேன். என் உறவினர் ஒருவருடன் ஒரு பெரியமனிதர் வீட்டுக்குப் போயிருந்தேன். பெரியமனிதர் ; வக்கீல்தான் .... (வக்கீல்களைத் தவிர நம்மிடையே இன்று பெரிய மனிதர்கள் யார் ? நமது இன்றைய நாகரிகமும் பண்பும் வக்கீல்களுடையவை. அவர்கள்தானே இன்று எதிலும் தலைமை வகித்து எதையும் நடத்தி வருபவர்கள் !.... இது எதனுடைய சின்னம், இதன் அந்தரார்த்தம் என்ன என்று அலச இப்போது எனக்கு மனமுமில்லை ; நேரமுமில்லை ....) அந்த வக்கீலுக்கு எதிரே மேஜை மேல் கிடந்த ஒரு புஸ்தகத்தில்தான் நான் என் ஆயுளில் முதல் முதலாக ரவீந்திர நாத தாகுரின் பெயரைப் பார்த்தேன். .... அந்தப் பெரிய மனிதர் வீட்டுக்கு நான் என் உறவினருடன் பத்து நாளுக்கொரு முறையாக இரண்டு மூன்று தரம் போகவேண்டியிருந்தது. ஒவ்வொரு தடவையும் அவர் மேஜைமேல், அதே இடத்தில் அடையாளத்துடன் தாகுரின் புஸ்தகம் கிடந்தது. .... அதை நான் கவனித்து வைத்துக்கொண்டேனே தவிர அதைப்பற்றி

எவ்வித முடிவும் கட்ட எனக்கு அப்போது தெரியவில்லை .... இன்று யோசித்துப் பார்க்கும் போது அதன் அர்த்தம் எனக்கு நன்ருகத் தெரிகிறது.....தெரிகிறது!

அந்த நாளில் 'கலையின் தூண்கள்' என்று சொல்லிக்கொண்ட பெரிய மனிதர்களுக் கிடையே தாகூர் என்ற பெயருக்கு ஒரு 'மவுசு' இருந்தது .... தாகுரை வாசிக்க வேணுமென்ற அவசியம் இல்லை. ஆனல் தாகுர் புஸ்தகம் இல்லாத மேஜை பெரிய மனிதனின் மேஜை யாகாது; தாகுர் புஸ்தகம் இல்லாத வீடே பாழ் .... இது பதினேந்து வருஷங்களுக்கு முன். முன்னேக்கிப்போது இந்தப் பெரிய மனிதர் களின் அறிவு விசாலித்துவிட்டது. இப்போது தாகுர் உண்மையிலேயே ஒரு கவிதான என் பதைப்பற்றி - இன்னமும் படிக்காமலேதான் - அவர்கள் விவாதிக்கத் தயாராயிருக்கின்றனர். அவர்கள் முகத்திலே தாகுர் என்ற பெயரைக் கேட்கும்போதே ஒரு அலக்ஷியப் புன்னகை பூக்கிறது .... இந்த இரண்டும் 'மவுசி'ன் திருவிளையாடல்தான்; வேறு ஒன்றுமில்லை; கவியின் தரத்தை எப்படியும் பாதிப்பவை யல்ல............

பெரிய மனிதர்களின் தயவில், பண்டிதர் களின் நிழலில், கவிகளும் மேதைகளும் என்

றும் ஜீவித்திருக்க முடியாது. கவியென்றால் நாலு வருஷத்து மவுசு அலையிலே மிதப்பவன் அல்ல........அவன் என்றும் ஜீவித்திருப்பவன்........எல்லோருக்கும் உயிர் அளிப்பவன். அவன் அமரன்; அழியாதவன்........பிரும்மா என்று ஒரு இந்தியக் கற்பனை எழுந்தது கவியைப் பற்றித்தான் இருக்கவேணும்........நாம் ஹோமர், துங், காளிதாஸன், கம்பன், டாண்டே, ஷேக்ஸ்பியர் இவர்களின் காலத்திலே பிறந்தோமில்லை. ஆனால் தாகூரின் காலத்திலே பிறந்தோம்; அவரைக் கண்ணாரக்காணும் பாக்கியம் பெற்றோம்........மஹாகவியெனும் பிரும்ம அவதாரத்தின் கடைசி மனுஷரூபம் ரவீந்த்ரநாத தாகூருடையது........அவர் கவிதையைப் படிக்கப்படிக்க இந்த எண்ணம் சிறிது சிறிதாக என் மனதில் ஊர்ஜிதமாகிக் கொண்டு வருகிறது. காலதேச வர்த்தமானங்களைக்கடந்தது அவர் கவிதை....அவர் தேவன்; அமரன்........

இவ்வளவு நாழி என் சிந்தனைகளில் குறுக்கிடாமல் மௌனமாக இருந்த ரேடியோவை யாரோ திருப்பி விட்டார்கள். செய்திகள் அறிக்கை காதில் பளீர் என்று வந்து அறைகிறது. ஆழ்ந்த சிந்தனையிலிருந்த என் காதி

லாய் விழுகிறது அந்த அறிக்கையின் முதல் வாக்கியம். ஆனால் அது என் மனதில் உரைத்து அர்த்தமாக இரண்டு நிமிஷம் பிடிக்கிறது........ "இன்று பனிரண்டேகால் மணிக்குக் கல்கத்தாவில் கவி தாகுர் இறந்து விட்டார்........"

இறந்துவிட்டார்!....இறந்து விட்டார்!.... திடுக்கிட்டு எழுந்து பாயில் உட்காருகிறேன். சாதாரணமாக மனித உணர்ச்சிகளைக் காட்டாமல் அடக்கிக் கட்டி வைத்துவிட வேணுமென்ற கொள்கைகளைப் படைத்தவன் நான். 'ஸெண்டிமெண்டல்' என்று சில உண்மைச் சந்தர்ப்பங்களையும், மேதைகளின் பல கற்பனைகளையும் ஒதுக்கிவிட முயலுபவன் நான்........ ஆனால் இப்போது என்னையும் மீறியதோர் உணர்ச்சி தோன்றுகிறது .... அது தாகுரைப் பற்றிய என்னுடைய பல நாளைய எண்ணச் சேர்க்கைகளின் பலன் என்று நினைக்கிறேன்.

ஐந்து நிமிஷச் செய்தி அறிக்கையிலே நாலு நிமிஷங்களுக்குமேல் ஒரு கவியைப் பற்றிப் பேசிவிட்டார்கள்! என்ன ஆச்சரியம்!.... இது 1941!........மேற்கே ராக்ஷஸப்போர்........ கிழக்கே யுத்த மேகப்படலங்கள்........நடுவில் உள்நாட்டு சிம்மங்களின் கர்ஜனைகள் ....

இவைகளெல்லாம் ஒரு கவியின் சாவு நிழலிலே கொஞ்சம் மங்கி மறைந்துவிட்டன!........ இன்று ஒரு நாள்தான்; சில நிமிஷங்கள்தான்........ நாளைக்கு அந்த ஆர்ப்பாட்டம் மறுபடியும் தொடங்கிவிடும்; கவலையே வேண்டாம்!......

மேல் துண்டை உதறிப் போட்டுக்கொண்டு, எழுந்து, தனிமை தாளாமல், ஒரு நண்பரைத் தேடிக்கொண்டு கிளம்புகிறேன். இந்த விஷயத்தை யாரிடமாவது சொல்லி ஆறுதல் பெற வேணுமென்று மனதிலே ஒரு தாகம் எடுக்கிறது. நல்ல வெயில்; மண்ரோடு; என் காலில் செருப்பில்லை, கையில் குடையில்லை. நண்பரின் வீடு ஒரு பர்லாங்கு தூரத்தில் இருக்கிறது. நான் வேகமாகவே நடக்கிறேன். கால் சுட்டது, மேலே வெயில் காய்ந்தது என்பது அல்ல என் அவசரத்துக்குக் காரணம்; மனதிலே எழுந்த தாகத்தைச் சமனம் செய்து கொள்ள அவசரம் எனக்கு........அந்த நண்பர் என்னையும்விட அதிகமாகத் தாகுரின் எழுத்திலே ஈடுபட்டவர்: ஆர்வமுள்ளவர். அவர் திண்ணையில் தன் சர்க்காவைச் சுற்றிக்கொண்டு உட்கார்ந்திருக்கிறார். அவசர அவசரமாக விஷயத்தைச் சொல்லிவிட்டால் "பைத்தியக்காரன்! இதற்காகவா இந்த வெயிலில் வந்தான்?"

என்று அவர் எண்ணிவிடுவாரோ என்று எனக்குப் பயம். சாவதானமாக வேறு எதையெல்லாமோ பற்றி ஏதேதோ பேசுகிறேன்........ "இந்த வெயிலிலே ?" என்கிறார் நண்பர்........ "ஆமாம்........கிருஷ்ணமூர்த்தியிடம் கொஞ்சம் வேலை இருக்கிறது" என்கிறேன் நான்........ நான் சொன்ன இந்த இரண்டாவது நண்பர் இன்னும் நாலு வீடு தாண்டி அந்தண்டை இருக்கிறார். அவரிடம் எனக்கு ஒரு வேலையுமில்லை. பைத்தியக்காரன் என்ற பட்டத்தைத் தப்ப இது அச்சமயம் தோன்றிய ஒரு கற்பனை .... அலக்ஷியமாகக் கடைசியில் ஏதோ "திருட்டுப் போயிற்று, அசலூரில்" என்று சொல்லுவது போல, தாகூர் இறந்துவிட்ட விஷயத்தை நண்பரிடம் சொல்லுகிறேன் ....நண்பர் சர்க்கா சுற்றுவதை நிறுத்தவில்லை. நான் சொன்னது அவர் காதில் விழுந்ததா என்பதே எனக்குச் சந்தேகமாகி விடுகிறது. .... ஆனால் நண்பர் திரித்துக்கொண்டிருந்த நூல்மட்டும் இரண்டுதரம் பட்டுப் பட்டென்று அறுந்தது. அவர் வெகுநாளாக சர்க்கா சுற்றிப் பழகியவர்........அவர் மனதில் என்ன இருந்ததோ ? — என்னால் அறிந்து கொள்ள முடியவில்லை. என் மனதில் இருந்ததையும் அவர் அறியமாட்டார்........இரண்டு

நிமிஷங் கழித்து "வயது எண்பத்தி நாலாகி விட்டது; இல்லையா?" என்றார் நண்பர். "இல்லை; சரியாக எண்பது" என்கிறேன்....

மற்ற நண்பரையும் தேடிக்கொண்டுபோய் ஏதேதோ பேசிவிட்டுக் கடைசியில் தாகூர் இறந்துவிட்ட செய்தியையும் கூறுகிறேன். "அடாடா!.......இன்றே உங்கள் புஸ்தகம் வெளிவந்திருந்தால் நன்றாயிருந்திருக்குமே!" என்கிறார் அவர்...அட தெய்வமே!............

தாகுரின் கவிதையை ஒரு புது திருஷ்டியுடன் படிப்பதிலே பாக்கிப் போது போய் விடுகிறது.......மாலையில் பல நண்பர்கள் தாகுரின் மரணத்தைப்பற்றிப் பேசிக்கொண்டிருக்கிறார்கள். நான் அவர்களுடைய சம்பாஷணையில் கலந்துகொள்ளாமல் எட்டி நின்று அவர்கள் பேசுவதைக் கவனிக்கிறேன். ஜப்பான் யுத்தத்திற்குத் தயாராகிக்கொண்டிருக்கிறது! ரஷியா இன்னுமோர் வெற்றிபெற்று விட்டது! ....இதுபோன்ற 'கடைசிச் செய்திகளில்' ஒன்றுதான் அவர்களில் அநேகருக்கு, தாகுரின் மரணமும்........இரவு கல்கத்தா, பம்பாய், மதராஸ் முதலிய இடங்களிலிருந்து ஒலி பரப்பப்படும் பிரசங்கங்களையெல்லாம் கேட்டுக்கொண்டு உட்கார்ந்திருக்கிறேன்.......நாளைக்கு

இன்னும் பெரிய மனிதர்கள் பலர் பேசி விடுவார்கள். ....நாடெங்கும் பிரசங்கிகள், கவிதையிலே மற்ற நாட்களில் நம்பிக்கையே வைக்காத பிரசங்கிகள் பலர், கவியைப்பற்றிப் பேசிவிடுவார்கள்!........

மரணத்திலே அவர் எப்படி இருப்பார் என்று நான் கற்பனை செய்து பார்க்க முயலுகிறேன். நான் இரண்டு தரம் கவியை நேரில் பார்த்திருக்கிறேன்; இரண்டு நாளும் என்றும் மறக்கமுடியாத நாட்கள் — 1931-ல் அவரும் அவர் கோஷ்டியாரும் நடித்த நீத உத்ஸவ நாடகத்தின்போது ஒருதரம்........1934ல் அவர் செய்த ஒரு பிரசங்கத்தைக் கேட்கப் போய் அவரைக் கண்ணாரக் கண்டிருக்கிறேன்.......... அந்த உடல் இவ்வளவு நாழி வெந்து ஒரு பிடி சாம்பலாயிருக்கும்...............

"இந்தப் பிரபஞ்சத்தைக் கண்ணாரக் காணும் சக்தியை, ஒருநாள் நான் இழந்து விடுவேன்......என் உயிர் மௌனமாக உடலைவிட்டுப் பிரிந்துபோய் விடும்......என் கண்கள் மூடிவிடும்......

எனினும் இரவின் நட்சத்திரங்கள் முன்னைப்போலவே மின்னும்; உதயம் வழக்கம்போலவே அலங்காரமாக அடியெடுத்து வைத்து வருவாள்; மனித ஜாதியின் துக்கங்களையும் சுகங்களையும் பின்னிப் பின்னிக் காலக் கடலின் அலைகள் வழக்கம்போல மோதும்,..."

என்று கவி இசைத்திருப்பது என் ஞாபகத்துக்கு வருகிறது .... நான் நிலவைப் பார்த்துக்கொண்டு, நிச்சலனமாக, மௌனமாக உட்கார்ந்திருக்கிறேன். .... இந்த நிலவுக்கும், இந்தப் பிரபஞ்சத்துக்குமே ஒரு புது அர்த்தம், ஒரு புது சோபை உண்டாகிவிட்டது, தாகூர் என்று ஒரு கவி இருந்ததனால், என்று எனக்குத் தோன்றுகிறது. .... " இந்தப் பிரபஞ்சத்துக்கு ஒரு பரிபூரணமான, திவ்யமான காதலன் உண்டு; அவன்தான் மஹா கவி " என்று அமெரிக்க கவி சொன்னதின் முழு அர்த்தமும் எனக்கு இப்பொழுதுதான் தெரிகிறது. .... இந்தப் பிரும்ம சிருஷ்டிக்கே கவி தாகூர் ஒரு தனி அர்த்தத்தைத் தந்து விட்டார்.... !

வாழ்க்கை

1

கவி ரவீந்திரநாத தாகுர் கல்கத்தாவில் 1861-ல் பிறந்தார்.

பிறப்பிலே அவர் அதிர்ஷ்டசாலிதான். வங்காளத்தில் தாகுருடைய குடும்பத்தைவிடச் சிறப்பும், செல்வாக்கும் உள்ள குடும்பம் வேறு கிடையாது. தாகுர் என்றாலே யஜமான் என்று தான் அர்த்தமாம் .... கவியின் பாட்டனார் துவாரகநாத தாகுர் தன் உதாரத்துவத்தினா லும், பெருவாழ்வினாலும், ஐசுவரியத்தினாலும் 'ராஜா' என்று பட்டப்பெயர் பெற்றவர். இந்தியாவிலே பத்தொன்பதாம் நூற்றாண்டை ராம் மோஹனராயின் யுகம் என்று சொல்லுவது பொருந்தும்; ராஜா துவாரகநாத தாகுர் இந்த ராம்மோஹனராயின் ஆப்த நண்பர்; முக்ய சிஷ்யர். ராம்மோஹனராய் இறந்த பின் அவர் ஸ்தாபித்த பிரும்ம சமாஜத்தின் பொறுப்பை ஏற்று வெகு திறமையுடன் அதை நிர்வகித்து நடத்தினார் துவாரகநாத தாகுர் ....

அவருடைய குமாரர் தேவேந்திரநாத தாகூர் தான் கவியின் தந்தை. ராம் மோஹனராயும், துவாரகநாத தாகூரும் சேர்ந்து தேவேந்திர நாதரின் மனதைச் சமைத்தனர்; அது ஒரு மஹரிஷியின் மனதாகச் சமைந்ததில் ஆச்சரியம் ஒன்றுமில்லை. ராஜ குமாரனாக வாழ்ந்திருக்கக்கூடிய தேவேந்திரநாதர் ரிஷியாகவாழ்வதே மேலானது, சிறந்தது, தக்கது என்று கண்டு கொண்டார். அவருடைய வாழ்நாட்களெல்லாம் இகலோகப் பலன்களை ஒதுக்கி, பரம்பொருளை நாடித் தவங் கிடப்பதிலேயே கழிந்தன. "பட்டும் படாமலும் இருப்பான்" என்று பிரும்மத்தைப்பற்றி உபநிஷத்தில் சொல்லியிருப்பது அவர் விஷயத்தில் மெய்யாகவே இருந்தது. அவருடைய சுயசரிதத்தைப் படிக்கும் யாரும் அவர் உண்மையிலேயே மஹரிஷிதான், பெயருக்கு மட்டும் மஹரிஷி அல்ல என்பதைச் சந்தேகமின்றி ஒப்புக்கொள்ளுவார்கள். சமய, தத்வ, பிரும்ம விசாரமே அவருடைய வாழ்க்கையின் லக்ஷியமாக இருந்தது. போல்பூரில் சாந்திநிகேதனம் (அமைதியின் கோயில்) என்று ஓர் ஆசிரமத்தை அமைத்துக்கொண்டு அவர் தன் வாழ்நாட்களில் பெரும்பகுதியை அமைதியாக அங்கு ஆத்ம விசாரம் செய்வதிலேயே செலவிட்டார். பிரும்ம சமாஜத்தின் மஹோன்

னதமான தசையில் அதன் தலைவராக இருந்த வரும் அவர்தான்........

ரவீந்திரநாதர் பிறந்த காலம் இந்தியாவிலேயே மறுமலர்ச்சிக் காலம். இந்த மறுமலர்ச்சியின் முதல் மொட்டு வங்காளந்தான். அரசியல், சமூகம், சமயம், இலக்கியம் எல்லாவற்றிலுமே தலைமை வகித்தது வங்காளம். முக்யமாக இலக்கியத்தைப்பற்றி இது எவ்வளவு உண்மை என்பது இப்போது தமிழர்களுக்குக்கூடத் தெரிந்துவிட்டது. வங்காளி மில்டனும், வங்காளி பைரனும் அந்த நாட்களில் புதிய வங்காளிக் கவிதையை சிருஷ்டித்துக் கொண்டிருந்தனர். ராம்மோஹனராயால் உயிர் கொடுககப்பட்டுப் பிறந்த வங்காளி வசனத்தை அக்ஷய குமாரதத்தரும், ஈச்வர சந்திர வித்யா ஸாகரும் வளப்படுத்திக் கொண்டிருந்தனர். பழைய வைஷ்ணவ, சாக்த கீதங்கள் நாடெங்கும் ஒலித்துக்கொண்டிருந்தன. நாடக(ஜாத்ர) கோஷ்டிகள் புராணக் கதைகளை நாடகங்களாகக் காட்டிக்கொண்டு ஊர் ஊராகத் திரிந்து, நாடக இலக்கியத்துக்கு பொதுமக்களின் உள்ளத்திலே — ஒரு மஹோன்னதமான ஸ்தானத்தை சிருஷ்டித்துக்கொண்டிருந்தனர். வங்காளி ஸ்காட்டும் தோன்றினர். தேசீய

உணர்ச்சி இலக்கியத்திலே புகுந்து பரவிற்று. சமூகத்திலே பிரும்ம சமாஜிகள், தேவேந்திர நாத தாகுர், கேசவ சந்திர சேனர்........மதத்திலே ராமகிருஷ்ண பரமஹம்சர்........இப்படிச் சொல்லிக்கொண்டே போனல் இந்தப் பட்டியலுக்கு முடிவே இராது........வங்காளத்திலே இந்த மறுமலர்ச்சியின் மணம் தாகுரின் குடும்பத்தில் விசேஷமாக வீசிற்று. பல துறைகளில் முன்னணியில் நின்றவர்கள் தாகுர் குடும்பத்தவர்தான். ரவீந்திரரின் சகோதரர்களும், சகோதரிகளும், சகோதரர்களின் மனைவிகளும் கூட வங்க இலக்கிய மறுபிறப்பிலே சிரேஷ்டமான பங்கெடுத்துக் கொண்டார்கள் ....உண்மையிலேயே கவி ரவீந்திர நாத தாகுர் பிறப்பிலே பாக்கியசாலிதான்.

ரவீந்திரருடன் கூடப்பிறந்தவர்கள் ஒன்பது பேர் — ஆறு சகோதரர்களும், மூன்று சகோதரிகளும். குடும்பத்திலே கடைசிக் குழந்தை ஆதலால் அவருடைய இளமைப் பருவம் தனிமையிலேயே கழிந்தது. அவருடைய குழந்தைப் பருவத்தை ரொம்ப இன்பகரமானதாகவோ, துன்பகரமானதாகவோ சொல்ல முடியாது. ஜன்னலுக்கெதிரே உட்கார்ந்துகொண்டு வெளியே உலகத்தில் என்ன

நடக்கும் என்று தான் தன் குழந்தை உள்ளத்தைக் கொண்டு கற்பனை செய்து பார்க்க முயன்றதைப்பற்றி கவியே ஒருதரம் ரஸமாகச் சொல்லியிருக்கிறார். தன்னுடைய அந்தக்காலத்திய இன்ப துன்பங்களை ஞாபகப்படுத்திப் பார்த்துக்கொண்டு அவர் தன்னுடைய ஐம்பதாவது வயதில் ஜீவனஸ்மிருதியில் அழகாக எழுதியிருக்கிறார். அறியாப்பருவத்தில் பள்ளிக்கூடம் போகவேணுமென்று பிடிவாதம் பிடித்ததையும், நான்கு நாள் போய்வந்த பிறகு போகமாட்டேனென்று பிடிவாதம் பிடித்ததையும் பற்றி அவர் விளையாட்டாக, ஆனால் நமது கல்விமுறையைப்பற்றிப் பலவிதமான அர்த்தங்கள் த்வனிக்கும்படியாக, எழுதியிருக்கிறார். பள்ளிக்கூடப் படிப்பு அவருக்கு ஒத்துவரவில்லை. வீட்டில் உபாத்தியாயர் வைத்துப் பாடம் கற்பிக்கச்செய்த முயற்சிகளும் பிரயோசனப்படவில்லை. தான் ஆங்கிலம் படித்தது பற்றி, இந்தியாவின் விதியைநொந்து தோன்றும் சோகத்துடன், ஆனால் பரிகாசமாக, எழுதியிருக்கிறார். அவருக்குப் படிப்பு வராததுபற்றி அவருடைய தகப்பனார் அதிகமாகக் கவலைப்பட்டதாகத் தெரியவில்லை. பிள்ளைக்குக் கல்வி புகட்ட அவர் அசாதாரணமான முயற்சிகள் ஒன்றும் செய்யவில்லை —

உண்மையிலேயே அவர் மஹாரிஷிதான். கதை கேட்பதும், பாட்டுப் பாடுவதும், மற்ற நேரங்களில் சிந்தனையில் ஆழ்ந்து வானில் மிதந்து வரும் மேகங்களைப் பார்த்துக்கொண்டு உட்கார்ந்திருப்பதுந்தான் குழந்தை ரவீந்திரருக்குப் பிடித்தமான காரியங்கள். கவி ரவீந்திரருக்கும் இவைதான் பிடித்தமான காரியங்களாய் இருந்தன என்பதில் சந்தேகமென்ன?

பதிமூன்றாவது வயதில் தாயாரை இழந்த பின் ரவீந்திரரின் தனிமை இன்னும் அதிகரித்தது. அதன் பயன்தானோ என்னவோ, இயற்கை அன்னையிடம் பையனின் நெருக்கமும் நேசமும் அதிகரித்தன........"வானத்திலே ஒவ்வொன்றாக மிதந்து செல்லும் மேகங்களைக் கண்டு நான் எல்லையற்ற ஆனந்தம் கொண்டேன்........பெயரிட முடியாததோர் நட்பு, ஓர் அன்பு, அன்னையின் அன்பைப் போன்றது ஒன்று, என்னைச் சூழ்ந்திருப்பதை நான் உணர்ந்தேன்........இயற்கைத் தாய் விளையாட்டுக்கொருதரம் என்னை அணுகிச் சிரித்து, கண்ணைச் சிமிட்டி, தன் மூடிய கைகளை என்னிடம் காட்டி 'இதில் என்ன இருக்கிறது சொல்?' என்று கேட்பதுபோல் இருந்தது........

ஒவ்வொரு நாளும் ஒவ்வொரு விஞடியும் எனக்கு ஒரு புதிய அனுபவமாக இருந்தது...."

என்ன சொன்னுலும் இயற்கை மோக மும், அனுபவங்களும் வளர கல்கத்தா நகரிலே வசதி குறைவுதானே? உடம்பு சரியா யில்லாமல் நகருக்கு வெளியே ஒரு சிறிய கிராமத்தில், இயற்கையின் ஸ்பரிசத்துக்கு எட்டும் இடத்தில், சில நாள் தங்கிய ஓர் அனு பவம் அவருக்கு என்றும் மறக்காத அனு பவமாக அமைந்தது. அதனுல் இயற்கைத் தாயிடம் அவருக்கிருந்த அன்பு பெருகிற்று. அந்த அனுபவத்தால் அதுவரையில் புரியாத பாட்டுக்கள்கூட தெளிவு பட்டது போலிருந் தது என்று கவி இதைப்பற்றித் தன் ஜீவன ஸ்மிருதியில் எழுதியிருக்கிறுர்........

உபநயனம் எல்லாம் ஆனபின் மஹரிஷி தேவேந்திரநாத தாகுர் தன் பிள்ளையைத் தன்னுடன் பல இடங்களுக்கு அழைத்துச் சென்றுர். ஜீவனஸ்மிருதியில் இந்தப் பிரயா ணத்தை விவரிக்கும் கட்டம் அந்தப் புஸ்தகத் திலேயே மிகச் சிறந்த அழகிய ஆழ்ந்த கட்டம். தன் தகப்பனரிடம் தனக்கிருந்த அன் பும், அவர் கொள்கைகள் முதலியன தன்னை எப்படிப் பாதித்தன, தன் அறிவு அவருடன்

பழகியதால் எப்படி விசாலித்தது என்றும் தெளிவாக, ஒரு கவிக்கே உரிய பாணியில், எழுதியிருக்கிறார். தந்தையின் ஆசிரமமாகிய சாந்திநிகேதனத்தை ரவீந்திரர் முதல் முதலாகப் பார்த்தது அப்பொழுதுதான்; அது பிற்காலத்தில் கவிக்கும், உலகின் உண்மையான உள்ளத்துக்குமே ஓர் ஆசிரமமாக விளங்க இருந்தது என்று அப்பொழுது தகப்பனுக்கோ, தனயனுக்கோ தெரிந்திராது! போல்பூர், சாஹறப்கஞ்ச், தினபூர், அலகாபாத், அமிருதசரஸ், ஹிமாலயத்தில் டல்ஹௌஸி குன்றுகள் முதலிய இடங்களை தன் தகப்பனுருடன் சென்று தரிசித்தார் ரவீந்திரர். அவசரமற்ற இன்பப் பிரயாணம் அது. கவியாக வளரவிருந்த குழந்தையின் மனம் அன்று முதல் இயற்கைத் தாய்க்கு, மீட்சி அறியாததோர் அடிமையாகிவிட்டது. அதை வெளி உலகிலே செய்த பிரயாணமாகக்கூடச் சொல்ல முடியாது. ஆத்மப் பிரயாணம் அது; கவியின் உள்ளத்திலே இருள் அடர்ந்த மூலை முடுக்குகள் எல்லாம் சீர்பட்டு ஒளிபெற்றன .... இந்தப் பிரயாணத்தால் ரவீந்திரரின் உள்ளம் மலர்ந்து விரிந்தது.........

2

எட்டாவது வயது நிரம்பும் முன்னரே, ரவீந்திரநாதர் கவிதை கட்ட ஆரம்பித்து

விட்டார். யாரோ கொஞ்சம் பெரிய குழந்தை சொன்ன யோசனையைப் பின்பற்றித்தான் அவர் உண்மையிலேயே கவிதை என்று எழுத ஆரம்பித்தார். குழந்தையின் படியாத எழுத்தில் கொட்டை கொட்டையாக எழுதப்பட்டிருந்த அவருடைய முதல் கவிதையை யாரும் அதிக மாகப் பாராட்டவில்லை; ஒரு சிலர் குறைகள் கூடக் கண்டுபிடித்தார்கள். ஆனால் இளங்கவி தன் கவிதையிலே குறையிருந்தது என்று ஒப்புக்கொள்ள மறுத்துவிட்டாராம்!....கவிதை எழுத ஆரம்பித்துவிட்டால் அதற்கு முடி வேது? நோட் புஸ்தகம் ஒன்று வெகு சீக் கிரமே நிரம்பிவிட்டது. கையெழுத்தும் மண் டை மண்டையாக இருந்ததால் இடம் நிறையத் தானே செலவழிந்திருக்கும்!........ அவர் பள்ளிக்கூடத்தில் படித்த சில நாட்களிலேயே அங்கும் கவி என்று அவருடைய பெருமையும் புகழும் பரவிவிட்டது........தன்னுடைய இந்த ஆரம்ப முயற்சிகளை எல்லாம் பற்றி தாகுர் ஜீவனஸ்மிருதியில் கேலியாக எழுதியிருக்கிறார்: "என்னுடைய குழந்தைப் பருவக் கவிதைகளி லும் ஒரு நல்ல அம்சம் இருந்தது என்றே நினைக்கிறேன். அவை எப்படியோ, மறதி யாலோ, என் அஜாக்கிரதையினாலோ சீக் கிரமே அழிந்து மறைந்துவிட்டன!"

பள்ளிக்கூடத்திலோ வீட்டிலோ சரியாக அவர் கல்வி பயிலாவிட்டாலும் இயற்கையின் பல தோற்றங்களுக்கு அடுத்தபடியாக அவருக்குப் புஸ்தகங்களில்தான் பிரேமை இருந்தது. தனக்குப் பிடித்த புஸ்தகங்களைப் படிப்பதில் அவர் ஆரம்ப முதலே ஆர்வம் காட்டினார். அவர் வயதுக்கும் அறிவுக்கும் எட்டாத புஸ்தகங்களைக்கூட அவர் படித்து முடிக்கத் தயங்குவதில்லை. முழுவதும் புரியாதே தவிர, படித்ததிலிருந்து புது விஷயங்கள் எதுவும் கிரஹிக்காமலிருந்ததில்லை என்றும், அப்படி கிரஹிக்க தனக்கு எப்படிச் சக்தி இருந்தது என்றும் அவர் தன்னுடைய ஜீவனஸ்மிருதியிலே எழுதியிருக்கிறார். இப்படி அவர் படித்த புஸ்தகங்கள் பல: மாக்பத், ஹாம்லட், குமார சம்பவம், சாகுந்தலம், பகவத்கீதை முதலியன........ராமாயணமும், பாரதமும், பக்திப் பாடல்களும், இந்தியாவுக்கே உரிய ஐசுவரியம்; அவற்றிற்கு வாரிசாகப் பிறந்த ரவீந்திரர் அவற்றையும் அனுபவிக்கத் தவறிவிடவில்லை. நாட்டுப் பாடல்களிலும், சண்டிதாஸ், வித்யாபதி, அனந்ததாஸ் முதலியவர்களுடைய கீதங்களிலும் அவர் மனம் லயித்து ஆனந்தித்தது........ கல்வி நிபுணர்கள் ரவீந்திரர் இப்படிப் பெற்ற கல்வி, முறைப்படி வந்ததல்ல என்று அபிப்

பிராயப்படலாம். ஆனால் கவிகளைப் பற்றிக் கல்வி நிபுணர்களுக்கு என்ன தெரியும்?

"என் சுபாவமே கவியின் சுபாவம். நான் இயற்கையிலேயே கவியாகப் பிறந்தவன். எனக்கு நினைவு தெரிந்த நாள் முதற்கொண்டே கவிதை எழுதுவதையே லக்ஷியமாகக்கொண்டவன் .... என் வாழ்நாள் முழுவதும் நான் என் கனவுகளைக் கவிதையாகச்சிருஷ்டிக்க முயன்று வந்திருக்கிறேன்" என்று ரவீந்திரர் தன்னுடைய எழுபதாவது வயதிலே சொன்னார். கவிக்குகந்த பயிற்சியும், தேர்ச்சியும் பெற அவருக்குப் போதிய வசதிகளிருந்தன. கல்கத்தாவில் தாகுர்களின் மாளிகையிலே வீசிய காற்றே கலைக்காற்று. "தாகுர் குடும்பம் ஒரு ஆச்சர்யமான குடும்பம் .... எல்லோருமே கலைஞர்கள் .... ஆண் மட்டுமல்ல; பெண்ணும்." இந்த வாக்கியம் இன்றும் உண்மை; ரவீந்திரரின் இளம் பிராயத்திலும் உண்மையாகவே இருந்தது. வங்காளத்தின் பிரபல இலக்கியாசிரியர்களும், பத்திரிகாசிரியர்களும், கலைஞர்களும், தாகுர் குடும்பத்தாருக்கு அறிமுகமானவர்கள்: வேண்டியவர்கள். நாட்டிலே கலை சம்பந்தமாகவோ, சமூக சம்பந்தமாகவோ ஏதாவது இயக்கம் தோன்றினால் அதில் தாகுர் குடும்பத்தார் சம்பந்தப்பட்

டுத்தா னிருப்பார்கள. கவிதையா ? நாடகமா ? வசனமா ? சங்கீதமா ? நாட்டியமா ?.... எதிலும் சிறந்ததின் ஒலியாவது, எதிரொலியாவது தாகுரின் மாளிகையிலே சதா கேட்கும் .... இன்றைய விசுவபாரதியின் விதை அன்றைய தாகுர் மாளிகையில்தான் இருந்திருக்கவேணும்!

ஞானங்குர் (ஞான முளை) என்ற பெயருடன் வெளி வந்த வங்க மாசிகையில் 1875-ல் ரவீந்திரரின் முதல் கவிதை வெளிவந்தது. வனபுல் (காட்டு மலர்) ; 1582 வரிகளில் ஒரு கதை. இதில் ஒரு வரியைக்கூட பிற்காலத்தில் கவி ரவீந்திரர் தன் கவிதைத்திரட்டில் சேர்க்க மறுத்துவிட்டார். இந்தக் கவிதையிலேயும் ரவீந்திரர் காளிதாசனை எப்படிப் படித்து அனுபவித்திருந்தார் என்பது தெரிவதாக தாம்ப்ஸன் என்ற விமர்சகர் எழுதியிருக்கிறார் ....ஒன்றன்பின் ஒன்ருக ரவீந்திரரின் கவிதைகளும் கட்டுரைகளும் ஞானங்குரில் வெளிவந்தன.....இந்தப் பத்திரிகைக்கு அடுத்தபடியாக அவருடைய சகோதரர்களே வெளியிட்ட பாரதி என்ற வங்க மாசிகையில் அவருடைய கவிதைகளும், கட்டுரைகளும் வெளிவர ஆரம்பித்தன........பாரதியில் 1877-ல் வெளியான பானுசிம்ஹ கீதங்களைப்பற்றி ஒரு ரஸமான

குறிப்பை ரவீந்திரர் எழுதியிருக்கிறார். வங்க வைஷ்ணவ கீதங்களைப் படித்துப் படித்து அனுபவித்து அதேபோல எழுத ஆசைப்பட்ட ரவீந்திரர் பானுசிம்ஹன் (பானு = ரவி) என்ற புனைபெயருடன் பழம் பாடல்கள் என்று சொல்லி இந்த கீதங்களை வெளியிட்டார். அவரே சொல்லும் வரையில் உண்மை ஒருவருக்கும் தெரியாது. அவை பழைய கீதங்கள் என்றுதான் எல்லோரும் நம்பியிருந்தார்கள். ஜெர்மனியில் ஒரு சர்வகலாசாலையில் ஒரு வங்காளி இந்த பானுசிம்ஹ கீதங்களின் பழமையையும், பக்தி அனுபவத்தையும் பற்றி பக்கம் பக்கமாக எழுதித் தள்ளி அதற்காக பிஎச். டி. பட்டமும் பெற்றுவிட்டாராம்!

ஒரு நாடகம், நாவல், பல கவிதைக் கதைகள், சிறு சிறு கவிதைகள், எவ்வளவோ வசனக் கட்டுரைகள்.... எல்லாம் பாரதியில் வெளிவந்தன. இளவயதிலேயே அவருடைய சிந்தனை சக்தி முதிர்ந்திருப்பது "நம் நாடும்.... மேல்நாடும்," "நம்பிக்கையும் ஏமாற்றமும்" என்பதுபோன்ற கட்டுரைகளில் தெரிகிறது. அவர் நாகரிகங்களின் வளர்ச்சியையும், ஒற்றுமையையும், வேற்றுமையையும் விசாரித்துத் தெளிவுபடுத்த முயன்றிருக்கிறார் .... ஆங்கில

இலக்கியத்தைப் பற்றியும் பல விமர்சனங்கள் எழுதினர்....இப்படி அவருடைய பதினேழாவது வயது நிரம்புமுன் ஏழாயிரம் வரிகளுக்குமேல் கவிதையும், பல புஸ்தகங்களை நிரப்பப்போதிய வசனக் கட்டுரைகளும் எழுதிவிட்டார்.

பதினேழாம் வயதில் பாரிஸ்டருக்குப் படிக்கும் உத்தேசத்துடன் அவர் இங்கிலாந்து சென்றார். சில காலம் பிரைட்டன் பள்ளிக் கூடத்திலும், பின்னர் லண்டன் சர்வகலா சாலையிலும் சேர்ந்து படித்தார். அவர் பதினைது மாதங்கள்தான் இங்கிலாந்தில் தங்கினர். ஜீவன ஸ்மிருதியில் அவர் இந்தக் காலத்தைப் பற்றி லேசான கசப்புடன், ஆனல் கேலியாகவே, விரிவாக எழுதியிருக்கிறார். இந்த இங்கிலாந்து விஜயத்தினல் அவர் அடைந்த லாபம் மிகவும் சொல்பம். ஆங்கில பாஷையிலும், இலக்கியத்தி லும் அதிகப் பரிச்சயம் ஏற்பட்டது. லத்தீன் பாஷையும் கற்றுக்கொண்டார்.மேல்நாட்டு சங் கீதத்தைக் கற்க முயன்றார் .... லோகேன் பலித் தின் நட்பைப் பெற்றார். அப்போது லோகேன் ரவீந்திரரைவிட நாலுவயது சிறியவர் .... இந்த லோகேன் பலித்தைத் தவிர கவி தாகு ருக்கு வேறு நண்பனே கிடையாது என்று ஒரு விதத்தில்சொல்லலாம் என்று தாம்ப்ஸன் எழுதி

யிருக்கிறார். லோகேன் பலித் ஐ. சி. எஸ். பாஸ் பண்ணி இந்தியா வந்து சேர்ந்தபின் அவர்களுடைய நட்பு அதிகரித்து வளர்ந்தது. லோகேன் பலித்தைப்பற்றி ஜீவனஸ்மிருதியில் ஒரு அத்தியாயம் இருக்கிறது. "லோகேனின் உத்ஸாகமும் ரஸனையும் வேறு யாருக்கும் கிடையாது.... வசனம் கவிதை என்ற, லகானுக்கு அடங்காத குதிரைகள் பூட்டிய என் ரதத்தை சரியான வழியில் செலுத்த எனக்கு வழிகாட்டியாக இருந்தவன் லோகேன். சரஸ்வதியின் காலடியில் காணிக்கையாகக் கிடக்கும் தாமரைகளிலே சிறந்தது இந்த இலக்கிய நட்புக் காணிக்கைதான்; அதுவே அவளுக்கு ரொம்பவும் உகந்ததாக இருக்குமென்று நான் எண்ணுகிறேன்" என்று கவி எழுதியிருக்கிறார்.

இங்கிலாந்திலிருக்கும்போதும் அவருடைய எழுத்து வேகம் சிறிதும் தடைப்படவில்லை. பாரதியில் ஐரோப்பிய யாத்ரீகனின் கடிதங்கள் வெளிவந்தன. "ஏதோ துரதிர்ஷ்டம் பிடித்த விடியில் நான் இந்தக் கடிதங்களை எழுத ஆரம்பித்தேன். அவைகளை இப்பொழுது அழித்துவிட எனக்குச் சக்தி இருந்தால் தேவலை" என்று கவி பின்னர் எழுதியிருக்கிறார்........பக்னஹிருதயம் (உடைந்த ஹிருதயம்)

என்ற நாடகம் பெரும்பகுதியும் இங்கிலாந்தில் தான் எழுதப்பட்டது........இங்கிலாந்திலிருந்து திரும்பியபின் எழுதப்பட்ட வால்மீகி பிரதிபா (வால்மீகியின் மேதை) என்ற சங்கீதநாடகத்தில் அவர் இங்கிலாந்தில் மேல்நாட்டு சங்கீதம் கற்றது பயனளித்தது. இந்த நாடகம் தாகுரின் மாளிகையில்நடிக்கப்பட்டது. அதில் ரவீந்திரரே வால்மீகி வேஷம் தரித்தார்....நடிப்புக்கலையிலும் அவருக்குத் தேர்ச்சி பிறந்தது. "வால்மீகி பிரதிபா, காலமிருகயா என்ற இரண்டு சங்கீத நாடகங்களையும் எழுதும்போது எனக்கு அளவு கடந்த உத்ஸாகம் இருந்தது. அதுபோன்ற உத்ஸாகம் என் வாழ்க்கையிலே வேறு எதை எழுதும்போதும் இருந்ததில்லை" என அவரே எழுதியிருக்கிறார்.... கவிதை என்ற கனவுடன் சங்கீதம் என்ற கனவும் அன்று முதல் ரவீந்திரரின் உள்ளத்திலே ஆட்சி செலுத்த ஆரம்பித்துவிட்டது.

ரவீந்திரரின் இருபதாவது வயது நடந்து கொண்டிருக்கையில் அவரை மறுபடியும் சீமைக்கு அனுப்ப ஏற்பாடு நடந்தது. முன் தடவை கிட்டாத பாரிஸ்டர் பட்டத்தைப் பெற, மறுபடியும் ஒரு முயற்சி செய்யவேணும் ரவீந்திரர் என்று அவர் குடும்பத்தார் எண்ணினர்

கள். ஆனால் கப்பலில் கிளம்பி சென்னைத் துறைமுகம் சேருமுன்னரே உடல் நலம் சரியா யில்லாமையால் அவர் கல்கத்தா திரும்பிவிட் டார். அதைப்பற்றி அவரோ அவருடைய தகப்பனார் மஹரிஷியோ அதிகமாகக் கவலைப் பட்டதாகத் தெரியவில்லை. அதே வருஷம் சைசவசங்கீத் என்ற பெயருடன் அவருடைய இளம் வயதில் எழுதப்பட்ட கவிதைகள் புஸ் தகமாக வெளியிடப்பட்டன.

"கடைசியில்........நான் என் உள்ளத்தி லிருப்பதையே எழுதுகிறேன்...........என் ஆத் மாவே இதில் உருவம் எடுத்துவிட்டது" என்று சொல்லிக்கொண்டே ரவீந்திரர் தன்னுடைய இருபதாவது வயதில் சந்தியா கீதங்கள் என்ற திரட்டிலிருக்கும் கவிதைகளை எழுதினார். வங்க கவிதையிலே இந்தத் திரட்டினால் ரவீந்திரநாத தாகுருக்கு ஒரு நிரந்தரமான அழியாத ஸ்தானம் கிடைத்தது.

3

கவியின் குழந்தைப் பருவத்தின் அனு பவங்களும், சுற்றுப்புறமுந்தான் அவருடைய உள்ளத்தையும், பிற்காலத்திய கவிதையையும் சமைப்பவை...........அவருடைய இருபதாவது வயதிலே ரவீந்திரநாத தாகுர் கவி ஆகிவிட்

டார். இனி அவரது வாழ்க்கையைப்பற்றிச் சொல்ல வேண்டியதெல்லாம் முக்யமானவை. ஆனல் சொல்லி மாளாதவை; சொல்ல முடியாதவை..........புற உலகிலே அவருக்கு நேர்ந்ததெல்லாம் விரிவாகப் பத்திரிகைத் தாள் களில்தான் இடம் பெறவேணும்; அக உலகில் நேர்ந்தது எல்லாவற்றையும் நாம் அவரது கவிதையைப் படித்துப்படித்துத்தான் தெரிந்து கொள்ள வேணும்....

சந்தியா கீதங்களுக்குப் பின் வந்த பிரபாத் (காலே) கீதங்களிலே கவிக்கு உருவமும், பாவ மும் நன்கு அமைந்துவிட்டது. அழகெனும் கனவு உருவகமாக ஆரம்பித்துவிட்டது.... 1884-ல் அவர் பம்பாய் ராஜதானியில் மேற்குக் கடலோரத்திலிருக்கும் கார்வாரில் கொஞ்ச காலம் தன் சகோதரருடன் தங்கினர். கவியி னுடைய முதல் முக்யமான நாடகம் கார்வா ரில்தான் எழுதப்பட்டது....கவியின் உள்ளத் திலே நாடகமும் சங்கீதமும் நாள் ஆக ஆக அதிக இடமும் முக்யத்துவமும் பெற்றுக் கொண்டுவந்தன. கவியே நடிப்புக் கலேயின் சிக ரத்தை எட்டிப்பிடித்தார்....தவிரவும் இலக்கிய மறுமலர்ச்சியிலே நாடகத்துக்கு ஜனங்களின் வாழ்க்கையையும் உள்ளத்தையும் ஒட்டியதோர்

இடம் இருந்தது; சங்கீதத்துக்கு அடுத்தபடியாக நாடகத்தில்தான் பொது ஜனங்கள் — படித்தவர்களும், படிக்காதவர்களும் — அதிகமாக ஈடுபடமுடியும் என்று கவிக்கு ஒரு நம்பிக்கையிருந்தது .... தாகுர் நாடகம் என்றால் வங்காளத்திலேயே ஒரு கலை உத்ஸவமாக கருதக் கூடிய நிலையில் நாடகத்தைக் கொண்டுவந்து வைத்துக் காட்டினார் கவி. இந்தப் புதுமைக்கு அடிகோலிற்று பிரக்ருதிர் ப்ரதிசோத (ஆங்கிலத்தில் சன்யாசி) என்ற நாடகம்.....

கார்வாரிலிருந்து கல்கத்தா திரும்பியதும் ரவீந்திரநாத தாகுருக்குக் கலியாணம் ஆயிற்று. அவருடைய மனைவியின் பெயர் மிருணளினி தேவி. ஜீவனஸ்மிருதியிலே “எனக்குக் கலியாணம் ஆயிற்று. அப்போது எனக்கு வயது இருபத்திரண்டு” என்று சுருக்கமாகக் கவி எழுதியிருக்கிறார்; அதைப்பற்றி வேறு ஒன்றுமே எழுதாமல் விட்டுவிட்டார். ரவீந்திரரின் மனைவியைப்பற்றி நான் படித்த வேறு எந்தப் புஸ்தகத்திலும் போதிய விவரம் கிடைக்கவில்லை........

அவருடைய சகோதரரின் மனைவி, குழந்தைகளுக்கென்று வங்காளியில் பாலக் என்ற பெயருடன் ஒரு மாசிகை நடத்த ஆரம்பித்தார்.

அது நடந்த ஒரு வருஷத்தில் ரவீந்திரர் அதில் பல விஷயங்களைப் பிரசுரித்தார். ராஜரிஷி என்ற நாவல் அதில்தான் தொடர்ச்சியாக வெளிவந்தது. இதைத்தவிர தினம் கதை, கவிதை, கட்டுரை, நாடகம், காவியம், விமர்சனம், கீதங்கள் —இவைதான் கவியின் தினசரி வாழ்க்கைச் சம்பவங்கள். இந்தக் காலத்தில்தான் அவர் ஆங்கிலத்திலிருந்தும் சில கவிதைகளை வங்காளியில் மொழிபெயர்த்தார்....சற்றேறக்குறைய இதே சமயத்தில் அவருக்கு பங்கிம் சந்திர சட்டர்ஜியுடன் நட்பு ஏற்பட்டது. தன் குழந்தைப் பருவத்தில் பங்கிம் நடத்திய வங்கதரிசனம் என்னும் மாசிகையைப் படிக்கத் தனக்கும், வங்காளத்தில் தன்னைப்போலப் பிறருக்கும் இருந்த ஆர்வத்தைப்பற்றி அவர் ஜீவனஸ்மிருதியில் ஒரு இடத்தில் எழுதியிருக்கிறார். பங்கிம்தான் அந்த நாட்களில் வங்காளத்தின் மிகச் சிறந்த இலக்கியாசிரியர். அவரைச் சந்தித்துப் பேசவேணுமென்று விரும்பி அவரைத் தேடிப்போனதையும் தன்னைப்பற்றி அவர் என்ன நினைப்பாரோ என்று பயந்ததையும்பற்றி ரவீந்திரர் விவரமாக எழுதி வைத்திருக்கிறார். ஆனால் பங்கிமுக்கும், ரவீந்திரருக்கும் இடையே தோன்றிய நட்பு வெகுகாலம் நீடிக்கவில்லை; மத சம்பந்தமான ஒரு பிரச்னையைப்பற்றி விவாதிப்ப

வாழ்க்கை

யில் கொள்கை வேறுபாட்டினால் சண்டை யிட்டுக்கொண்டு (பத்திரிகைகளில்தான்) அவர் கள் பிரிந்தனர்.

வங்காளத்தில் அந்த நாட்களில் ஒரு புது உணர்ச்சி தோன்றியிருந்தது. அதை வெறும் தேசீய உணர்ச்சியென்று மட்டும் சொன்னால் போதாது........ஒரு மனிதனின் வாழ்க்கையிலே சில சமயம் ஆத்மசோதனைக்கு, தவிர்க்க முடி யாததோர் ஆத்ம விசாரத்துக்கு, அவசியம் ஏற்படுகிறது. தனி மனிதனுக்கு ஆத்மா இருப் பதுபோல ஒவ்வொரு தேசத்துக்கும் ஒரு ஆத்மா இருக்கிறது. தனி மனிதனுக்கு ஏற்படுவது போல ஒவ்வொரு தேசத்திலும் ஆத்ம விசாரத் துக்கு அவசியம் அடிக்கடி நேருவதுண்டு. இந்தியாவிலே பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப்பகுதியை ஆத்மசோதனைக் கால மாகச் சொல்லலாம். இதன் முதல் சின்னங்கள் வங்காளத்தில்தான் வெளிப்படையாகத் தோன் றின........அரசியல், சமூகம், இலக்கியம்—எல்லா வற்றிலும் வங்காளம் தனது உண்மையான ஆத்ம சொரூபத்தைக்கண்டு அறிந்துகொள்ள முயற்சித்துக்கொண்டிருந்தது........ வங்கத்தின் புது இயக்கங்களிலெல்லாம் ரவீந்திரரும் ஈடு பட்டுப் பெரும் பங்கெடுத்துக்கொண்டார்........

ரவீந்திரர் எப்பொழுதுமே பார்க்க கம்பீரமாயும், அழகாயும் இருப்பார். அந்த நாட்களில் அவருடைய தோள்களில் விழுந்து புரண்ட தலைமயிர், கடலின் அலைகள்போல சுருண்டு சுருண்டு அவர் அழகுக்கே ஒரு புது மெருகுகொடுத்தது. மூகவாய்க்கட்டையில் அப்பொழுதுதான் தவழ ஆரம்பித்திருந்த தாடி அவர் முகத்துக்கே ஒரு தேஜஸைத் தந்தது. அவர் கண்களைப்பற்றிச் சொல்லவேண்டிய தில்லை........“அதெல்லாம் சரிதான். ஆனால் நான் எழுதியிருந்ததோ சொல்பம்; அல்பம். வாழ்க்கையிலே எனக்கு அனுபவமும் பூஜ்யம்........என் அறிவு முதிரவில்லை. என் கவிதையிலே வெண்ணிலவும் கண்ணீருந்தான் அதிகமாக யிருந்தது........பைத்தியக்காரன்மாதிரி வேஷம் போட்டுத் திரிந்துகொண்டிருந்தேன்” என்று அவர் அந்தக் காலத்தைப்பற்றிப் பின்னர் எழுதியிருக்கிறார்.

இந்தப் பருவத்தைச் சேர்ந்த கடி ஓ கோமல் (மேடும் பள்ளமும்) என்ற கவிதைத் திரட்டைப் பற்றி இரண்டொரு வார்த்தைகள் சொல்வது மிகையாகாது. ரவீந்திரரின் கவிதையிலே இது ஒரு புது முயற்சி. இதில் முதல் பாட்டு “இந்தப் பிரபஞ்சம் இன்பமயமானது” என்று ஆரம்

பிக்கிறது. இதிலே கீதாஞ்சலியின் பாவமும், பாணியும் தோன்றிவிட்டன என்று தாம்ப்ஸன் எழுதியிருக்கிறார். ஆனல் இந்தப் புஸ்தகத்தை வங்காளிகள் வெகுவாகத் தூற்றினர்கள். இதிலே, "புலனின்பங்களுக்கு, காமமயமான பிரபஞ்சத்துக்கு, ரொம்பப் பச்சையான வார்த்தைகளில் அழகிய உருவம் கொடுத்திருக்கிறார் கவி" என்று ஒரு வங்க விமர்சகர் சொல்லுகிறார். உண்மையில் வங்காளிகளில் பலருக்கு வெகுநாள் "இதுதான் ரவீந்திரரின் சுயசொரூபம்; கீதாஞ்சலி போன்றதெல்லாம் ஒரு விண்டியின் வேஷம்" என்றுதான் தோன்றிற்றும். விமர்சகர்கள இது விஷயம்பற்றி அப்போது வெகுவாக விவாதித்துப் புயல் கிளப்பினர்களாம்.

அந்தக் காலத்து 'மவுசு'ப்படி ரவீந்திரருக்கு வங்க ஷெல்லி என்று நாமகரணம் செய்யப்பட்டது. நல்ல வேளை; அவரால் வங்கம், ஷெல்லி என்ற இரண்டு தளைகளையும் மீறிக் கவியாக உஜ்ஜீவிக்கப் போதிய தெம்பு இருந்தது!........

அவருடைய இருபத்தைந்தாவது வயதிலே முதல் முதலாக அவர் துக்கம் என்றால் என்ன என்று அறிந்தார். தாயின் ஸ்தானத்தி

லிருந்து அவருக்கு அன்பும், ஆதரவும் அளித்த அவருடைய சகோதரரின் மனைவி இறந்துவிட்டார். இதுபற்றி அவர் தன் ஜீவனஸ்மிருதியில் வெகு உருக்கமாக எழுதியிருக்கிறார். அன்று முதலே கவியின் எழுத்தில் சாவின் நிழல் பட ஆரம்பித்துவிட்டது; அவருடைய உள்ளத்திலும் எமனின் காலடிச் சப்தம் எதிரொலிக்க ஆரம்பித்து விட்டது........இந்த சம்பவத்துடன் தன் ஜீவனஸ்மிருதியை முடித்து விடுகிறார் கவி என்பதும் கவனிக்கத்தக்க விஷயந்தான்.....

4

1887-ல் கவி தனிமையையும் அமைதியையும் நாடி, தன் மனைவியுடனும், புஸ்தகங்களுடனும் காஜிப்பூர் சென்று ஒரு பங்களா வாங்கிக்கொண்டு சில காலம் வசித்தார்........ உலகையும் உலகோரையும் மறக்கவேணும் என்று திடீர் என அவருக்கு ஒரு ஆவல் தோன்றிவிட்டது. ஆனால் எந்தக் கவிஞனாவது உலகையும் உலகோரையும் மறந்து விட்டுக் கவிதை எழுத முடியுமா? அப்படி எழுதினாலும் அது கவிதையாக அமையத்தான் அமையுமா?........ரவீந்திரரின் வாழ்க்கையிலே பல தடவைகள் இப்படி அவருக்குத் தனிமையின் அவசியம் தோன்றியதுண்டு.

அவருடைய மென்மையான கவியுள்ளம் உல கத்தின் ஆசாபாசங்கள் என்னும் கற்பாறை கள்மேல் மோதிப் புண்பட்டபோதெல்லாம் இந்த ஆவல் அவர் மனதிலே தோன்றியது போலும். சாந்திநிகேதனம் இந்த விஷயத் தில் பிற்காலத்திலெல்லாம் உண்மையிலேயே அவருக்கு ஒரு ஆசிரமமாக விளங்கிற்று........ ஆனல் உலகை மறந்துவிடும் எண்ணத்துடன் காஜிப்பூர் சென்ற கவியின் இந்தப் பருவத் துக் கவிதையிலேதான் முதல் முதலாக தேசீய மும், வங்க நாட்டு வாழ்க்கையைச் சீர்திருத்த வேணும் என்ற ஆத்திரமும் த்வனிக்கிறது. கவி ரவீந்திரர் தேசீயம்தான் புகழுக்குக் குறுக்கு வழி என்பதற்காக தேசீயவாதி ஆக வில்லை. ரவீந்திரரின் தேசீயம் முதலில் அவரு டைய புகழுக்குக் குறுக்கேயே நின்றது. தயை தாக்ஷண்யமின்றி அவர் வங்காளத்தின் குறைகளை அலசி அறிந்து கூறியிருக்கிறார். "எங்களை வங்காளிகளாக மட்டும் படைத்தாயே பிரும்மதேவனே! மனிதர்களாகவும் படைத் திருக்கக் கூடாதா?" என்று ஒரு கவிதையில் கேட்கிறார் அவர்........கவி இந்த விஷயங்களைப் பற்றி எழுதாமலே இருந்திருக்கலாம். ஆனல் தான் கண்ட விஷயங்களைப்பற்றித் தனிமை யில் எண்ண எண்ணக் கவியின் உள்ளம்

கொதித்தது. அக்கொதிப்பு ஆத்திரமாகவும், குத்தலாகவும், கேலியாகவும் மானஸி என்ற அவருடைய கவிதைத் திரட்டிலே பல பாட்டுக் களில் வெளிவந்திருக்கிறது. ஆங்கில மோஹம், கோழைத்தனம், தேசீயம் என்று சொல்லித் திரியும் போலிகள், 'ஹிந்துதர்மம்' என்று இல்லாததொன்றைப் பரப்ப முயலும் பழக்க வழக்கங்கள், பெண்களின் நிலைமை........இது மாதிரி எவ்வளவோ விஷயங்களைக் கவிக்கே உள்ள வேகத்துடனும்,உரிமையுடனும் கண்டித் திருக்கிறார் அவர். ஆனால் இந்தக் கவிதைகளி லும் அவருக்குத் தன் சகோதர இந்தியர்களிட மும், வங்காளிகளிடமும் இருந்த அன்பும் அனு தாபமும் த்வனிக்கிறது....இந்த மாதிரிக் கவிதை களினால் வங்காளத்தில் ரவீந்திரருக்கு அந்தக் காலத்தில் விரோதிகள்தான் அதிகரித்தார்களே தவிர வேறு ஒன்றுமில்லை. ஆனால் அதைப்பற்றி கவிக்கென்ன கவலை வந்தது ? .... மானஸி என்ற திரட்டிலே எல்லாம் தேசீய, சமூகப்பாடல்கள் அல்ல. ரவீந்திரர் தன் வாழ்நாட்களில் எழுதிய மிகச் சிறந்த கவிதைகள் சில இந்தத் திரட்டிலே இருப்பதாக தாம்ப்ஸன் சொல்லுகிறார். காஜிப் பூர் ரோஜாத் தோட்டங்களின் வாடை இதிலே வீசுகிறதாம். அகல்யா என்னும் பாட்டு ரவீந்தி ரரின் எழுத்துக்களிலேயே மிகச்சிறந்தது என்று

அவர் சொல்லுகிறார் .... ஜயதேவர், காளி தாஸன் முதலியோர் மரபில் வந்த தானும் கவி என்ற பிரக்ஞையுடன் ரவீந்திரர் முதல் முதலாக காஜிப்பூரில் தங்கிய காலத்தில்தான் எழுதியிருக்கிறாராம்....

திடீர் என்று காஜிப்பூர் போனவர் மறுபடியும் கல்கத்தா திரும்பிவிட்டார். இப் போது அவர் மனம் தனிமையை நாடவில்லை. இந்தப் பரந்த தேசத்தின் மக்களை நெருங்கிப் பழகி அறியவேணுமென்று அவருக்கு ஆசை தோன்றிற்று. கல்கத்தாவிலிருந்து பெஷாவர் வரையில் ராஜ பாட்டையிலே அவசரப்படாமல் மாட்டு வண்டியில் பிரயாணம் செய்யவேணு மென்று ஆசை கொண்டார். துரதிர்ஷ்டவச மாக இந்த ஆசை நிறைவேறவில்லை .... அவ ருடைய தகப்பனார் மஹரிஷி தேவேந்திரநாத தாகூர் அவர் கங்கைக் கரையில் ஷிலேதாப் பிரதேசத்திலிருந்த தங்கள் குடும்ப ஜமீன் சொத்தைப் பரிபாலித்துப் பார்க்கப் போக வேணுமென்று விரும்பினார். ரவீந்திருக்கு முத லில் இஷ்டமில்லை; வேலையும் தொந்திரவும் அதிகமாயிருக்கும்: கவிதை எழுத அவகாசம் இராது என்று எண்ணினார். ஆனல் கடைசியில் பொறுப்பை ஏற்றுக்கொண்டு ஷிலேதா சென்றார்....

ரவீந்திரர் ஷிலேதாவில் வாழ்ந்த வருஷங்களைத்தான் அவருடைய வாழ்க்கையிலேயே மிகவும் முக்யமான வருஷங்களாகச் சொல்ல வேணும். இலக்கிய அம்சங்களில் கவனித்தாலும் அவைதான் சிறந்தவை என்பதில் சந்தேகமில்லை. முப்பதாவது வயதில் சில மாதங்கள் ஐரோப்பாவில் சுற்றுப்பிரயாணம் செய்துவிட்டு வந்தார். அது தவிர அடிக்கடி கல்கத்தாவுக்குப்போய்வருவார்....பாக்கிப் போதெல்லாம் ஷிலேதாவிலே ஜமீன் நிர்வாகத்திலே சென்றது. சாமான்ய மக்களுடன் நெருங்கிப் பழக அவருக்குச் சந்தர்ப்பம் அளித்தது ஷிலேதா வாழ்வுதான். ஜமீன் நிர்வாகத்தை வெகு திறமையுடன் வகித்து நடத்தினர். குடிகளின் நன்மையையும் க்ஷேமத்தையும் உத்தேசித்து அவர் பல காரியங்கள் செய்தார். கங்கைக்கரையில் இயற்கையுடன இயைந்து வாழவும் முடிந்தது .... குடும்ப வாழ்க்கையும் இன்பகரமாக நடந்தது. கலியாணமான மூன்ருவது வருஷம் அவருக்கு மதுரிலதா என்ற பெண் பிறந்தாள். அப்புறம் இரண்டு வருஷங்களுக்கு ஒரு குழந்தையாக ரதீந்திர நாதரும், ரேணுகாவும், மீராவும், ஸாமேந்தரனும் பிறந்தனர். தன் குழந்தைகளுக்குக் கல்விபுகட்ட ஆரம்பிக்கும்போது

அவர் நமது கல்வி முறைகளைப் பற்றி விரிவாக ஆராய்ந்து அறிந்துகொண்டார் ....

வங்காளத்தின் மிகச் சிறந்த பத்திரிகை யென்று பின்னர் பெயர் வாங்கிய சாதனாவின் ஆசிரியப் பொறுப்பு கவி யுடையதாயிற்று. பெயரளவில் மட்டும் கவியின் மருமகன் தான் அதன் ஆசிரியன். ஆனால் அதில் பெரும்பகுதி யும் ரவீந்திரரால் எழுதப்பட்டதுதான். அந்தப் பத்திரிகையின் ஐந்தாவது வருஷம் ஆசிரியர் என்று போட்டுக்கொண்டு கவியே அதை நடத்தினார். அந்தப் பத்திரிகை பொது ஜனங் களின் மதிப்பையும் புகழையும் பெற்றது எனினும், பண விஷயத்தில் அது அவ்வள வாக லாபகரமாக இல்லாததால் அதை 1895ல் நிறுத்திவிட்டார். "எனக்கும் பத்திரி கைத் தொழில் அலுத்துவிட்டது....மாதம் இத்தனை எழுதுவது என்று திட்டப்படி எழுது வது எனக்கு வரவில்லை'' என்றார்....சாதனாவில் எழுதியதனால்தான் அவருக்குச் சமூக, அரசியல் நுட்பங்களை நன்கு ஆராய்ந்து தெளிவாக விளக்கும் சக்தியும் பழக்கமும் ஏற் பட்டது. பொருளாதாரம், பண்டைய இந்தியப் பண்பு இவைபற்றியும் அவர் சாதனாவில் எழுதி யிருக்கிறார். வங்காள மாகாணத்தில் அந்த

நாட்களில் நடந்த ஒவ்வொரு விவாதத்துக்கும் அழகான, பொருத்தமான முடிவு ரவீந்திரரால் சாதனுவில்தான் சொல்லப்படும்....இந்தக் கட்டுரைகளையெல்லாம் இலக்கியம் என்றுசொல்லுவதற்கில்லைதான்; ஒரு கவியின் எழுத்து என்றும் போற்றமுடியாது. ஆனல் இவைகளால் கவியின் அறிவு விசாலித்தது; சின்ன விஷயங்களில் கவனமும், பொதுவாக எழுத்திலே தெளிவும் உண்டாயிற்று என்பதை யாரும் மறுக்க முடியாது....

சாதாரண மனிதர்களின் தினசரி வாழ்க்கையில் அவருடைய உள்ள ஈடுபாடும் அதிகரித்தது ஷிலைதா வாசத்தின் போதுதான். அந்தக்காலத்தில் அவர் தன் மருமகள் இந்திராவுக்கு எழுதிய கடிதங்களில் இந்த ஈடுபாடு ரொம்பவும் அழகாக எதிரொலித்திருக்கிறது என்று தாம்ப்ஸனும், வங்க விமர்சகர்களும் சொல்லுகிறார்கள். வெகு காலம் கழித்து அந்தக் கடிதங்களைப் படித்த கவியே அதில் பெருமைகொண்டு பறித்த இதழ்கள் என்ற பெயருடன் அதைப் பிரசுரிக்க ஏற்பாடு செய்தாராம்....சாதாரண மக்களின் தினசரி வாழ்க்கையில் கவிக்கு ஏற்பட்ட ஈடுபாடும், உத்ஸாகமுந்தான் அவருடைய சிறு கதைகளுக்குக் காரணமென்று சொல்லலாம். மக்களின் உள்

ளக் காட்சிகள் கவியின் அகக்கண்ணிலே பட்டு சிறுகதையாளராவதற்கு வேண்டிய மனப் பக்குவத்தை அவருக்குத் தந்தன. சாதனுவில் ஐந்து வருஷங்கள் மாதத்துக்கு ஒரு கதையாக அவருடைய கதைகள் வெளிவந்தன....ரவீந்திரர் மஹாகவி என்று அங்கீகரிக்க மறுத்த வங்க விமர்சகர்கள்கூட வெகு காலத்துக்கு முன்னமே அவரை சிறுகதையாளராக உலக இலக்கியத்திலே மஹோன்னதமான இடம் பெறக் கூடியவர் என்று அங்கீகரிக்க வேண்டி வந்து விட்டது....சாதாரணமக்களின் உள்ள நிகழ்ச்சிகளைக் கருணையுடனும், கலையுடனும், மேதையுடனும் விவரித்த இந்தச் சிறுகதைகள் வங்காளிகளின் உள்ளத்தைக் கொள்ளைகொண்டதில் ஆச்சர்யமில்லை........ஆங்கிலத்தில் ரவீந்திரரின் கதைகளில் ஒரு சில — கவிதை அம்சம் நிரம்பியவை மட்டுந்தான் வெளிவந்திருக்கின்றன; "வெண்ணிலவும், கண்ணீரும் அதிகமாக இருக்கும்" ஒரு சில தான் தமிழில் வெளிவந்திருக்கின்றன....

சிறுகதைகள், கட்டுரைகள், இலக்கிய விசாரம், விவாதங்கள், கடிதங்கள்....வேறு என்னவா? விஸர்ஜன், சித்திராங்கதா, விதாய் அபிசாப், மாலினி (நாடகங்கள்); ஸோனூர்தரி, சித்ரா,

சைதாலி, நதி முதலிய கவிதைத் திரட்டுகள்: இவ்வளவும் ஷிலேதாவாசத்தின் அறுவடை. இதில் எதுவும் சாவியில்லை எனினும் முக்ய மாக சித்திராங்கதாவையும், ஸோனர்தரியையும் பற்றிச் சொல்லவேணும்.... "ஸோனர்தரிதான் என்னுடைய முதல் கவிதை என்று ஒருவிதத்தில் சொல்லலாம்—அதாவது வாசகர்களைப்பற்றிய வரையில்....எனக்கு என்று வாசகர்களும், சிஷ்யர்களும், அவர்கள் உள்ளத்திலே நிரந்தரமான இடமும் கிடைத்தது அதனால்தான். ஸோனர்தரி, பொன் ஓடத்திலேறி நான் என் வாசகர்களின் உள்ளத்தை அடைந்துவிட்டேன்" என்று கவியே சொல்லுகிறார்.... சித்திராங்கதாவைப்பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் இராது. ஏனென்றால் தாகுர் அன்பர்கள் எல்லோரும் அதை வாசித்தே யிருப்பார்கள். (அது ஆங்கிலத்தில் சித்ரா என்ற பெயருடன் கவியாலேயே மொழி பெயர்க்கப் பட்டிருக்கிறது)...."ஒரு கவியின் மிக ஸௌந்தர்யமான நாடகம்....இசையும், கவிதையும், பாவமும், உருவமும் அதில் ஒருங்கே அழகெனும் உருவம் எடுத்திருக்கின்றன....கவியின் மேதை இதில் மங்காத ஒளி கூடித்திகழ்கிறது.... சித்திராங்கதைக்கு ஈடான பாத்திரம் உலக நாடக இலக்கியத்தி

லேயே கிடையாது" என்று தாம்ப்ஸன் இந்த நாடகத்தைப் புகழ்ந்திருக்கிறார். "நாடகமா அது? இல்லை?....வாசகர்களின் உள்ளத்திலே கவி எழுப்பியிருக்கும் சிற்பக்கோயில்" என்கிறார் எர்ணஸ்ட் ரைஸ்....

ஷிலேதா வாசத்தின்போது ரவீந்திரரின் மேதையின் இன்னொரு அம்சம் பக்குவம் பெற்றது. இதுதான் இசை....அவருடைய கீதங்களையே அவருடைய சிருஷ்டிகளில் முக்யமானதாகக் கருதுபவர்கள் இருக்கிறார்கள்....அவருடைய நீண்ட ஆயுட்காலத்தில் அவர் இரண்டாயிரத்தைந்நூறு கீதங்களுக்குமேல் இசைத்திருக்கிறாராம்...." உலகம் என்னைக் கவியாகவும், நாடகாசிரியனாகவும், தத்வ ஞானியாகவும் கருதிப் போற்றலாம். ஆனால் என் ஜனங்களுக்கு நான் பாடகன் என்ற ஒரு விஷயம் மட்டும்தான் தெரியும். அதையே நான் என் பெருமையாக எண்ணி ஆனந்திக்கிறேன்....என் நாட்டில், என் மக்களிடையே, என் பாட்டுக்கள் வழக்கிலிருக்கின்றன. என் இசைகள் சாதாரண மக்களின் உள்ளத்திலே எதிரொலியை எழுப்புகின்றன.... இருக்கும்போதும், படுக்கும்போதும், நடக்கும்போதும் என் சகோதரர்கள் வாயார என்

கீதங்களைப் பாடுகிறார்கள்" என்று ஒருதரம் கவியே பெருமையுடன் சொன்னாராம்.... தேசிய கீதங்களும், கன்னடத்தைக் குறித்தான டும் கீதங்களும், வைஷ்ணவ சம்பிரதாயப்படி கடவுளைக் காதலனாக எண்ணி ஏங்கும் கீதங் களும் பல இசைத்திருக்கிறார் கவி ரவீந்திர நாத தாகுர்.... இந்த இசை வெள்ளம் ஊற் றெடுத்துப் பெருக ஆரம்பித்தது அவருடைய ஷிலைதா வாசத்தின் போதுதான்.

5

1897க் கப்புறம் ஓரிரண்டு வருஷங்கள் ரவீந்திரர் முக்யமானதாக எதுவும் எழுத வில்லை. ஆனால் இந்த இரண்டு வருஷங்களில் வங்காளம் அவரைப்பற்றி என்ன நினைப்பது, அவரை எப்படி மதிப்பிட்டு அங்கீகரிப்பது என்பது பற்றி முடிவு கட்ட முயன்றுகொண் டிருந்தது. பொதுமக்கள் ஏற்கனவே, வெகு காலத்துக்கு முன்னரே, அவரை அங்கீகரித்து விட்டனர். கவியைப் பற்றிய வரையில் அது தான் முக்யம். ஆனால் மற்றவர்கள், விசேஷ மாக வங்க பண்டிதர்கள், அவரைப்பற்றி என்ன நினைத்தார்கள் என்பதை நாம் அறிய வேண்டியதும் அவசியம்தான்....

எந்த விஷயத்திலுமே போலிகளுக்கு நிஜச்சரக்கைக் காணும்போது திகைப்பும் ஆத்திரமும்தான் சகஜமாக ஏற்படும். தேசியத்திலே போலிகளுக்கு என்றுமே குறைவு கிடையாது. இலக்கியத்தில் எக்காலத்திலும், எத்தேசத்திலும் பண்டிதர்கள் போலிகள்தான் ....இந்த இரண்டுவிதப் போலிகளையும் எதிர்த்து ஆதிமுதலே ரவீந்திரர் போரிட நேர்ந்துவிட்டது....அவருக்கு வங்க பாஷையே சரிவர எழுதத் தெரியாது என்று வங்க பண்டிதர்கள் ஏகமனதாக அபிப்பிராயம் கூறினார்களாம். (அவர் கட்டுரைகளைப் பள்ளிப்பிள்ளைகளிடம் கொடுத்துத் ‘திருத்த”ச் சொல்லுவது பலநாள் வங்கப் பள்ளிக்கூடங்களில் வழக்கத்திலிருந்ததாம்!) இலக்கியத்திலும் தேசியத்திலும் அவர் விதேசியைப் பின்பற்றுபவர் என்று சிலர் பிரசாரம் செய்தார்கள்....1900-த்தில் வெளிவந்த க்ஷணிகா முதலிய சில கவிதைத் திரட்டுகளால் பண்டிதர்களிடையே அவருடைய ‘புகழ்’ அதிகரித்தது. க்ஷணிகாவில் அவர் சாதாரண மக்கள் தினசரி வீட்டில் பேசும் பாஷையிலே கவிதை இயற்ற முடியும் என்று செய்து காட்டியிருக்கிறார். “மக்கள் தினம் பேசிப் பழகும் பாஷையின் அழகையும் வளத்தையும் நான் முதல்முதலாக

க்ஷணிகாவை எழுதும்போதுதான் கண்டுகொண்டேன். வழக்கிலிருக்கும் எந்த வார்த்தையும் கவிதையில் அமையும், அழகாக அமையும் என்று அறிந்து கொண்டேன்....என் வாசகர்கள் ஆச்சர்யப்பட்டார்கள்!........" என்று ரவீந்திரர் பின்னர் சொன்னார்........நாளடைவில் பண்டிதர்கள்கூட ரவீந்தரரின் நடை அழகை ஒப்புக்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டு விட்டது. இன்று அதுதான் இலக்கியத்துக்கே ஏற்ற நடை என்று எல்லோரும் ஒப்புக்கொண்டு விட்டார்கள் — வங்கத்தில் தான்; தமிழ் நாட்டில் அல்ல!

கதா, காஹினி, கல்பனு, க்ஷணிகா என்ற நாலு கவிதைத் திரட்டுகளும் 1900த்தில் வெளிவந்தன.....கவியினுடைய மனதிலே ஒரு புது ஆர்வமும், உத்ஸாகமும், நம்பிக்கையும் பிறந்திருப்பது இந்தக் கவிதைகளில் தெரிகிறது. அரசியல், பாஷை, சமயம் எல்லாவற்றிலுமே அவர் மனம் இப்போது முன்னையும்விட அதிகமாக ஈடுபட ஆரம்பித்து விட்டது என்பதின் அறிகுறிகள் இந்த நாலு புஸ்தகங்களிலும் இருக்கின்றன. கிண்டலும், கேலியும், சோகமும், நம்பிக்கையும், ஏமாற்றமும், ஏக்கமும் மாறி மாறி த்வனிக்கின்றன.

ரவீந்திரரின் சிறந்த காதல் கவிதை இந்தக் காலத்தில்தான் எழுதப்பட்டது....க்ஷணிகா, கல்பனா என்ற இரண்டு புஸ்தகங்களிலும் உள்ள கவிதைகள்தான் பெரும்பாலும் தோட்டக்காரன் என்ற ஆங்கிலத்தில் வெளிவந்த புஸ்தகத்தில் இடம் பெற்றிருக்கின்றன. மேல் நாடுகளில் தோட்டக்காரன்தான் தாகுரின் மற்றெல்லாப் புஸ்தகங்களையும்விட அதிக உத்ஸாகத்துடன் வரவேற்கப்பட்டது என்பது கவனிப்பதற்குரிய விஷயம்....

சற்றேறக்குறைய இதே சமயத்தில்தான் ரவீந்திரர் சாந்திநிகேதனத்தில் வசிக்க ஆரம்பித்தார். அவர் உபநிஷத்தையும் வேதங்களையும் கவனத்துடன் படிக்க ஆரம்பித்ததும் இந்த சமயத்தில்தான். அரசியல் விஷயங்களில் போல அவருக்கு இப்போது சமய விஷயங்களிலும் அறிவும் ஈடுபாடும் அதிகரித்தது. 1901-ல் வெளிவந்த நைவேத்ய என்னும் கவிதைத் திரட்டிலே நூறு பாடல்கள் இருக்கின்றன. அவைகளில் பாதி அரசியல் விஷயமாகவும், மற்றப் பாதி பக்தி விஷயமாகவும் அமைந்திருக்கின்றன. "இதில் ஒரு ஐம்பதுக்குமேல் தேறும்....அந்த ஐம்பதை மட்டும் கவி வெளி

யிட்டிருந்தாராலல் ரொம்பவும் நன்ருயிருக் திருக்கும்" என்று இந்தப் புஸ்தகத்தைப் பற்றி தாம்ப்ஸன் எழுதியிருக்கிருர். நைவேத்யா விலிருந்து பதினறு பாடல்கள் கவியின் ஆங் கில கீதாஞ்சலியில் சேர்க்கப்பட்டிருக்கின்றன.... கடவுள் பக்தியும் தேச பக்தியும் இந்த கீதங் களிலே சேர்ந்து தவழுகின்றன; அவை ஒன் றுக்கொன்று முரணுகவோ, இசையாமலோ இல்லை. மிகச் சிறந்தவை என்று சொல்லக் கூடிய ஒன்றிரண்டு பாடல்களிலே இரண்டு பக்திகளும் ஒரேமாதிரியான முக்யத்வம் பெற் றிருக்கின்றன. இந்தியாவிலே பக்திப் பாடல் களுக்கே விசேஷமாக உள்ள எளிமையும், பரவசமும், மற்ற அமைதிகளும் கவியின் எழுத் திலே த்வனிக்க ஆரம்பித்துவிட்டன. கடவுளைத் தேடிக்கொண்டு கவி பூமியிலிருந்து கிளம்பி வெகுதூரம் போய்விடவில்லை. அவர் வங்கத் தையும், கங்கையையும், தன் சகோதர மனிதர் களையும் மறந்து விடவில்லை....

1901-ல் (டிசம்பர் 22ந் தேதி) கவி ரவீந் திரர் பிரும்ம வித்யாலயம் என்ற பெயருடன் ஒரு பள்ளிக்கூடத்தைஸ்தாபித்தார். அது தான் பின்னர் விசுவபாரதியாக வியாபிக்க இருந்தது. ஆனல் 1901-ல் கவியை நம்பி அவ

ரிடம் பாடம்படிக்க வந்தவர்கள் நாலேநாலு பேர்வழிகள் தானும்....தனக்கும் தன் தகப்ப ஞருக்கும் ஆசிரமமாக வெகுநாளாக உபயோ கப்பட்டுவந்த சாந்திநிகேதனத்தை இந்தியா வின் கலைக்கும், பழைய நாகரிகத்துக்கும், ஆத் மாவுக்கும் ஆசிரமமாகச் செய்யவேணுமென்று அவர் ஆரம்பத்திலிருந்தே உத்தேசித்திருந்தார். சமயத்தையும் கலையையும் அடிப்படையாகக் கொண்டு, அவைகளை ஒட்டி வாழும் வழக்கம் இந்தியரிடையே மறுபடியும் நிலைக்கச் செய்ய வேணுமென்பது அவர் ஆசை.......இந்தியா வில் சிறந்ததுமட்டுமல்ல: இப்பிரபஞ்சத்திலே சிறந்ததெல்லாம் அங்கு இடம்பெறச் செய்ய வேணும் என்று அவர் விரும்பினர். இன்று சாந்திநிகேதனத்தை அவருடைய ஆத்மா வின் புறத்தோற்றம் என்று சொல்லலாம்........ ஆனல் அன்று அவருக்கு நாலு மாணவர்கள் தான் கிடைத்தனர்....

இந்தப் பிரும்ம வித்யாலயம் ஆரம்பித்து ஒரு வருஷம் முடிவதற்கு முன் அவருடைய மனைவி இறந்துவிட்டாள்........ரேணுகா என்ற அவருடைய இரண்டாவது பெண் வெகுநாள் உடம்பு சரியாயில்லாமல் கஷ்டப்பட்டுவிட்டு 1904-ல் இறந்தாள். கவி அவள் உடல்

நலத்தை வேண்டி சாந்திநிகேதனத்தை விட்டுக் கிளம்பி சிலகாலம் இமயமலைச் சாரலில் அல்மோராவில் வசித்தார். இடையில் 1905-ல் அவருடைய தகப்பனார் மஹரிஷியும் மரண மடைந்தார். இரண்டு மூன்று வருஷங்களுக்கப்புறம் அவருடைய கடைசிக் குழந்தை ஸாமேந்திரனும் உயிர் நீத்தான் .... இந்த ஐந்தாறு வருஷங்களை மொத்தத்தில் கவியின் வாழ்க்கையிலே மிகவும் துக்ககரமான நாட்கள் என்று சொல்லலாம்....

ஆனால் கவி தன் துக்கத்தை யெல்லாம் மறந்துவிட்டு வங்காளத்தின் மக்களுக்காகப் பெரிதும் பாடுபட்டது இந்த ஐந்தாறு வருஷங்களில்தான். இலக்கியத்தில் மட்டுமின்றி அரசியலிலும் வங்காளத்தில் ஒரு பகுதியார் அவருடைய தலைமையை வேண்டினார்கள். அவருடைய பிரசங்கங்களும், பத்திரிகைக் கட்டுரைகளும், சமூக விஷயங்களைப் பற்றிய கவிதைகளும் வங்காளத்தில் அரசியல் இயக்கத்துக்கு ஒரு உயர்ந்த லக்ஷியத்தையும், உத்ஸாகத்தையும் தந்தன. ரவீந்திரர் பாரதியின் ஆசிரியராக இருந்த நாட்களிலிருந்தே அரசியலில் அவருக்கு ஒரு மதிப்பு ஏற்பட்டுவிட்டது. பின்னர் அவர் நடத்திய வங்க

தர்சனம் (1901லிருந்து ஐந்து வருஷங்கள்) வங்க மக்களின் உள்ளத்திலே ரவீந்திரரை ஒரு அரசியல் தலைவராக ஸ்தாபித்து விட்டது.... வங்கத்தில் ஒரு பகுதியார் அவருடைய எழுத்திலும், அரசியல் கொள்கைகளிலும் விதேசி அம்சங்கள் நிறைய இருந்தன என்று குறை கூறினர்கள். அதுவும் ஒருவிதத்தில் உண்மையென்றுதான் சொல்லவேணும். அவருக்கு ஐரோப்பிய நாகரிகத்திலே அப்போது கொஞ்சம் நம்பிக்கை இருந்தது. இந்தியாவிலும் ஐரோப்பாவிலும் உள்ளதில் சிறந்த அம்சங்களை எடுத்துப் பிணைத்து ஒரு வாழ்க்கை நியதி, லக்ஷியம் அமைத்துக்கொள்ள வேணும் என்று அவர் எண்ணினர். ஏழைமக்களின் சார்பாக அவர் வெகுவாகப் பரிதவித்தார். யுத்தம் என்றாலே ஒரு அருவருப்பும், அடக்கியாளமுயலும் சர்க்காரிடம் ஒரு அவநம்பிக்கையும் தான் அவருடைய சமூக, அரசியல் சேவையின் அடிப்படையான உண்மைகள் .... அவரை என்றுமே குறுகிய தேசபக்தி படைத்தவராகச் சொல்லமுடியாது ; அவர் தேசீயத்தைக் கடந்ததோர் நிலையை அடைந்தவர். உலகிலே சகோதரத்வமும், சமாதானமும் நிலவவேணும், அதற்கு இந்தியா வழிகாட்டவேணும் என்று அவர் ஆசைப்பட்டார். சமயத்திலோ,

அரசியலிலோ அவருக்கு 'சக்தி' உபாஸகர்களிடம் அனுதாபமோ, நம்பிக்கையோ என்றும் இருந்ததில்லை. தன் கட்சியாரிடமும் சரி, எதிர்க் கட்சியாரிடமும் சரி, குறைகள் இருந்தால் அவர் அதைச் சொல்லித் திருத்தமுயலாமல் விடமாட்டார்....வங்காளத்தில் சுதேச இயக்கத்தில் அவர் பெரும் பங்கு எடுத்துக்கொண்டார். வங்காளப் பிரிவினைப் பிரச்னை காலத்தில் அவர் தலைமையின் திறமை நன்கு தெரிந்தது....ஆனால் இந்த வங்கப் பிரிவினையைத்தவிர அவர் வேறு எந்த அரசியல் இயக்கத்திலும் முழு மனதுடனும் ஈடுபட்டது கிடையாது. அரசியல் இயக்கங்களிலே அவருக்கு நம்பிக்கையில்லை—ஆரம்ப முதலே அவர் நம் நாட்டு அரசியல் இயக்கங்கள் சமூக சீர்திருத்தத்திலும், கல்விச் சீர் திருத்தத்திலும் அதிகமாக ஈடுபடவில்லை, அது தவறு என்று குறைகூறிக்கொண்டு வந்தார்.... 1902லிருந்து 1907க்குள் அவர் அரசியல், தேசீய விஷயமாக வெளியிட்ட புஸ்தகங்களிலும் பத்திரிகைகளிலும் முக்யமானவை கீழே தரப்பட்டிருக்கின்றன. அவைகளின் பெயர்களிலிருந்தே விஷயம் விளங்கும். வங்கதர்சனம் (மாசிகை : 1901—1905); அத்யுக்தி (அபாண்டமான புளுகு, 1902); ஸ்வதேசி சமாஜ் (1904); ஸ்வதேசி கீதங்கள் (1904); ஆத்மசக்தி (1904);

பாரதவர்ஷம் (1904); பாந்தடர் (மாசிகை 1905—7)

இந்த ஐந்து வருஷங்களில் கவி தேசீய விஷயங்களைத் தவிர வேறு எதையும் பற்றி எழுதவில்லை என்று சொல்ல முடியாது. தன் மனைவியின் ஞாபகார்த்தமாக அவர் ஸ்மரண் என்று 1903-ல் ஒரு கவிதைத் திரட்டை எழுதி வெளியிட்டார். இந்தத் திரட்டிலே கவி தன் மனைவியிடம் வைத்திருந்த அன்பும், அவள் போய்விட்டாள் என்று அவர் பட்ட துக்கமும் உலகத்திலே வேறு எந்த இலக்கியத்திலும் இல்லாதவாறு த்வனிப்பதாக வங்க விமர்சகர்கள் கூறுகிறார்கள். ஆனல் இது முழுவதும் சோகமான கவிதையல்ல ; சமயம், பக்தி என்ற ஏதோ ஒரு பரவசம் காதலியை இழந்துவிட்ட கவிக்கு ஆறுதல் அளிக்கிறது. இந்த ஆறுதல் பாவமும் ஸ்மரணில் வெகு அழகாக அமைந்திருக்கிறதாம் ....1903ல் வெளிவந்த சோகேர் பாலி (கண் வலி) என்ற நாவல் “ஒரு கவியின் எழுத்து என்று நம்பமுடியாதபடி அவ்வளவு மோசமாக இருக்கிறது. கதை குட்டிச்சுவர்தான் ; வாக்கியங்கள் மட்டும் அழகாக அமைந்துவிட்டால் போதுமா ஒரு நாவலில்?” என்று தாம்ப்ஸன் எழுதி இருக்கிருர் .... 1904ல் வெளி வந்த சிசு என்ற கவிதைத் திரட்டு சாகக்கிடந்த அவருடைய கடை

சிப் பிள்ளைக்காக எழுதப்பட்டது. "என்னால் தாங்கமுடியாதுபோலிருக்கும் துக்கம் ஏதாவது வந்துவிட்டால் நான் என் குழந்தைப் பருவத்தைப்பற்றி ஞாபகப்படுத்திப் பார்த்துக் கொண்டு குழந்தைக் கவிதை எழுத ஆரம்பித்து விடுவேன் .... மறுபடியும் நான் குழந்தையாகி விட்டால் என் துக்கங்கள் எதற்கும் உண்மையி லேயே இடம் இல்லாமற்போன மாதிரிதானே!" ....வளர்பிறை என்ற ஆங்கிலப் புஸ்தகத்திலே சிசுவிலிருந்து பல பாட்டுகள் சேர்க்கப்பட் டிருக்கின்றன. இந்தப்பாட்டுகளை உலக இலக் கியத்திலேயே ஒரு சிகரம் என்றுதான் சொல்ல வேணும். குழந்தை உள்ளத்தின் உண்மைகளை அறிந்து கவி வெகு அழகாக, அபூர்வமான உவமை நயங்களுடன், கவிதை இசைத்திருக் கிறார்....கேயா (தாண்டுதல்) எனும் கவிதைத் திரட்டு 1906ல் வெளிவந்தது. இதிலே சோகம் ததும்புகிறது. ஆனால் கவியின் உவமைகளும் சிந்தனைகளும் பாவங்களும் சரியானபடி உரு வகமாகாமல் போய்விடுகின்றன. நடையிலே தான் ஒரு வேகமும் அழகும் இருக்கிறது .... இதே வருஷம் வெளிவந்த நௌகா டுபி (படகு மூழ்கினது) என்ற நாவலையும் தாம்ப்ஸன் சோகேர் பாலி மாதிரிதான் என்று எழுதியிருக் கிறார். ஆனால் அவர் அபிப்பிராயத்தை அந்த

சமூக சம்பந்தமான நாவலைப் படித்திருக்கும் எந்த ஹிந்துவும் ஒப்புக்கொள்ளமாட்டான். அழகான நடையுடன் இந்த நாவலிலே இன்னும் கொஞ்சம் நல்ல அம்சங்களும் இருப்பது போலத்தான் இருக்கிறது. (ஆனால் நான் இந்த நாவலைப் படித்துப் பனிரண்டு வருஷங்களுக்கு மேலாகி விட்டன என்று நினைக்கிறேன்) ....கோரா என்ற நாவலிலே தேசாபிமானம் ததும்புகிறது ஆனால் கவி இதிலே பாத்திரங்களைத் தீட்டுவதை முக்யமாகக் கருதாமல், விவாதங்களுக்கும் கொள்கைகளுக்கும் அதிக முக்யத்வம் அளித்திருக்கிறார்.

6

1907-ல் கவி திடீர் என்று வங்க அரசியல் விவகாரங்களிலிருந்து விலகிக்கொண்டு அமைதியை நாடி சாந்திநிகேதன ஆசிரமத்துக்குப் போய்விட்டார். ஒரே நாளில் அவர் தான் சம்பந்தப்பட்டிருந்த எல்லா சங்கங்களிலிருந்தும் ராஜீநாமா செய்துவிட்டுப் போய் விட்டார்....வங்கத்துக்கு இது பெரிய நஷ்டம் தான். ஆனால் உலகுக்கு ரொம்பவும் லாபகரமானதாக இருந்தது. அஜித் சக்ரவர்த்தி எனும் வங்க விமர்சகர் (பின்னர் ரவீந்திரரின் காரியதரிசி) அந்தக் காலத்தில் சாந்திநிகேதனத்தையும், சுதேச இயக்கத்தையும், அதில்

கவியின் பங்கையும், கடைசியில் அவர் ஆசிரமம் வந்ததையும் பற்றிப் பின்வருமாறு எழுதி இருக்கிருர் : “ ஆசிரமத்தில் அவர் எங்கள் கூட வந்து தங்க ஆரம்பித்து ஒரு நாலு வருஷங்கள் எல்லாம் அமைதியாகவும், ஒரு தீவிர லக்ஷியத்துடனும் நடைபெற்றது. நாலாயிர வருஷங்களுக்கு முந்திய ஆரிய இந்திய நாகரிகமே அங்கு புது உயிர்பெற்றுவிட்டது போலிருந்தது. பழமையின் சோபையும் அழகும் எங்கும் பரவிநின்றது. அப்புறம் தேசத்திலே புயல் அடித்தது ; கடும்புயல். வந்தேமாதரம் என்ற இடிமுழக்கம் போன்ற கோஷத்துடன், சுதேச இயக்கம் வங்காளம் முழுதும் காட்டுத்தீபோலப் பரவிற்று. வந்தேமாதரம் என்ற மந்திரத்துடன் நாட்டிலே ஒரு புது உத்ஸாகமும், நம்பிக்கையும், ஆர்வமும், லக்ஷியங்களும் தோன்றின. கவி ரவீந்திரர் அந்த மந்திரத்தின் முக்யஸ்தர் ஆனுர். வங்கத்தின் தலைமையை ஏற்றுக்கொண்டார். ஆசிரமம் அப்போது பழமையின் நிழல் மட்டும் அல்ல : வருங்காலத்தின் சின்னமாகவும் திகழ்ந்தது ; அது ஒரு புது யுகத்துக்கே அடிகோலிற்று.....ஆசிரமத்திலே பாரதமாதா தான் முக்ய தெய்வமானள். ஆனல் அப்பொழுதும் கவி மேல்நாட்டு நாகரிகத்தில் சிறந்தது என்று தேர்ந்தெடுத்த சில அம்சங்களுக்கு

ஆசிரமத்தில் இடம் இருந்தது. ஆனால் அதை யெல்லாம்விட முக்யமானது தேசீய உணர்ச்சி தான்........ சிலநாளில் வங்கத்திலே தேசீய இயக்கம் மிகவும் குறுகிய வழிகளிலே செல்ல ஆரம்பித்தது. சக்தி உபாஸகர்கள் அரசியலில் புகுந்துகொண்டு, பாரதமாதாவை சக்தி உருவமாகப் போற்றி, கவி அவசியமென்று கருதிய பல அம்சங்களை அவளுக்குப் பலியாகக் கொடுத்துவிட்டார்கள். கவியின் ஆத்ம அமைதி குலைந்தது....அவர் ஆத்மா தனிமையை நாடிற்று. இயற்கைக் காட்சிகளிலே லயித்துக் கலந்து அழிந்துவிட அவர் விரும்பினார். ஆத்ம விசாரம் முன்னர் எப்பொழுதும் இல்லாத ஒரு தீவிரத்துடன் நடைபெற்றது. அந்த சமயத்தில் தான் கீதாஞ்சலியில் உள்ள அவருடைய மிகச் சிறந்த பாடல்கள் எழுதப்பட்டன...."

1907-லிருந்து 1913-க்குள் அவர் எழுதிய கவிதைகள், நாடகங்கள் இவற்றின் பெயரைச் சொன்னாலே தாகூர் அன்பர்களுக்கு கவியினுடைய வாழ்க்கையிலே இது எவ்வளவு முக்யமான காலம் என்பது தெரிந்துவிடும். சரதோத்ஸவம் ஒருவசன நாடகம்; நிறைய பாட்டுகள் அதில் இடம் பெற்றிருக்கின்றன. அது பிரும்ம வித்யாலய மாணவர்களுக்காக எழு

தப்பட்டது. "கவியினுடைய நாடகங்களிலே, நாடகமாக மிகச் சிறந்தது இதுதான்" என்று வங்க விமர்சகர்கள் கருதுகிறார்கள்....பிராயச் சித்தம் என்ற நாடகம் அவருடைய இளம் வயதில் எழுதப்பட்ட ஒரு நாவலைத் தழுவி எழுதப் பட்டிருக்கிறது. இந்தச் சிறிய நாடகத்திலே இருபத்திநாலு அழகிய பாட்டுகள் இருக்கின்றன .... 1910-ல் வெளிவந்தது ராஜா (ஆங்கிலத்தில் இருட்டறை ராஜா) என்ற நாடகம். இதில் கடவுள் மனிதனுடைய உள்ளத்திலே செய்யும் லீலைகளை யெல்லாம் அழகாக அமைத்துக் காட்ட முயன்றிருக்கிறார் கவி. நாடகமாக இதை நடிப்பது ரொம்ப சிரமமான காரியம்; எனினும் வங்காளியில் அது நன்றாகவே அமைகிறது; மேல்நாடுகளில் நாடக மேடைகளில் அது அவ்வளவாக சோபிக்கவில்லை. இந்த நாடகத்துடன் ரவீந்திரர் உலக இலக்கியத்திலே ஒரு புது இடம் பெற்றுவிட்டார். நாடகமாகவும், கவிதையாகவும், கீதமாகவும், கதையாகவும் இதிலே தனிப்பட்ட குறைகள் பல இருக்கின்றன என்றாலும் அந்தரார்த்த விசேஷத்தால் அவைகளையெல்லாம் மீறிவிட்டார் கவி....தபாலாபீஸ் என்ற நாடகமும் இந்தக் காலத்ததுதான். அதுவும் பல அம்சங்களில் ராஜாவைப் போன்றதுதான். ஆனால் அத

னுடைய ஆங்கில மொழிபெயர்ப்பு கவியி னுடையது அல்ல. மூலநூலில் இருக்கும் அழகு மொழிபெயர்ப்பில் வரவில்லை என்றாலும் இது ஒன்றில்தான் கவியின் ஆங்கில நூல் முழுதும் வங்க நூலை ஒத்திருக்கிறது என்று தாம்ப் ஸன் சொல்லுகிறார். முதலில் அதில் ஒரு பாட் டுக்கூட இல்லை. 1918-ல் பல பாட்டுகள் சேர்க்கப்பட்டன. கவிக்கே மிகவும் பிரிய மான நாடகங்களில் இது ஒன்று. நாடக மேடையில், கீழ்நாட்டிலும், மேல்நாட்டிலும், அது நன்றாக, நடிப்புக் கேற்றபடி, சோபித் தது. பெர்லினில் அந்த நாடகத்தைக் கவியே நாடக மேடையில், ஜெர்மன் பாஷையிலும், வங்க பாஷையிலும் பார்த்தார். பாரிஸ், லண் டன், டப்ளின்போன்ற பல முக்ய ஐரோப் பியத் தலைநகரங்களிலும் அது நடிக்கப்பட் டிருக்கிறது. இந்தியாவிலேயேசொல்லப்போனால் அதைத்தான் கவியின் நாடகங்களில் நம்மவர் களுக்கு ரொம்பவும் பிடித்தது என்று சொல்ல வேணும். அது ஏன் நமது மனதைக் கவரு கிறது என்று அலசிப் பார்ப்பதில் லாபமில்லை. கவருகிறது என்பதுமட்டும் உண்மை !....

தபாலாபீஸும், கீதாஞ்சலியும் சற்றேறக் குறைய ஒரே சமயத்தில் எழுதப்பட்டவை. “எனக்கு ஆத்மாவிலே அமைதியில்லை.

சொல்லமுடியாத ஒரு ஏக்கம் தோன்றியிருந்தது. அப்பொழுது சுதந்தரத்தை எண்ணி ஏங்கும் ஒரு குழந்தையை எனக்கு அந்த பாவம் ஞாபகப்படுத்தியது. உலகம் அந்தக் குழந்தையைக் கடமை, வழக்கம் முதலிய தளைகளைப் போட்டுக் கட்ட முயன்றது .... என் ஆத்ம அமைதியின்மை அதிகரித்தது....மூணு நாலு நாட்களில் உட்கார்ந்து டாக்கர் (தபாலாபீஸை) எழுதினேன். அதே சமயம் கீதாஞ்சலியில் உள்ள பாடல்களையும் எழுத ஆரம்பித்தேன். அநேகமாக எல்லாப் பாட்டுகளும் சாந்திநிகேதனத்தில் எழுதப்பட்டவைதான். தினம் வெகு நேரம், இரவில்கூடத் தூங்காமல், உட்கார்ந்து எழுதினேன். நான் முதலில் அவைகளைப் பிரசுரிப்பதாக உத்தேசிக்கவில்லை. ஸோனார்தரியைப்படித்த என் வங்க வாசகர்கள் இது நன்றாயில்லை என்றுதான் சொல்லுவார்கள் என்று எனக்குத் தெரியும். ஆனால் அவை என் உள்ளத்திலேயே, ஆத்மாவிலேயே பிறந்த இசைகள்''.... கீதாஞ்சலியைப் பற்றி அதிகமாகச் சொல்ல வேண்டிய அவசியம் கிடையாது. "புல்லையும் மலரையும் போல இவை இயற்கைத் தாயின் சிருஷ்டிகள்'' என்று ஈட்ஸ் எனும் கவி அதைப் புகழ்ந்திருக்கிறார். சொல்ப வார்த்தைகளை வைத்துக்கொண்டு கவி எவ்

வளவு பெரிய உணர்ச்சிகளை யெல்லாம் வாசக னின் உள்ளத்திலே தட்டி எழுப்பியிருக்கிறார்! ஆங்கிலத்தில் வந்திருக்கும் கீதாஞ்சலியில் உள்ள பாட்டுகளில் ஐம்பத்தியோர் பாட்டுகள் வங்க கீதாஞ்சலியிலிருந்து எடுக்கப்பட்டவை. சாந்தி நிகேதனத்தின் அழகும் அமைதியும் இந்த கீதங்களிலே ஒலிக்கின்றன. தாகூர் அன்பர் கள் பலர் — மேல் நாட்டிலும் சரி, கீழ்நாட்டி லும் சரி — முதல் முதலாகத் தாகூர் அன்பர் களானது இந்தப் புஸ்தகத்தினால்தான்; இன் னும் அவர்கள் தாகூர் அன்பர்களாக இருப் பதும் இந்தப் புஸ்தகத்தினால்தான் என்று சொல்லலாம். ஆங்கில கீதாஞ்சலியிலிருக்கும் நூற்றிமூணு பாட்டுகளில் ஒரு ஐம்பதுக்கு மேல் மனித ஜாதி உள்ள வரையில் மனிதர்களின் உள்ளத்திலே எதிரொலித்துக்கொண்டிருக்கும். கவி எழுதியிருக்கும் மற்ற புஸ்தகங்களைவிட இதிலேதான் இந்திய பாவம் நிறைந்திருக்கிறது என்று தாம்ப்ஸன் சொல்லுகிறார். எனினும் இவைதான் முதல் முதலாகத் தாகூரைக் கவி யாக உலகுக்குக் காட்டிக்கொடுத்தவை....

ஜீவனஸ்மிருதி, சாந்திநிகேதன கட்டுரைகள் முதலியவையும் இந்தக் காலத்தவைதாம். கவியாக மட்டுமின்றி வசன கர்த்தாவாகவும்

ரவீந்திரநாத தாகுர் இந்தப் புஸ்தகங்களால் உலக இலக்கியத்திலே மஹோன்னதமான இடம் பெறுகிறார்....1911-ல் அவர் மறுபடியும் கல்கத்தா சென்று பொது வாழ்வில் ஈடுபட முயன்றார். வெகு காலமாக க்ஷீண தசையிலிருந்த ஆதி பிரும்ம சமாஜத்துக்குப் புத்துயிர் கொடுக்க முயன்றார். ஆனால் அந்த முயற்சி பலனளிக்கவில்லை.... கவி மறுபடியும் தன் ஆசிரமத்துக்குள் மனமுடைந்து போய்ப் புகுந்து கொண்டார்.... 1911-ல் அவர் மறுபடியும் ஒருதரம் ஐரோப்பாவில் சுற்றுப் பிரயாணம் செய்வது என்று தீர்மானித்துக் கிளம்பும் சமயத்திலே வங்காளிகள் அவரைக் கொஞ்சம் தடைசெய்து நிறுத்திக்கொண்டனர். வங்க சாஹித்ய பரிஷத் அவருடைய ஐம்பதாவது பிறந்த தினத்தைக் கொண்டாட ஏற்பாடு செய்துகொண்டிருந்தது. வங்க சரித்திரத்திலே அதுவரையில் இல்லாத ஒரு மஹத்தான உத்ஸவம் அது. வங்காளத்திலே கவி ரவீந்திரரைப்பற்றி அப்போதிருந்த அபிப்பிராயத்துக்கும் மதிப்புக்கும் போதிய சாக்ஷி கல்கத்தாவில் 1912-ல், ஜனவரி மாசம் இருபத்தி எட்டாம் தேதி கவிக்கு மரியாதை செய்வதற்குக்கூடிய கூட்டம். அதுவரையில் தாங்கள் அப்படி யாரையும்போற்றிய

தில்லை, மதித்ததில்லை என்று வங்க தேசமக்களே அறிந்துகொண்டனர். அப்போது ஒரு போட்டோ கம்பெனியார், ஷேக்ஸ்பியர், கிதே, டால்ஸ்டாய், விக்டர் ஹ்யூகோ, பர்ன்ஸ், விட்மன், தாகுர் இந்த எழுவருடைய போட்டோக்களையும் அழகாகத் தயார்செய்து ஒரு புஸ்தகமாக ஒட்டி ஏராளமான பிரதிகளை விற்று லாபம் அடைந்தனர். அந்தப் புஸ்தகத்துக்கு மேலே சத்யேந்தரநாத தத்தர் என்ற வங்க கவி இரண்டு வரிகள் எழுதியிருந்தார்: "உலகத்துக் கவிகளிலே நீயும் சிறந்தவன் என்று அறிந்து வியந்து உன்னைப் போற்றிப் பெருமை அடைகிறோம். வங்காளி இன்று கீதங்களுக்கு அரசன்: வாயடைத்துப் போனவன் அல்ல!...."

7

ரவீந்திரர் உத்தேசித்திருந்த ஐரோப்பிய யாத்திரை அவர் உடம்பு சரியாயில்லாததால் இன்னும் சிலநாள் தடைபட்டது. வேறு ஒன்றும் செய்ய இயலாமல் படுக்கையில் கிடக்கும்போது அவர் தன்னுடைய கவிதைகள் சிலவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார். அதற்குமுன் அவர் ஆங்கிலத்தில் எதுவும் அதிகமாக எழுதியது கிடையாது....ஐரோப்பா செல்

வதற்குக் கப்பலேறிய பின்னும் இந்தமாதிரி அவர் மொழிபெயர்ப்புகள் செய்துகொண்டிருந் தார். இவைதான் பின்னர் ஆங்கிலத்தில் கீதாஞ்சலி என்ற பெயருடன் வெளிவந்தவை. லண்டனில் அந்தக் கவிதைகளை ஆங்கிலத்தில் படித்த கலைஞர் வில்லியம் ராதன்ஸ்டீன் அவைகளை வெகுவாகப் புகழ்ந்தார்; கவியை லண்டனில் பல பிரபல கவிகளுக்கும், விமர் சகர்களுக்கும் அறிமுகம் செய்துவைத்தார். ராதன்ஸ்டீனுடைய வீட்டிலேதான் முதல் முதலாக ஆண்ட்ரூஸ், கவி ஈட்ஸ் முதலியோர் ரவீந்திரரைச் சந்தித்தார்கள். ஒருநாள் மாலை கவி ரவீந்திரநாத தாகுருடைய ஆங்கிலமொழி பெயர்ப்புகளை ஈட்ஸ் அழகாகப் பலருக்கு வாசித்துக் காட்டினார். அந்த நாளை ரவீந்திர ரின் வாழ்க்கையிலேயே மிகவும் முக்யமான தோர் நாளாகக் கொள்ளலாம். அந்த தினத் துச் சம்பவங்களைப்பற்றி ஈட்ஸ், ஆண்ட்ரூஸ், ராதன்ஸ்டீன், எஸ்ராபவுண்டு முதலியோர் விரிவாக எழுதியிருக்கின்றனர். கவியும் அது பற்றி எழுதியிருக்கிறார். எஸ்ராபவுண்டு எனும் கவி கீதாஞ்சலியிலிருந்து சில பாட்டுகளை அமெரிக்காவில் "கவிதை" எனும் பத்திரி கையிலே வெளியிட ஏற்பாடு செய்தார். இந்தியாவுக்கு வெளியே முதல் முதலாக ரவீந்

திரநாத தாகுரின் கவிதை வெளிவந்தது அப்போதுதான்....ஆங்கில கீதாஞ்சலி 1912-ல் இந்தியா சங்கத்தால் வெளியிடப்பட்டது.... ஆங்கிலம் பேசுபவர்கள் எல்லோரும் அந்தக் கவிதைகளைப் படித்து, தங்களையும் மறந்து பரவசமாகி, தங்களிடையே தோன்றிவிட்ட மஹா கவியைப்பற்றிப் பேச ஆரம்பித்தனர். கவி அப்போது லண்டனில் செய்த பல பிரசங்கங்கள் ஸாதனு என்ற பெயருடன் பின்னர் ஆங்கிலத்தில் வெளியிடப்பட்டன....இங்கிலாந்தில் சில நாள் தங்கிவிட்டுக் கவி அமெரிக்கா சென்றார். அமெரிக்காவிலும் அவருடைய புகழ் பரவியிருந்தது. அவருடைய மூத்த பிள்ளை ரதீந்திரநாதர் அப்போது அமெரிக்காவில் ஒரு சர்வகலாசாலையில் படித்துக் கொண்டிருந்தார்....அமெரிக்காவில் பல பிரசங்கங்கள் செய்துவிட்டு ரவீந்திரர் ஸெப்டம்பர் 1913-ல் இந்தியா திரும்பினர். இந்தியாவிலே அவருடைய வரவேற்பு விவரிக்கும் தரமானதல்ல. பம்பாய்த் துறைமுகத்திலே கையில் மாலைகளுடன் காத்திருந்தவர்கள், பெரிய மனிதர்கள், தனக்காகத்தான் அப்படிக் காத்திருந்தார்கள் என்று கவியால் நம்ப முடியவில்லை.....

அவர் நேரே சாந்திநிகேதனத்தில் மறுபடியும் அமைதியும், தனிமையும் நாடிப் போய்

வெளி உலகையும், தன் புகழையும், பெயரையும் மறந்துவிட முயன்றார். ஆனால் வெளி உலகம் அவரை மறந்துவிடவில்லை. லண்டனில் இருக்கும்போது அவருக்குப் பரிச்சயமான சிலர் அவருடைய கவிதைகளை ஸ்வீடனில் நோபல் இலக்கியப் பரிசுக் கமிட்டிக்கு அனுப்பிவைத்திருந்தார்கள். அதன் பலனாக அவருக்கு 1913-ஆம் வருஷத்து நோபல் இலக்கியப் பரிசு கிடைத்தது. "நோபல் இலக்கியப் பரிசுகள் இலக்கிய மூலம் உலகிலே ஒரு லக்ஷியத்தை ஸ்தாபிக்க முயலுபவர்களுக்கே அளிக்கப்படவேணுமென்பது அதன் ஸ்தாபகரின் விருப்பம் .... இந்த விருப்பத்தை மனதில் வைத்துக்கொண்டு கவனிக்கும்போது, 1913-வரையிலும் சரி, அதற்கப்புறம் இந்தப் பல வருஷங்களிலும் சரி, நோபல் இலக்கியப் பரிசு பெற்றவர்களில் சிறந்தவராக இந்தியக் கவி ரவீந்திரநாத தாகுரைத் தான் சொல்ல வேணும்.... அவர் லக்ஷிய வழி எப்படிப் பட்ட லக்ஷியவழி என்பது அவருடைய எழுத்தில் ஒருவரி படித்திருப்பவருக்கும் தெரிந்திருக்கும்" என்று ஒரு அமெரிக்க விமர்சகர் 1933-ல் எழுதியிருக்கிறார்....இங்கிலாந்தில் மட்டமான கவிதை எழுதிப் பிரமாதப் படுத்திக் கொண்டிருந்த ஒரு சிறு பகுதி

னரைத் தவிர மற்றவருக்கெல்லாம் தாகுருக்கு நோபல் பரிசு கிடைத்தது சரிதான் என்றே தோன்றிற்று....ஐரோப்பாவில் மற்ற நாடுகளி லும் தாகுர் புஸ்தகங்கள் மொழிபெயர்க்கப் பட்டு மக்கள் உள்ளத்தைக் கொள்ளை கொண் டன .... இந்தியாவிலே கேட்கவேணுமா ? ரவீந்திரர்—நோபல் பரிசு—இதுதான் பேச்சு. ....நோபல் பரிசு என்றால் என்ன, அதன் மஹிமை என்ன, என்று அக்காலத்தில் பலருக் குத் தெரியாதுதான். இருந்தாலும் இந்தியா வுக்கு அதைப்பற்றி அளவுகடந்த பெருமை பிறந்தது....வங்காளத்தின் கவி ஒருவருக்கு உலகப் புகழ் கிடைத்து விட்டது....“ வங்காளி கள் இன்று ஊமையல்ல ” என்று 1912-ல் சத்யேந்தரநாத தத்தர் சொன்னது மெய் யாகி விட்டது .... கல்கத்தா சர்வகலாசாலை கவிக்கு டி. லிட். என்ற கௌரவப்பட்டம் அளிக்க முன்வந்தது. ஆங்கில சர்க்கார் 1914-ல் அவருக்கு ஸர் பட்டம் வழங்கினர்கள்....

இதையெல்லாம் மறந்துவிட்டு கவி தனக்கு உரிய கவிதை இயற்றும் காரியத்திலே ஈடுபட் டார். சாந்திநிகேதன வித்யாலயத்தை விஸ் தரித்து அமைக்க முயன்றார். கிராமப் புனருத் தாரண காரியத்திலீடுபட்டு சுரூள் என்ற கிராமத்

தில் கொஞ்சநாள் உழைத்தார்....1914-ல் கீதி மால்யா வெளிவந்தது. இதிலிருக்கும் கவிதைகள் எல்லாம் 1912-லிருந்து 1914-க்குள் எழுதப்பட்டவை. இதிலிருந்து ஆங்கில கீதாஞ்சலியில் 17 பாட்டுகள் சேர்க்கப்பட்டிருக்கின்றன. கீதங்களாகக் கவனித்தால் கீதிமால்யாதான் அவருடைய சிறந்த புஸ்தகம் என்று சொல்லலாம் என்று தாம்ப்ஸன் எழுதியிருக்கிறார்.... பால்குன் (ஆங்கிலத்தில் வஸந்தசக்கிரம்) எனும் நாடகம் 1915-ல் எழுதப்பட்டது. பங்கூரா ஜில்லாவில் பஞ்சத்தில் அடிபட்டுப் பசியால் வருந்திய மக்களுக்குப் பொருளுதவி செய்யும் பொருட்டு இந்த நாடகத்தை எழுதி கல்கத்தாவில் கவியே அதில் நடித்துக் காட்டினர். கதையாக, நாடகமாக, அது அவ்வளவாகப் பெரிய வெற்றியல்ல. ஆனால் அதில் இருக்கும் கீதங்களில் சிலவற்றை ரவீந்திரரின் மிகச் சிறந்தவை என்று சொல்லலாம். தபாலாபீஸைப் போல இதுவும் கவிக்கு மிகவும் பிடித்ததோர் நாடகம்....சற்றேறக்குறைய அதே சமயத்தில் வெளிவந்த பலாகா (நாரைகள்) எனும் கவிதைத்திரட்டுதான் அவருடைய புஸ்தகங்களில் சிறந்தது என்று தாம்ப்ஸன் சொல்லுகிறார். பாவமும், உருவமும் இதில் ஒவ்வொரு பாட்டிலும் அமைந்திருப்பதுபோல

வேறு எதிலும் அமையவில்லையாம். உள்ளம் எனும் பக்ஷி கடவுளைத் தேடிப் பறந்துகொண் டிருக்கிறது என்பதுதான் இந்தக் கவிதைகள் பலவற்றின் அந்தரார்த்தம். ஐரோப்பாவிலே அப்போது மஹா யுத்தம் ஆரம்பித்து நடந்து கொண்டிருந்தது. ஐரோப்பிய நாகரிகத்திலே அதுவரையில் வைத்திருந்த நம்பிக்கையை கவி இழந்து கொண்டிருந்தார். அவருடைய புண் பட்ட மனமும் உள்ளமும் இந்தக் கவிதைக் கடலிலே முழுகித் திளைத்து, ஒரு லக்ஷியத்தை சிருஷ்டித்துக்கொண்டு அமைதியும் ஆத ரவும் பெறமுயன்றன. இந்தப் புஸ்தகம் பிரெஞ்சு மொழியில் வெகு அழகாக மொழிபெயர்க்கப்பட்டிருக்கிறது. .... பால் கூன் எழுதியதற்கு அடுத்த மாதமே உட்கார்ந்து வெகு வேகமாகக் கவி கரே பாயிரே (வீடும் வெளியும்) என்ற நாவலை எழுதிமுடித்தார். இதற்குமுன் அவர் எழுதி வெளியிட்ட சதுரங்க எனும் நாவலும், சில சிறுகதைத்திரட்டு களும் அவ்வளவாக நன்றாக இல்லை. ஆனால் கரே பாயிரே ஒரு மேதையின் நாவல். சமூக சம்பந்தமான நாவல்; வங்கத்தின் அரசியல் விழிப்பை வெகு அழகாக, உண்மையுடன் அது விவரிக்கிறது. அதில் வரும் பாத் திரங்களையெல்லாம் கவி மிக அழகாக உருவகப்

படுத்தி யிருக்கிறார். மனித உள்ளத்தின் எல்லாக் கோணங்களையும் சரியாக அறிந்து எழுதியிருக்கிறார் கவி. ஆனால் வெகுநாள் அதை தேசபக்தர்கள் என்று சொல்லிக்கொண்டவர்களும், நல்லவர்கள் என்று சொல்லிக் கொண்டவர்களும் தூற்றினார்கள். அதில் தேசபக்தியும், புண்யமே ஜயம் என்ற கொள்கையும் கவனிக்கப்படவில்லை என்பது அவர்கள் கட்சி ....அது எப்படியானாலும் வங்க இலக்கியத்திலே இதைவிடச் சிறந்த நாவல் இல்லை என்று சொல்லலாம். ஆனால் வங்காளிகள், முக்யமாக சரத்சந்திரர்போன்ற வங்க நாவலாசிரியர்கள், தாகுரின் நாவல்களிலே சிறந்ததாக கோராவைத்தான் போற்றுகிறார்கள்.

கவி ரவீந்திரரை இங்கிலாந்தில் சந்தித்த சார்லீ ஆண்ட்ரூஸ் அதற்கடுத்த வருஷமே இந்தியா வந்து சேர்ந்துவிட்டார். சாந்தி நிகேதனம்தான் அவருக்கும் ஆசிரமமாக அமைந்தது. 1914-ல் சார்லீ ஆண்ட்ரூஸூம், வில்லீ பியர்ஸனும் கவியின் ஆசியுடன் தென்னாப்பிரிக்காவில் சத்தியாக்கிரஹ வீரர் மோஹன்தாஸ் காந்தியைச் சந்திக்கச் சென்றனர்....மோஹன்தாஸ் காந்தி பின்னர் தென்னாப்பிரிக்காவில் வெற்றியுடன் 1915-ல் இந்தியா

திரும்பியபோது தன் சிஷ்யர்களுடன் சில காலம் சாந்திநிகேதனத்திலே கவி ரவீந்திரருடன் தங்கினர் .... ஆண்ட்ரூஸ், காந்தி, தாகுர்....1910-லிருந்து இன்றுவரையில் இந்தியாவின் சரித்திரத்தை மிகவும் சுருக்கமாக, ஆனல் தெளிவாகச் சொல்லக்கூடிய மந்திரங்கள் இந்த மூன்று வார்த்தைகளும் !....

1916-ல் நடந்த ஒரு சம்பவம் கவியின் மனதை மிகவும் புண்படுத்தியது. கல்கத்தா கல்லூரி மாணவர்கள் சிலர் ஒரு ஆங்கிலேயனைத் தாக்கித் துன்புறுத்தினர்....அப்போது அது விஷயமாக நடந்த விவாதங்களிலும் இயக்கங்களிலும் கவி தாகுர் கலந்துகொண்டார். அது பெரிய அரசியல் இயக்கமாக முடியும்போலிருந்தது. தாகுர் நாளடைவில் அதிலிருந்து விலகிக்கொண்டு விட்டார் எனினும் அதில் அவர் ஆதரித்த கட்சி வங்கப் பொது மக்களுக்கு உகந்ததாக இல்லை. அவரைப் பலர் மிகவும் இழிவாகவும், கேவலமாகவும் பேச ஆரம்பித்தனர்....பால்குன், கரே பாயிரே இவற்றையும் வங்க விமர்சகர்கள் வேறு ஏதோ ஆத்திரத்தை வைத்துக்கொண்டு மஹா கேவலமாகத் தாக்கினர்கள்....இதனலெல்லாம் கவியின் மனதிலே தோன்றிய கசப்பு வெகுநாள் அகலவில்லை என்று தாம்ப்ஸன் எழுதியிருக்

கிறார்....உலகைத் துறந்து சந்நியாசி யாகிவிட லாமா என்றுகூடக் கவி யோசித்தாராம்! சாந்திநிகேதனத்திலேயும் அவருக்குச் சாந்தி கிடைக்கவில்லை....தன் கவலைகளையும் கசப்பையும் மறக்க அவர் வெளிநாடுகளில் பிரயாணம் செய்வது என்று தீர்மானித்தார். மே, 1916-ல் அவர் ஜப்பானுக்குச் சென்றார். போகும் வழியில், கப்பலில், க்ஷணிகா என்ற அவருடைய கவிதையிலிருந்து மொழிபெயர்க்கப்பட்டவைதான் பின்னர் **தனிப் பக்ஷிகள்** என்ற பெயருடன் வெளிவந்த ஆங்கில நூல். **ஜப்பான் யாத்ரீ** என்று பிரயாணக் குறிப்புகளும் எழுதினார். கப்பலிலே அவர் ஒரு வாரத்துக்குள் **மாலினி, தியாகம், பிரக்ருதிர்ப்ரதிசோத, ராஜா ஓ ராணி** என்ற நாலு நாடகங்களையும் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தார்....ஜப்பானிலிருந்து அவர் அமெரிக்கா சென்றார். ஜப்பானிலும், அமெரிக்காவிலும் அவர் செய்த ஆங்கிலப் பிரசங்கங்கள் **தேசீயம், மனுஷ்யத்வம்** என்ற பெயருடன் வெளிவந்திருக்கின்றன.... **தேசீயம்** என்பதில் அடங்கியிருக்கும் பிரசங்கங்களில் கவி மேல்நாட்டு நாகரிகத்தின்; சக்தி அம்சங்களை, அதிகாரவெறியை, கண்டித்திருக்கிறார். தனியாகத் தேசம் என்று உலகிலே கிடையாது; எல்லா மனிதர்களும் சகோதரர்

கள் என்ற கொள்கையைத் தெளிவாக எடுத்துச் சொல்லி யிருக்கிருர்........இவைகளை யெல்லாம் அவர் இந்திய தேசீயப்பிரச்னையை அடிப்படையாக வைத்துக்கொண்டு சொல்லியிருக்கிருர். ஒவ்வொரு இந்தியனும் — ஐரோப்பியனும், படிக்கவேண்டிய நூல் அது...

8

அமெரிக்காவிலே செய்த பிரசங்கங்களின் பயஞக கவியின் வித்யாலயத்துக்குக் கொஞ்சம் பணம் கிடைத்தது. கவி இந்த நாட்களிலிருந்து தன் ஆயுளையும் பொருளையும் சாந்திநிகேதனத்தில் தன் வித்யாலயத்துக்கு அளிப்பது என்று தீர்மானித்துவிட்டார்....அப்படியும் அமெரிக்கப் பிரயாணத்தின்போது ஏற்பட்ட ஆயாசமும், அவரைப்பற்றி எழுந்த பத்திரிகைக் கதைகளும் வம்புகளும் அடங்க வெகு காலம் பிடித்தது. இது தாளாமல்தான் கவி தன் அமெரிக்க விஜயத்தைப் பாதியிலேயே நிறுத்திக்கொண்டு மார்ச் 1917-ல் சாந்திநிகேதனத்துக்குத் திரும்பிவிட்டார்.....1918-ல் அவருடைய மூத்த பெண் மதுரிலதா மரணமடைந்தாள்....இந்த இரண்டு மூன்று வருஷங்கள் கவியின் வாழ்க்கையிலே மிகவும் கஷ்டமானவையாக இருந்தன. ஆனல் எவ்வளவோ

மஹான்களைப்போல தாகுர் தனது கஷ்டங்களையும், துக்கங்களையும் சஹித்துக்கொண்டு, உலகு உய்ய வாழக் கற்றவராக இருந்தார்··· "ரஸ்கின், டால்ஸ்டாய், இந்த இரண்டு மஹான்களின் வாழ்க்கையிலும் தாகுருடையது போன்ற துக்ககரமான சம்பவங்கள் இருந்தன; அவர்களுக்கும் அவற்றையெல்லாம் மீறி ஆத்ம ஒளியை இழந்துவிடாமல் இருக்கும் சக்தி இருந்தது"...குரு என்ற வசன நாடகமும், பலாதகா (ஓடிப்போனவன்) என்ற கவிதைத் திரட்டும், லீபிகா என்ற கட்டுரைத் திரட்டும் இந்தக் காலத்தைச் சேர்ந்தவை....

1919-ல் நடந்த பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து ரவீந்திரர் தன் ஸர் பட்டத்தைத் துறந்தார். அவர் அப்போது ராஜப்பிரதிநிதிக்கு எழுதிய கடிதம் அவருடைய கொள்கைகளை நன்கு விளக்குகிறது; பஞ்சாப் படுகொலையை ஆத்திரத்துடன்கண்டித்திருக்கிறது. ஆங்கிலேயர்களிடமும், அவர்களுடைய நாகரிகத்திலும் அவருக்கு அதுவரையில் கொஞ்சநஞ்சமிருந்த நம்பிக்கையும் போய்விட்டது. ஆனால் அவருக்கு இது காரணமாக மகாத்மா காந்தி ஆரம்பித்த சுதேச இயக்கத்திலும் நம்பிக்கை பிறக்கவில்லை. "அஹிம்சை என்ற தத்வம் உண்மையானது; மனித வாழ்வுக்கே

அடிப்படையானது; எதையும் எதிர்த்து நின்று போராடி வெற்றிகொள்ளக் கூடியது...ஆனால் அது அரசியலில் ஓர் ஆயுதமாக உபயோகப் படாது என்றுதான் நான் நினைக்கிறேன். அது மனிதன் உள்ளத்திலே தக்க பண்பினால், தானாகவே பிறக்கவேணும்...ஒரு அவசரத்தில், ஒரு அரசியல் இயக்கத்தின் நெருக்கடியிலே, அது ஜனங்கள் மனதிலே ஆதிக்கம் செலுத்து வது என்பது நடக்காத காரியம்" என்று தாகுர் அப்போது சொன்னாராம். இது எவ் வளவு உண்மையான விஷயம் என்று மகாத்மா காந்தியே சில நாளைக்கெல்லாம் ஒப்புக்கொள்ள வேண்டி வந்துவிட்டது...இந்தியாவின் பழைய கல்வி முறைகளையும், பண்பையும் அறிந்து கொள்ளச் செய்த முயற்சிகளினால் கவிக்குச் சிறிது ஆறுதல் ஏற்பட்டது. ஆனால் அது அவருடைய ஆத்மாவுக்கு அமைதியளிக்கப் போதியதாக இல்லை......இந்த மஹாகவியின் வாழ்க்கையிலே கவிதை எழுத மனமோ, தூண்டுதலோ, ஆர்வமோ இல்லாது கழிந்த நாட்கள் இவைதான் என்று சொல்லலாம்......

1919-ல் கவி ரவீந்திரர் இந்தியாவிலேயே சுற்றுப் பிரயாணம் செய்தார். சென்னை மாகா ணத்திலும் பல இடங்களில் பிரசங்கங்கள் செய்தார். சென்னையில் அன்னி பெஸண்டுடன்

தங்கினர்....அப்புறம் 1920-ல் மறுபடியும் ஒரு தரம் மேல்நாட்டில் சுற்றுப் பிரயாணம் செய்யக் கிளம்பினர். ஆனல் இந்தத் தடவை இங்கிலாந்தில் அவருடைய வரவேற்பு முன்போ லில்லை. ஆங்கிலேயர்கள் அவர் மஹாகவி என்பதை மறந்துவிட்டனர்; அவர் இந்தியர், தேசீயவாதி, தங்களையும் தங்கள் நாகரிகத்தை யும் காரமாகக் கண்டித்தவர் என்பதை மட்டும் தான் ஞாபகத்தில் வைத்திருந்தனர். அமெரிக் காவிலும் அவருக்குச் சரியான வரவேற்புக் கிடைக்கவில்லை. முன்னர் வாயாரப் போற் றிப் புகழ்ந்தவர்கள் அவரை இந்தத் தடவை கவனிக்கவே மறுத்தனர். ஆனல் பிரான்சு, டென்மார்க், ஸ்வீடன் முதலிய தேசங்களிலும், முக்யமாக ஜெர்மனியிலும் அவருடைய புகழ் முன்னிலும் ஓங்கிப் பெருகி இருந்தது.....சாந்தி நிகேதனத்தின் லக்ஷியங்களை அவர் சொல் லக்கேட்ட பலர் அவருக்கு உதவிசெய்ய முன் வந்தனர். முக்யமாக ஜெர்மனியிலே அவ ருக்குக் கிடைத்த வரவேற்பும் புகழும் அவருக் குப் பெருமையைத் தந்தன........“என்னையும் என் எழுத்துக்களையும் இங்கு எல்லோரும் வெகு அருமையுடன் பாராட்டுகிறார்கள். அங்கே, வங்கத்தில், என் ஊரில், எல்லோரும் என்னை ஏதாவது சாக்கை முன்னிட்டுத் திட்டு

கிறார்கள் : மதிப்பதில்லை ; எனினும் எனக்கு என் ஊர் திரும்பவேணும் என்று ஆசைதான் தோணுகிறது....'' என்று கவி அப்போது எழுதினர். அவர் இந்தியாவை விட்டுக் கிளம்பி பதினறு மாதங்களுக்கு மேல் ஆகிவிட்டன.... இந்த சுற்றுப் பிரயாணத்திலே அவருக்கு ஒரு புது நம்பிக்கையும் ஆசையும் பிறந்தது. சாந்திநிகேதனத்தில் இவ்வளவுநாள் ஒரு சின்ன வித்யாலயத்தை நடத்தி வந்த அவர் இப்போது விசுவபாரதி என்ற ஒரு சர்வகலாசாலையை, பண்புப் பண்ணையை, நிறுவ முயன்ருர்....உலக நாகரிகத்துக்கும், கலைக்கும், இலக்கியத்துக்கும் அது இருப்பிடமாக இருக்க வேணுமென்று அவர் விரும்பினர். விசுவபாரதி 1921-ல் டிசம்பர் மாதம் 22-ந்தேதி ஆரம்பிக்கப் பட்டது. ஸில்வேன் லெவி எனும் நிபுணர் அவருக்கு விசுவபாரதியில் ஒத்தாசைசெய்ய ஹார்வார்டு சர்வகலாசாலையிலிருந்து வந்தார்....

ஆனல், ஒரு கவியின் கனவாகிய விசுவபாரதியை நிறுவ அது சரியான சமயம் அல்ல. இந்தியாவிலே ஒத்துழையாமை இயக்கம் மகாத்மா காந்தியின் தலைமையில் நடந்து கொண்டிருந்தது. கவி பல நாட்டு நாகரிகங்களை ஒன்றுசேர்த்து ஒரு புது நாகரிகத்தையும்

அமைதியையும் உலகுக்குத் தரவேண்டுமென்று ஆவல் கொண்டிருந்தார். மகாத்மா இந்தியாவில் சுதேசி என்ற மந்திரத்தால் ஒரு மதத்தையே ஸ்தாபிக்க முயன்று கொண்டிருந்தார். இந்த சுதேசி இயக்கம் விதேசிகளிடம் வெறுப்பு என்று எழும்போது கவியின் உள்ளம் புண் பட்டது. அப்பொழுதுதான் கவி மேல்நாடு களில் சகோதரத்வத்தைப் பற்றி அழகாகப் பேசிவிட்டு வந்திருந்தார். அதற்குள் இந்த சகோதரத்வத்தின் பிறப்பிடம், வளர்ப்பிடம் என்று கவி சொன்ன இந்தியாவிலேயே இந்த வெறுப்பு தாண்டவமாடிக் கொண் டிருந்தது. மகாத்மா காந்தியிடம் அவருக்கு அன்பிருந்தது; ஆனால் அவருடைய இந்த பகிஷ்காரக் கொள்கையிலே நம்பிக்கையில்லை. கவியின் நண்பர் ஆண்ட்ருஸுக்கும் இதிலே நம்பிக்கையில்லை. இருவரும் மகாத்மாவுடன் விவாதித்துப் பார்த்தனர். ஆனால் மகாதமா நிம்மதியாகக் கவியை “சத்யம் தவறி விடாமல் காப்பவர்” என்று ஒரு ஷொட்டுக் கொடுத் துச் சொல்லிவிட்டுத் தன் வழி சென்றார்....

....கவி ரவீந்திரருக்குத் தன் கவிதை வழியை யும், கல்வி வழியையும் பின்பற்றவேதான் மனமிருந்தது.....அரசியலில் அகப்பட்டுக்கொள் ளாமல் இருக்க வழி தேடிக்கொண்டார்......

வெகுநாட்களாகவே அவர் மனதில் இருந்த இன்னொரு காரியமும் இப்பொழுது நிறைவேறிற்று. 1922-ல் விசுவபாரதியிலே ஸ்ரீநிகேதனம் எனும் கிராமப் புனருத்தாரண, சமூக சீர்திருத்த, கைத்தொழில் இலாகா ஆரம்பிக்கப் பட்டது......

கவி ரவீந்திரருக்கு இப்போது வயது அறுபதுக்கு மேலாகிவிட்டது. எனினும் அவருடைய எழுத்து வன்மையோ, கல்பனு சக்தியோ குன்றிவிடவில்லை. மேல்நாட்டு விஜயத்தின்போது அவர்செய்த பல ஆங்கிலப் பிரசங்கங்களைச் சேர்த்து சிருஷ்டி லயம் என்ற பெயருடன் வெளியிட்டிருக்கிறார். அவருடைய வசனங்களிலே இதைத்தான் மிகவும் சிறந்ததாகச் சொல்லவேணும். சிசுபோலாநாத என்ற குழந்தைக் கவிதைகளை அவர் இந்தக் காலத்தில் எழுதினர். முக்த தாரா (சுதந்திர அருவி) என்னும் வசன நாடகமும் எழுதினர். இது அவருடைய அரசியல் கொள்கைகளை விளக்கிக் காட்டுகிறது. இவை தவிர அவர் 1921-ல் எழுதிய வர்ஷாமங்கள் எனும் சங்கீத நாடகமும் ரொம்ப உயர்ந்த சிருஷ்டிதான்........

9

1923-க் கப்புறம் கவி ரவீந்திரரின் வாழ்க்கையில் நடந்ததெல்லாம் இந்தப் புஸ்தகத்தின்

வாசகர்கள் எல்லோருக்கும் அநேகமாகத் தெரிந்திருக்கும். அதை அவ்வளவாக விரிவாகச் சொல்லவேண்டிய அவசியம் இராது என்றே நினைக்கிறேன்....

1930 வரையில், ஏழு வருஷங்களில், அவர் ஒரு ஏழெட்டுத் தரம் உலகெலாம் சுற்றிவந்தார். பர்மா, மலேயா, சைனு, ஜப்பான், தென் அமெரிக்கா, இதாலி, ஸ்விட்ஜர்லாந்து, ஆஸ்திரியா, பிரான்சு, இங்கிலாந்து, நார்வே, ஸ்வீடன், டென்மார்க், ஜெர்மனி, செக்கோஸ்லவேகியா, ஹங்கேரி, யுகோஸ்லாவியா, பல்கேரியா, ருமேனியா, டர்கீ, க்ரீஸ், எகிப்து, ஜாவா, பாலி, ஸையாம், கனடா, இண்டோ சீனு, அமெரிக்கா ரஷியா — எல்லாத் தேசங்களுக்கும் போனுர். உலகுக்கெல்லாம் தன்னுடைய விசுவபாரதியின் லக்ஷியங்களை அறிவித்து உதவிபெறுவது தான் அவருடைய இந்த விஜயங்களின் முக்ய நோக்கம். எல்லாத்தேசங்களிலும் அவரை இந்தியாவின் இன்றைய மிகச் சிறந்த சின்னமாக, தூதுவராக வரவேற்று அங்கீகரித்துப் புகழ்மாலை சூட்டினுர்கள்... இவ்வளவு அலைச்சல்களுக்கிடையிலும் அவருடைய இலக்கிய வேலை குறைந்துவிடவில்லை. இந்த ஏழு வருஷங்களில் எழுதப்பட்ட புஸ்தகங்களின் பெயரை மட்டும் இங்கு சொல்லுவதுடன் நிறுத்

திக் கொள்ளுகிறேன்......ரக்த கரபி; கிருஹப்ர வேஸ்; சோத்போத்; நடிர்பூஜா; ருது உத்ஸவ்; ருது ரங்க; பரித்ரான்; தபதி; இவை வசன நாடகங்கள். பூரபி; பிரவாஹினி; சேஷேர்கவிதா; லேகன்; கவிதை கள். சேஷ்வர்ஷன், நடராஜ், நவீன், கீதஉத்ஸவ்; இவை சங்கீத, காவ்ய நாடகங்கள். இவையெல் லாம் தவிர பல பிரயாணக் கட்டுரைகளும், யோகாயோக் (குமுதினி) என்ற நாவலும், ஆங்கி லத்தில் மின்மினிகள் என்ற புஸ்தகமும் இந்தக் காலத்தில் வெளிவந்தவைதான்...இவைகள் எல் லாவற்றிலும் கவியின் மேதை பிரகாசிக்கிறது என்று பொதுவாகச் சொல்லலாம். ஒவ்வொன் ருக அலசிப்பார்க்க இடமுமில்லே; அவசியமு மில்லே என்றே நினைக்கிறேன். ஏனென்ருல் கவியின் அனுபவமும், அறிவும், லக்ஷியங்களும் விரிந்து விசாலிக்கின்றனவே தவிர அவருடைய இலக்கிய பாணியிலே இனிமேல் மாறுதல் ஏற்பட இடமில்லே: ஏற்படமுடியாது.

ஆனல் 1930-ல் அவர் உலகெலாம் பிரமிக்கத்தக்க காரியம் ஒன்று செய்தார். அப்போது அவருக்கு எழுபது வயது ஆகி விட்டது ... கவி, நாடகாசிரியர், பிரசங்கி, விசுவ பாரதியின் தலைவர்...அவர் 1930-ல் உலகச் சைத்திரிகர்களிடையிலும் இடம் பெற முயற்சித்தார். அவருடைய சித்திரங்களைப்

பற்றி விவாதிக்க எனக்குக் கலையிலே போதிய ஞானம் கிடையாது. ஆனால் அவைகளைப் பார்த்திருக்கும் யாரும் அவை மற்ற எல்லோருடைய சித்திரங்களினின்றும் வேறுபட்டிருக்கின்றன என்பதை மறுக்க முடியாது.... "மலர் என்பது எவ்வளவு உண்மையோ அவ்வளவு உண்மை என் சித்திரங்கள். ஒரு மலரை நீ ஏன் மலராக இருக்கிறாய் என்று யாராவது கேட்பார்களா ?'' என்று கவியே தன் சித்திரங்களைப்பற்றிச் சொல்லியிருக்கிறார். "தாகுரின் சித்திரங்கள் குழந்தைக் கிறுக்கல் அல்ல. குழந்தையின் உள்ளத்தை, கல்பனையைக் காட்டும் கலை'' என்று அவை பற்றிப் பிரபல கலாவிமர்சகர் ஆனந்த குமாரசாமி விமர்சனம் செய்திருக்கிறார். அதைப்பற்றிப் பேச லாயக்குள்ளவர்கள் எல்லோரும் மரியாதையாகவேதான் பேசுகிறார்கள்....என்ன சொன்னாலும் ஒரு புதுக் கலையை அந்த வயதிலே கற்றுக்கொண்டு, அதில் மேன்மை பெற முயற்சிசெய்ததே பெரிதுதானே !...

ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையில் 1930-ல் அவர் செய்த ஹிப்பர்ட் பிரசங்கங்கள் **மனிதனுடைய மதம்** என்ற பெயருடன் பிரசுரமாயிருக்கின்றன. இதிலே அவருடைய முதிர்ந்த ஞானமும், கவி அனுபவங்களும், சிந்தனைத்

தெளிவும், லக்ஷியக் கொள்கைகளும் அழகாக அமைந்திருக்கின்றன........ரஷியாவிலிருந்து கவி எழுதிய ரஷ்யேர் சிட்டி என்ற கடிதங்களில் அவர் அரசியல், சமூக சம்பந்தமான பல விஷயங்களை வெகு தெளிவாக எடுத்து அலசியிருக்கிறார் ... விசுவபாரதி பள்ளிக்கூடத்திலும், சர்வகலா சாலையிலும் உபயோகப்படக்கூடிய பல பாடபுஸ்தகங்களை, இலக்கியம், சரித்திரம், விஞ்ஞானம், தத்துவம், எல்லா விஷயங்களையும் பற்றி, எழுதி வெளியிட்டிருக்கிறார்......சேஷ சப்தக், ஸே, பிராந்திக, ஸேஞ்ஜுதி, பிரஹாஸினி, ஆகாஷ்பிரதீப், நவஜாதக போன்ற அவருடைய பல கவிதைத் திரட்டுகள் அவருடைய வாழ்க்கையின் இந்தக் கடைசிப் பகுதியைச் சேர்ந்தவைதான். தாகூர் அன்பர்கள், வங்க பாஷையிலே இதைப் படித்தவர்கள், அவருடைய கல்பனையோ, சிருஷ்டி சக்தியோ, பாஷா விலாஸமோ குறைந்துவிடவில்லை என்றுதான் சொல்லுகிறார்கள். அவருடைய வாலிபத்தில் எழுதப்பட்ட பல பாட்டுகளுடன் இவைகளிற் சில, கவியின் எழுத்திலே சிறந்தவை என்று இடம் பெறக்கூடியவை என்கிறார்கள். உடல் நிலை சரியாயில்லாமலிருந்து சற்றுத் தேறி 1941 ஆரம்பத்தில் அவர் படுக்கையில் கிடக்

கும்போது ஆரோக்ய என்று 33 கவிதைகள் கொண்ட ஒரு புஸ்தகத்தை எழுதி வெளியிட்டார்... நாடக அறுவடையும் இந்தக் கடைசிப் பத்து வருஷங்களில் குறைந்துவிடவில்லை. தாஸேர்தேஷ் (சீட்டுக்கட்டுதேசம்), சண்டாலிகா, ஷியாமா போன்ற நாட்டிய சங்கீத நாடகங்கள் அவர் அன்பர்களுக்கு ஒரு விருந்தாக அமைந்தன... சேஷேர் கவிதா, துயிபோன், சார் அத்தியாய், கல்பஸல்ப (1940) இவையெல்லாம் நாவல்களும் கதைகளும்...... சேலேபேலா என்று அவர் தன்னுடைய சிறு வயது ஞாபகங்களைப்பற்றி எழுதியிருக்கும் கட்டுரைகள் வெகு அற்புதமான வசன நூலாய் அமைந்திருக்கின்றன.. ..

வயதாகி விட்டது என்பதனால் கவியின் விசுவபாரதி சேவையோ, பொதுஜன சேவையோ குன்றிவிடவில்லை......1933-ல் கவி ஈரான் போய்விட்டு வந்தார்......1934-ல் சிங்களத்திலும், பின்னர் சென்னை மாகாணத்திலும் சுற்றுப் பிரயாணம் செய்தார்....1937-ல் அவர் கல்கத்தா சர்வகலாசாலை பட்டமளிப்பு விழாவின்போது செய்த பிரசங்கம் இந்திய சரித்திரத்திலே இடம் பெறும். அங்குதான் முதல் முதலாக ஒரு இந்திய சர்வகலாசாலையின் பட்டமளிப்பு விழாப் பிரசங்கம் இந்தியர்களின்

தாய் பாஷை ஒன்றிலே செய்யப்பட்டதாகும். ……1940-லே ஆக்ஸ்போர்டு சர்வகலாசாலை யின் கௌரவ டி. லிட். பட்டம் அவருக்கு அளிக்கப்பட்டது… கவியால் அப்போதிருந்த தேக நிலைமையில் பட்டத்தைப் பெற்றுக் கொள்ள இங்கிலாந்து செல்ல முடியாதாகை யால் சாந்திநிகேதனத்திலேயே ஆக்ஸ்போர்ட் சர்வகலாசாலையின் சார்பாக ஸர் மாரிஸ் க்வையர் போய் பட்டத்தை ரவீந்திரருக்கு அளித்தார். அது சமீபத்தில் நடந்த சம்பவம்; இந்தியர்களுக்கே பெருமை அளித்த ஒரு சம் பவம்……..

இந்தப் பத்து வருஷங்களில் கவி அரசிய லில் இரவு பகல் ஈடுபட்டு உழைத்தது கிடை யாது என்பது வாஸ்தவந்தான். ஆனால், இந்தியாவின் அரசியலில் நெருக்கடி நேர்ந்த போதெல்லாம் அவர் இந்தியாவின் லக்ஷியங் களைத் தெளிவாக எடுத்துச் சொல்லி விட்ட அறிக்கைகள் மக்களுக்கு ஆதரவாகவும், நம் பிக்கை தருவனவாகவும் இருந்தன. மகாத்மா காந்திக்கு ஈடாக, இந்திய அரசியல் வானிலே, எல்லோராலும் மதிக்கப்பட்ட கண்யமான மஹா புருஷன் கவி ரவீந்திரநாத தாகுர்தான்… 1931-ல் அவர் லண்டன் டைம்ஸ் பத்திரிகைக்கு எழுதிய கடிதத்திலே இந்தியாவின் சுதந்திர

லக்ஷியத்தை வெகு அழுத்தமாகக் கூறி, இந்தியாவுக்கும், இங்கிலாந்துக்கும் இடையே நட்பும் சகோதரத்வமும் வளர்ந்தாலொழிய மனித ஜாதிக்கே உய்ய வழி கிடையாதென்பதைச் சொல்லியிருக்கிறார் ... மகாத்மா காந்தியின் இயக்கங்கள் எல்லாவற்றுக்கும் கவி ஆதரவும், தன்னாலான ஒத்துழைப்பும் கொடுத்திருக்கிறார். ....மகாத்மா உபவாசமிருந்த போதெல்லாம் தாகுர் விசுவபாரதியில் விடுமுறை கொடுத்து, எல்லோரும் நாட்டின் க்ஷேமத்துக்கும், மகாத்மாவின் க்ஷேமத்துக்கும் கடவுளைப் பிரார்த்திக்கவேணும் என்று ஏற்பாடுகள் செய்திருந்தார்...மகாத்மாவுக்கும், கவியரசருக்கும் பல விஷயங்களில், கொள்கைகளில் வேறுபாடுகள் இருந்தன எனினும், அதனால் அவர்களுடைய பரஸ்பர நட்புக்கோ, மதிப்புக்கோ பங்கம் வந்து விடவில்லை...உள்நாட்டு வியவகாரங்களில் மட்டு மின்றி, பல அயல் நாட்டு வியவகாரங்களைப் பற்றியும் கவியரசர் பல அறிக்கைகள் வெளியிட்டு, இந்தியாவின் லக்ஷியத்தைத் தெளிவாக்கி, உலகைச் சீர்திருத்த முயன்றார்...ஸ்பெயின் உள்நாட்டு யுத்தத்தின் போதும், சீன ஜப்பான் யுத்த ஆரம்பத்தின் போதும் அவர் வெளியிட்ட அறிக்கைகளும், செய்த பிரசங்கங்களும் மனித ஜாதிக்கே உய்ய

வழி காட்டும் கொள்கைகள் கொண்டவையாக இருந்தன. ஆனால் எல்லோரும் "சரிதான்" என்று ஒப்புக்கொண்டார்களே தவிர, யுத்தங்கள் நடக்கத்தான் நடந்தன....நடந்துகொண்டுதானிருக்கின்றன....இரண்டாவது மஹா யுத்தம் ஆரம்பித்தபோது மஹாகவியின் உள்ளம் உடைந்துவிட்டது என்றே சொல்லவேணும்.... ....அவருடைய எண்பத்தியோராவது பிறந்த தினக் கொண்டாட்டத்திலே கவி விசுவபாரதி மாணவர்களுக்கு "நாகரிகத்தின் அந்தம்" என்று ஒரு பிரசங்கம் செய்தார் (ஏப்ரல் 14,1941.) அதிலே கவியின் உள்ளத்திலிருந்த ஏமாற்றமும், சோகமும், ஆர்வமும், ஆத்திரமும், லேசான ஒரு நம்பிக்கையும் த்வனிக்கின்றன... எலியனர் ராத்போன் என்ற ஆங்கிலமாது (ஒரு பார்லிமெண்ட் அங்கத்தினர்) யுத்தத்தில் இந்தியா சேராமல் அசிரத்தை காட்டுவது பற்றி எழுதிய பகிரங்கக் கடிதத்துக்கு கவி விடுத்த பதில் இந்தியாவுக்கு அவருடைய கடைசி சேவை.

1937 முதலே கவி ரவீந்திரநாத தாகுருக்கு உடம்பு சரியாக இல்லை. 1941 ஆகஸ்டு மாதம் ஏழாந்தேதி அவர் தான் பிறந்த ஊரிலே, தான் பிறந்த வீட்டிலேயே, மரணமடைந்தார்....

10

எண்பது வருஷங்கள்!....இந்தியதேச சரித்திரத்திலே எண்பது வருஷங்கள் சொல்ப காலம்தான்...

"வயது எழுபதுதானாகிறதா உனக்கு? எழுபதுதானா? உன் அனுபவங்களையும், கவிதையையும், ஞானத்தையும், உனக்கிருக்கும் மதிப்பையும், நீ சாதித்திருக்கும் காரியங்களையும் எண்ணிப் பார்க்கும்போது நீ எழுபது அல்ல: எழுநூறும் அல்ல: ஏழாயிரம் வருஷங்களாக வாழ்ந்திருப்பவன் என்றல்லவோ எனக்குத் தோணுகிறது" என்று கவி தாகுருடைய எழுபதாவது வயதிலே அவருடைய நண்பர் ஒருவர் அவருக்குக் கடிதம் எழுதினாராம்.....

மஹா கவி சாஹித்திய கர்த்தா : நாடகாசிரியர் ; நாவலாசிரியர் ; சிறு கதையாளர்...விமர்சகர் ... வசன கர்த்தா ... உலகுக்கு இந்திய நாகரிகத்தின் தூதர்...தத்துவ ஞானி...கலைஞர் ... பிரசங்கி .... சைத்திரிகர்... சத்யத்தின் காவலாளர் ..... குருதேவர் ...... மஹாகவி ரவீந்திரநாத தாகுர் பரிபூர்ணமான வாழ்வு வாழ்ந்தவர்......

சில சம்பவங்கள்

[இந்தப் பகுதியில் உள்ள விஷயங்கள் எல்லாம் பலர் பல் வேறு சமயங்களில் எழுதிவைத்திருக்கும் குறிப்புகளினின்றும் தொகுக்கப்பட்டவை. இவை காலரீதியாக ஒரு வரிசையில் இல்லை...இந்தப் பகுதியின் நோக்கம் ரவீந்திரநாத தாகுரை வாசகர்கள் கவியாகவும், மனிதனுகவும், குருதேவராகவும் தங்கள் மனதில் உருவகமாக்கிக் கொள்ளவேணும் என்பதுதான். சில சம்பவங்களால் அவருடைய கொள்கைகள் சில தெரியவரும்.]

1

தனது கடைசிப் பிள்ளை கவிதை எழுதுகிறுன் என்று கேள்விப்பட்டபோது முதலில் மஹரிஷி தேவேந்திரநாத தாகுருக்குச் சிரிப்பு வந்தது. மற்றவர்களுடன் சேர்ந்துகொண்டு அவரும் சிறுவன் ரவீந்திரனுடைய முயற்சிகளைக் கேலி செய்தார். ஆனல் சில நாளைக்கெல்லாம் அவர் தன் பிள்ளையின் கவிதைகளில் நம்பிக்கை வைக்க ஆரம்பித்தார்....

அவருக்கு உடம்பு சரியாயில்லாதபோது ஒரு சமயம் அவர் தன்னுடைய பிள்ளையை அழைத்து அவன் எழுதிய பாடல்கள் சிலவற்றைப் பாடச் சொல்லிக் கேட்டு ஆனந்தித்தார். சில பாடல்களை அவர் இரண்டு மூனுதரம் பாடச் சொல்லிக் கேட்டார். ரவீந்திரர் பாடியானதும் மஹரிஷி சொன்னர்: "வங்க மொழி நமது சக்ரவர்த்திக்குத் தெரியாது. நமது இலக்கியத்தின் வளமும் அவருக்குத் தெரியாது. தெரிந்திருந்து, நீ அவரிடம் போய் இன்று என் முன் பாடியதுபோல அவர் முன் பாடியிருந்தால், அவர் தக்கபடி கவிக்குச் சன்மானம் அளித்திருப்பார்....அது நடக்காத காரியம். அதனல் நான்தான் உனக்குச் சன்மானம் அளிக்கவேணும்." இப்படிச் சொல்லிக் கொண்டே அவர் கவி ரவீந்திரருக்குச் சன்மானமாக ஒரு 'செக்' எழுதிக் கொடுத்தாராம்....இது ரவீந்திரருடைய பதினலாவது வயதில் நடந்த ஒரு சம்பவம்....

2

ஸந்தியா சங்கீதங்கள் வெளிவந்த புதுசு.... ரமேஷ் சந்திர தத்தரின் மூத்த பெண்ணின் கலியாணத்துக்கு ரவீந்திரரும் போயிருந்தார். அவர் வெளி வாசற்படியை அணுகும்போது

அங்கு பங்கிம் சந்திர சட்டர்ஜி நின்றுகொண்டிருந்தார். அவரும் அப்போதுதான் வந்திருந்தார். வழக்கம்போல மாலையிட்டு ராமேஷ் சந்திர தத்தர் பங்கிம் பாபுவை வரவேற்றார். ஆனல் ரவீந்திரரைக் கண்ட பங்கிம் உடனே தன் கழுத்திலிருந்த மாலையை எடுத்து அவர் கழுத்தில் போட்டுச் சொன்னராம்: "அவருக்கு மாலை போடணும், ராமேஷ்....அவருடைய ஸந்தியா சங்கீதங்களைப் படிக்க வில்லையா நீ?" ராமேஷ் சந்திர தத்தர் "படித்ததில்லை" என்ருர். பங்கிம் பாபு அதைப்பற்றி வெகுவாகப் புகழ்ந்து பேசினராம்....

3

ரவீந்திரர் ஒரு சமயம் யாரோ ஒரு நண்பனைப் பார்க்க வெளியூர் போய்விட்டு கல்கத்தா திரும்பிக்கொண்டிருந்தார். ரயிலில் ஏகக் கூட்டம். ரயில் விளக்கும் பிரகாசமாக எரிந்துகொண்டிருந்தபடியால் ரவீந்திரரால் படுத்து உறங்க முடியவில்லை. அப்படி வீணகும் பொழுதை **பாலகா** என்று தன் சகோதரரின் மனைவி ஆரம்பித்து நடத்திக்கொண்டிருந்த குழந்தைகளின் பத்திரிகைக்கு ஒரு கதையைக் கல்பனை செய்வதில் போக்கலாமே என்று எண்ணினர்.....ஆனல் கல்பனை

ஓடவில்லை. கதை ஒன்றும் மனதில் உருவாக வில்லை. இந்த முயற்சிக்கிடையே தன்னையும் அறியாமல் அவர் தூங்கிவிட்டார். கனவு ஒன்று கண்டார் அப்பொழுது....ஒரு கற்கோயில்....அதன்முன் பல படிகள்....படிகளின் மேல் கோயில் மூர்த்திக்குப் பலியிடப்பட்ட பலருடைய ரத்தம் வழிந்து ஓடிக்கொண்டிருக்கிறது....வெளியே ஒரு சிறுமி தன் தகப்பனுடன் நின்று கொண்டிருக்கிறாள். அவள் கருணையுடன், பரிதவித்துத் தன் தகப்பனை "என்ன இது? ஏது இவ்வளவு ரத்தம்?" என்று கேட்டுக்கொண் டிருக்கிறாள்....தகப்பனார் பதில் சொல்லாமல் அவளைச் சமாதானம் செய்ய முயலுகிறார்....இதுதான் அப்போது ரவீந்திரர் கண்ட கனவு....இந்தக் கனவை ஆதாரமான சம்பவமாக வைத்துத்தான் பாலகாவுக்கு ரவீந்திரர் ராஜரிஷி எனும் தொடர் கதையை எழுதினார்.

4

இங்கிலாந்திலிருந்து சைத்திரிகர் வில்லியம் ராதன்ஸ்டீன் என்பவர் இந்தியா வந்தபோது சிலநாள் கல்கத்தாவில் தாகுர்களின் மாளிகையில் ரவீந்திரரின் சகோதரரின் புத்திரரான கலைஞர் அபநீந்திரநாதருடன் தங்கியிருந்தார்.

ரவீந்திரரின் முகமும், பாவமும் சைத்திரிகரின் மனதைக் கவர்ந்தன. ரவீந்திரர் ஒரு கவி என்பதை அவருக்கு அப்போது யாரும் சொல்லவில்லை. அவருடைய உருவத்தை மட்டும் தீட்ட விரும்பி ராதன்ஸ்டீன் தீட்டினர்........சிலநாள் கழித்து ரவீந்திரர் வங்காளியிலே பெரும் புகழ் பெற்ற கவிஞர் என்று அறிந்து ராதன்ஸ்டீன் அவருடைய எழுத்து எத்தன்மையது என்று அறிய விரும்பினர். ஆனல் அப்போது கவி எதுவும் ஆங்கிலத்தில் எழுதியதில்லை; ராதன்ஸ்டீனுக்கு வங்காளி தெரியாது........

1912-ல் ரவீந்திரர் இங்கிலாந்துக்குப் போனபோது ஆங்கிலத்தில் தானே மொழி பெயர்த்திருந்த சில கவிதைகளை வில்லியம் ராதன்ஸ்டீனிடம் காட்டினர். "என் வங்காளிக் கவிதையின் வசன மொழிபெயர்ப்புத்தான் இது; என் ஆங்கிலமும் சரியாயில்லை" என்று சொல்லிக்கொண்டேதான் கவி தன் மொழி பெயர்ப்புகளை ராதன்ஸ்டீனிடம் காட்டினராம். ஆனல் அந்த மொழிபெயர்ப்புகளைப் படித்துவிட்டு இரண்டு நாள் கழித்து வில்லியம் ராதன்ஸ்டீன் உத்ஸாகத்துடன் குதித்தார்: கூத்தாடினர். அதுமாதிரி அதுவரையில் ஆங்கில இலக்கியத்தில் கிடையவே கிடையாது என்ருர்.

ரவீந்திருக்கு அதுபற்றி அவ்வளவாக நம்பிக்கை வரவில்லை; சைத்திரிகரான வில்லியம் ராதன்ஸ்டீனுக்கு இலக்கியத்தைப்பற்றி ஒன்றும் தெரியாது போலிருக்கிறது என்று எண்ணினர்.

ஆனல் ராதன்ஸ்டீன் அந்த மொழி பெயர்ப்புகளைப் பல நண்பர்களுக்குக் காட்டினர். பிராட்லீ, ஸ்டாப்போர்டு ப்ரூக், வில்லியம் ஈட்ஸ் முதலியோர் அதைப்பற்றி ரொம்பவும் சிலாகித்துச் சொன்னர்கள். ஒருநாள் அந்தக் கவிதைகளை ஈட்ஸ் சில நண்பர்களுக்கு ராதன்ஸ்டீன் வீட்டில் வாசித்துக் காட்டுவது என்று ஏற்பாடாயிற்று. அன்று சார்லீ ஆண்ட்ரூஸும் ராதன்ஸ்டீனுடைய வீட்டுக்கு வந்திருந்தார். ஆண்ட்ரூஸும் தாகுரும் முதல் முதலாகச் சந்தித்தது அப்போதுதான்........ ஈட்ஸ் தன்னுடைய அழகிய குரலில் மெதுவாக அந்தக் கவிதைகளை வாசித்தார். ரவீந்திரர் குன்றிப்போய் தன்னை அவர்கள் அப்படி அவமானப் படுத்தலாமா என்று எண்ணியவராக ஒரு மூலையில் நின்ருர்....அங்கிருந்தவர்கள் மனதிலே என்ன நிகழ்ந்ததோ; ஆனல் அவர்கள் முகத்திலே எவ்வித சலனமும் இல்லை. ஈட்ஸிடம் கவிக்குக் கோபங்கோப

மாக வந்ததாம்!....ஆனால் அன்று அந்தக் கவி தைகளைக் கேட்ட எல்லோரும் மறுநாள் கடிதம் எழுதினார்கள். அந்தக் கடிதங்களில் எல்லோரும் ஏகமனதாகத் தங்களிடையே தோன்றிவிட்ட மஹாகவியைப் புகழ்ந்து எழுதினார்கள்; வெறும் வார்த்தைக்காக மட்டும் அல்ல: அவர்கள் கடிதங் களிலே உண்மை அது என்பது த்வனித்தது....

சார்லீ ஆண்ட்ரூஸ் அன்றைய சம்பவங் களைப் பற்றி விரிவாகப் பல தரம் எழுதியிருக் கிறார். "கீதாஞ்சலியிலிருந்து சில பகுதிகளை ஈட்ஸ் வாசித்தார். நான் மந்திரத்தால் கட்டுண் டவன் போலக் கேட்டேன். என்ன நிகழ்ந்தது என்று வார்த்தைகளில் சொல்லுவது என் னால் முடியாத காரியம். அந்தக் கவிதை களின் அழகு என்னுள்ளே புகுந்து என்னைப் பரவசப் படுத்தியது. அவைகளின் இசை என்னை மயக்கிற்று. கவியினுடைய உருவமும் அந்த அறையில் தெரிந்தது; குன்றிப்போய், யார் கண்ணிலும் படாமல் இருக்கும் உத்தே சத்துடன், அவர் ஒரு மூலையில் பதுங்கிக் கொண்டிருந்தார். அவர் கவிதைகளைப் படிக் கக் கேட்டபோது எனக்கு அவரை அணுகி, அவரை வணங்கி, காலைத் தொட்டுக் கண்ணில் ஒத்திக் கொள்ளவேணும் என்று ஒரு ஆசை தோன்றிற்று........நான் என்ன செய்தேன்

என்று எனக்கே தெரியவில்லை. கால தேச வர்த்தமானங்களை எல்லாம் கடந்தவன் போலானேன்....என் ஆத்மாவின் கண்கள் அழகெனும் கனவைக் கண்டுவிட்டன.....அந்த அனுபவமும், அதன் ஞாபகமும் இன்னும் என் உள்ளத்தை விட்டு அகன்று விடவில்லை. கவியிடமிருந்து சில நாள் நான் பிரிந்திருந்து இப்பொழுது (1931) அவரை அணுகும்போது அந்த ஞாபகம் எனக்கு வருகிறது — எவ்வளவு வேகத்துடன் வருகிறது என்று என்னால் சொல்ல முடியாது....நான் இந்தக் கவியைச் சந்திக்குமுன் என் வாழ்க்கை எப்படி யிருந்தது, அதற்கப்புறம் எப்படி மாறிற்று என்று அறிந்தவர்கள் அன்றைய அனுபவம் என்னைப் பற்றியவரையில் எவ்வளவு மஹத்தானது என்பதையும் அறிவார்கள்....என் ஆத்மா அன்று மாலைதான் சுயேச்சை பெற்றது. என் உள்ளத்திலே புதியதோர் லக்ஷியம் குடி புகுந்தது....அதெல்லாம் எப்படி என்றுமட்டும் என்னைக் கேட்கவேண்டாம். ஆனால் அதெல்லாம் நடந்ததென்னவோ வாஸ்தவம்.... ”

5

1913-ல் நவம்பர் மாதம்....அப்போது எட்வர்ட் தாம்ப்ஸனும் சாந்திநிகேதனத்தில் தங்கி

யிருந்தார். ஒரு நாள் காலையில் திடீர் என்று சாந்திநிகேதனத்தில் ஒரு பரபரப்புத் தோன்றியது. பலர் கைகளில் தந்திகளுடன் பறந்து வந்தார்கள். "பெரிய செய்தி....சந்தோஷமான செய்தி....குருதேவருக்கு நோபல் பரிசு கிடைத்திருக்கிறது" என்று ஆனந்தக் கூச்சலிட்டார்கள் பலர். ஒரு நிமிஷம் கழித்து கவியே முன்னறைக்கு வந்தார்....அன்று சாந்திநிகேதனத்திலிருந்த சந்தோஷத்தை அளவிட்டுச் சொல்ல முடியாது....சாந்திநிகேதனப் பள்ளிக் கூடத்துப் பையன்கள் பலருக்கு நோபல் பரிசு என்றால் என்ன என்றே தெரியாது. ஆனால் அவர்கள் எல்லோருக்கும் தங்கள் குருதேவர் ஏதோ பிரமாதமான காரியத்தைச் சாதித்து விட்டார் என்று தெரிந்துவிட்டது. கோஷ்டி கோஷ்டியாக, "ஆமாதேர் சாந்திநிகேதன்" என்ற பள்ளிக்கூடப் பாட்டைப்பாடிக்கொண்டு அவர்கள் கவியைச் சுற்றிச் சுற்றி வந்தனர். ஒவ்வொருவராக ரவீந்திரரின் காலில் விழுந்து அவர் பாதங்களைக் கண்ணில் ஒத்திக்கொண்டனர்....கவி கைகளைக் குவித்தபடி, தலையைக் குனிந்துகொண்டு, "வேண்டாம், வேண்டாம்" என்று சொல்லிக்கொண்டே நின்றார்........அஜீத் சக்ரவர்த்தியும் அவர் காலில் வந்து விழுந்து நமஸ்கரித்தார். அதற்குமேல்

கவியால் தாங்கமுடியவில்லை........எல்லோரும் உரக்க ரவீந்திரரின் கீதங்களைப் பாடினார்கள்.... பின்னர் ஒரு பெரிய சொக்கப்பனை கொளுத்தி அந்த சம்பவத்தைப் பையன்கள் விசேஷ மாகக் கொண்டாடினார்கள்.

"எனக்கு இனி அமைதியோ, தனி மையோ கிடைக்காது" என்று சொல்லி வருந்தினாராம் கவி....

அந்த நாட்களில் அவருக்கு வந்த கடிதங் களைப்பற்றி அவருடன் இருந்த எட்வர்ட் தாம்ப் ஸன் எழுதி இருக்கிறார்....அவருடைய ஆங்கில மொழிபெயர்ப்புகளை அவருக்காகச் செய்து கொடுத்தது யார் என்று பலர் கேட்டார்களாம். கல்கத்தாவில் ஒருவர் தான் செய்து கொடுத்த தாக ரகசியத்தில் சொல்லிக் கொண்டிருந்தா ராம்!....பலருக்கு வெகுநாள் ரவீந்திரரின் ஆங் கில மொழிபெயர்ப்புகள் எல்லாம் கவி ஈட்ஸ் செய்ததுதானே என்று சந்தேகமாக இருந்த தாம். நோபல் இலக்கியப் பரிசு பெற சிறந்த வழி என்ன? யார் யாருக்கு எப்படி எப்படி 'லஞ்சம்' (?) கொடுத்தாகவேணும் என்று கேட்டுப் பலர் எழுதினார்களாம்....தென்னிந்தி யாவிலிருந்து ஒருவர் ஆங்கிலத்தில் ஒரு கவிதை எழுதி அனுப்பி அது நோபல் இலக்கியப் பரிசு பெற லாயக்கானதா, அனுப்பலாமா என்று

கேட்டிருந்தாராம்! (இது யாராயிருக்கும் என்று தமிழ் வாசகர்களில் பலர் சரியாக ஊகித்துக் கொள்ளுவார்கள் என்றே நம்புகிறேன்.).... பரிசாக வந்த பணத்தில் ஒரு பகுதியைக் கடனைக் கேட்டு எழுதியிருந்தவர்கள் பலர்....

நோபல் இலக்கியப் பரிசு சுமார் ஒரு லக்ஷ ரூபாய் பொறுமானது. பரிசுடன் ஒரு தங்கப் பதக்கமும் அளிப்பார்கள். அந்தப் பதக்கத்திலே ஒரு ஆசிரியனின் எழுத்தில் உள்ள எந்த விசேஷ அம்சத்துக்காக அந்தப் பரிசு அளிக்கப்பட்டது என்று காரணம் செதுக்கப்பட்டிருக்கும். ரவீந்திரரின் நோபல் பதக்கத்திலே பின்வருமாறு அர்த்தப்படும்படியாகச் செதுக்கப்பட்டிருந்தது: "அவர் கவிதையிலே ஆழ்ந்த உண்மைகளும், உணர்ச்சிகளும், உயர்ந்த லக்ஷியங்களும் த்வனிக்கின்றன. மேலும் அவருடைய அழகிய, ஆழ்ந்த, இந்திய சிந்தனைகளை அவர் மேல்நாட்டுக்கு உகந்தமாதிரியான உருவங்களில் அமைத்துத் தந்திருப்பதும் இதனால் போற்றப்படுகிறது."

6

1916-ம் வருஷம் ஜனவரி மாதம்....பங்கூரா ஜில்லாவில் பஞ்சத்தி லடிபட்டு வருந்திய ஜனங்களுக்கு உதவி செய்யப் பொருள் திரட்

டும் பொருட்டு, கல்கத்தாவில் தாகுர் மாளிகை யில் ரவீந்திரரின் பால்குன் எனும் நாடகம் நடிக் கப் பெற்றது. வீட்டு வெளி முற்றம் தான் நாடக மேடை. "மோட்டார் கார்களில் வந்து இறங்கியவர்கள்தான் சபையில் நிறைந் திருந்தனர். எல்லோரும் பத்து ரூபாய்க்கு மேல் விலை கொடுத்து டிக்கட் வாங்கியவர் கள். அவர்களில் பலருக்குக் கலையிலோ, கலை சம்பந்தமான விஷயங்களிலோ ஒருவிதமான ஈடுபாடும் கிடையாது. அவர்கள் அங்கு நாடகம் பார்த்து ரஸிக்கவந்தவர்கள் அல்ல" என்று அன்று கூடிய சபையைப்பற்றி வங் காளி என்ற பத்திரிகை அப்போது விமர்சனம் எழுதியது.

நாடகத்தில் நடித்தவர்கள் தாகுர் குடும் பத்தாரும், சாந்திநிகேதன பள்ளிக்கூட மாண வர்களும்தான். எல்லோரும் நடிப்புக் கலையின் சிகரத்தை எட்டிப் பிடித்தவர்கள்; கவியின் மேற்பார்வையிலே நடிக்கப் பல நாளாகப் பழ கியவர்கள். சங்கீதம், திரை எல்லாவற்றையும் கவியே ஏற்பாடு செய்திருந்தார். வஸந்த காலத்து கீதங்களைப் பாடியவர்கள் சிறுவர்கள். அவர்களுக்கும் தக்க பயிற்சி அளித்திருந்தார் கவி. அந்த சங்கீதம் மேல்நாட்டு பாணியில் அமைந்திருந்தது என்று வங்க விமர்சகர்கள்

குறைகூறினர்கள். அப்படியில்லை என்றார் கவி. ஆனால் எல்லோரும் அது ரொம்பவும் இன்ப கரமாக இருந்தது என்று ஒப்புக்கொண்டார் கள்........மற்ற கீதங்களும் ரொம்பவும் மனோ ரம்யமாக இருந்தன... நடிகர்களில் ஒருவன் ஒரு திபெத்திய மாணவன். அவன் அந்த வங் காளிப் பாடல்களைப் பாடிய பாணியே ரொம்ப வும் அழகாக இருந்தது. ராஜா வேஷம் போட்டவர் கவியின் சகோதரரின் மகன், ககனேந்திரநாத தாகுர். அவருடைய சகோதரர் அபநீந்தரநாத தாகுர் பண்டிதர் வேஷம் போட்டுக் கொண்டார்........இருவரும் பாத் திரத்திற்கேற்றபடி வெகு அழகாக நடித் தார்கள். ஆனால் கவி ரவீந்திரரின் பாகமும், நடிப்பும்தான் மிகவும் அழகாகச் சோபித்தது. முதலில் சந்திர சேகராகவும், பின்னர் குருட் டுக் கவிஞனாகவும் அவர் நடித்தார். "அவரு டைய நடிப்பைக் கலையின் சிகரம் என்று தான் சொல்லலாம்; அன்று பார்த்தவர்கள் யாரும் அதை ஒரு நாளும் மறக்க முடியாது" என்று எட்வர்ட் தாம்ப்ஸன் எழுதியிருக்கிறார். ....நாடகம் முடிந்தபின் அதில் நடித்தவர்கள் எல்லோரும் மேடையில் தோன்றி நாட்டியமாடி னர்கள். நாடகத்தில் ஒரு தூதனாக வந்து ராஜா விடம் இரண்டே வார்த்தைகள் சொல்லிவிட்டு

மறைந்துவிட்ட ஆங்கிலேயர் வில்லீ பியர்ஸன் கூட, கழுத்தில் கவி அன்புடன் போட்ட மாலையுடன், நாட்டியமாடினாராம்.... "அந்த சாஹேபைப் பார்" என்று கூச்சலுடன் சபை கலந்தது....நாடகம் முடிந்து, சபை கலைந்து வெகு நேரமான பின்னும் நடிகர்களின் உத்ஸாகம் குறைவதாக இல்லை என்று எட்வர்ட் தாம்ப்ஸன் எழுதியிருக்கிறார்.

7

முதல் தடவையாக ரவீந்திரர் அமெரிக்கா போயிருந்தபோது நடந்த சம்பவம் இது.... அவர் அப்போது இன்னும் நோபல் இலக்கியப் பரிசு பெறவில்லை. முதல் முதலாக அவருடைய கவிதையின் ஆங்கில மொழிபெயர்ப்புகள் அமெரிக்காவில் கவிதை எனும் ஒரு பத்திரிகையில் வெளிவந்திருந்தன. அப்போது அமெரிக்காவில் கவியினுடைய பிள்ளை ரதீந்திரநாதர் ஒரு சர்வகலாசாலையில் வாசித்துக்கொண்டிருந்தார்....ஹார்வார்டு சர்வகலாசாலையில் வாசித்துக்கொண்டிருந்த சில இந்திய மாணவர்கள் கலாசாலையில் தாகுர் பிரசங்கம் செய்யவேணும் என்று விரும்பி ஏற்பாடு செய்ய முயன்றார்கள். ஆனால் சர்வகலாசாலை அதிகாரிகள் வங்க கவிக்கு ஆங்கிலம் பேசத் தெரியுமோ, என்னவோ என்று சந்தேகப்பட்டார்களாம்!....

ஆனால் கவி வந்து மேடைமேல் ஏறி நின்று பேச — ஆங்கிலத்தில்தான் — ஆரம்பித்ததும் எல்லோரும் மாயத்தால் கட்டுண்டவர்கள்போல அசைவற்று, செயலற்று நின்றார்கள். உலகத்திலேயே அவர் குரலுக்கீடான குரலை அங்கு யாரும் கேட்டதில்லை என்று சொல்லிக் கொண்டார்களாம்.....சபையில் இருந்த ஒரு அமெரிக்க ஸ்திரீ தாகுரின் பிரசங்கம் எல்லாம் முடிந்தபின் தன்னுடன் வந்த இன்னொரு அமெரிக்க ஸ்திரீயைக் கேட்டாளாம்: "ஆமாம்; அவர் முகத்தைப் பார்த்தால் ஏசுகிறிஸ்துவினதைப்போல இல்லையா?" மற்றவள் சிறிது நேரம் தயங்கிவிட்டு "....கிறிஸ்துவும் ஆசியாவில் பிறந்தவர் தானே!" என்று பதிலளித்தாளாம்.

8

தாகுர் ஜப்பானில் சுற்றுப் பிரயாணம் செய்துகொண்டிருந்தபோது ஒருதரம் சில ஜப்பானியர்கள் வந்து சமீபத்தில் நடந்த ஒரு விசேஷ சம்பவத்தைப்பற்றி இரண்டு வரி கவிதை எழுதித் தரவேணும் என்று அவரைக் கேட்டார்கள். என்ன விசேஷ சம்பவம் அது என்று விசாரித்தார் கவி. இரண்டு வீரர்கள் சமீபத்திலிருந்த ஒரு புல் வெளியிலே ஒருவருக்கொருவர் சளைக்காமல் நாள் முழுவதும்

சண்டையிட்டுக் கொண்டிருந்துவிட்டு அஸ்த மய சமயத்தில், உடம்பெல்லாம் கணக்கற்ற காயங்களுடன், சேர்ந்தாப்போல சோர்ந்து விழுந்து இறந்தார்கள் : தரை எங்கும் அவர்க ளுடைய சிவந்த ரத்தம் ஓடியது : இந்த சம் பவத்தைப் போற்றி ஒரு கவிதை வேணுமென் ருர்கள்....கவியின் மனதிலே இந்த சம்பவம் தாங்கொணுத வெறுப்பை எழுப்பியது. சரே லென்று அவர் தன் மனதில் இருந்ததை இரண்டு வரிகளில் வெளியிட்டார் :

> *“ அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் வெறுத்து விரோதித்து சண்டையிட்டு இறந்தார்கள்;*
>
> *கடவுள் வெட்கிப் போய் புல்லே முளைக்க வைத்து அந்த இடத்தில் சிந்திய ரத்தத்தை மறைத்துவிட முயன்ருர். ”*

9

1902-ல் ரவீந்திரருடைய மனைவி மிருணு ளினிதேவி இறக்குமுன் பல நாள் உடம்பு சரியாயில்லாமல் படுத்த படுக்கையாகக் கிடந் தார். கவியே சதா தன் மனைவியுடன் கூட இருந்து வேண்டியதை யெல்லாம் செய்து வந் தார்.....மிருணுளினி தேவி இறக்குமுன் நாற் பத்தியெட்டு மணி நேரம் கவி தூக்கமே இல் லாமல், தன் மனைவியின் பக்கத்திலிருந்து

அசையாமல், அவருக்கு வேண்டிய சிசுருஷை களையெல்லாம் செய்துகொண்டிருந்தாராம்.... தன்மனைவி இறந்தவுடன் அவர் மேல்மாடியிலே போய் இரவு முழுவதும் தனிமையில் குறுக்கும் நெடுக்கும் நடந்துகொண்டே கழித்தார். ....அப்பொழுது அவர் தகப்பனார் மஹரிஷி தேவேந்திரநாத தாகுர் சொன்னாராம்: "நான் ரவியைப்பற்றிக் கவலைப்படவில்லை. அவனுக்கு ஆறுதலளிக்கப் புஸ்தகங்களும், கவிதையும் இருக்கவே இருக்கின்றன. ஆனால் குழந்தைகளைப்பற்றி எண்ணும்போதுதான் கஷ்டமாயிருக்கிறது........"

1918-ல் அவருடைய மூத்த பெண் மதுரிலதா இறந்து விட்டாள். கவிக்கு மிகவும் நெருங்கிய நண்பர்கள் துக்கம் விசாரிக்க அவரைக் காணப் போனபோது அவர் அந்த சம்பவத்தைப்பற்றிப் பேசாமலே இருந்து விட்டாராம்....வேறு ஏதேதோ பேசிக்கொண்டிருந்தாராம்....தன் மனதிலுள்ள துக்கத்தை மறைத்து வைக்க அவர் கற்றுக்கொண்டிருந்தார்.

10

இங்கிலாந்தில் கவி ஒரு நாள் பல ஆங்கில நண்பர்களுக்குத் தன் வங்காளிக் கவிதையைப் பாடிக் காண்பித்துக்கொண்டிருந்தார். அறையிலிருந்தவர்களில் பலருக்கு வங்காளி தெரியாது.

ஆனல் கவியின் முகத்திலும் குரலிலும் த்வனித்த பாவம் அவர்களைப் பரவசப்படுத்தியது. ரொம்ப உருக்கமான கட்டம்....திடீரென்று கவி பாடுவதை நிறுத்திவிட்டார். கல கல வென்று நகைத்துக்கொண்டு, மூன்று வயதிருக்கும் ஒரு குழந்தை, உள்ளே ஓடி வந்தது. பாடுவதை நிறுத்திவிட்ட கவி அந்தக் குழந்தைபோலவே அத்துடன் கலகல வென்று சிரித்தார்.....

" அறையிலிருந்தவர்கள் திடுக்கிட்டுப்போய் விட்டார்கள். குழந்தையின் சிரிப்பும் கவியின் சிரிப்பும் இசைந்து ஒலித்தது....அந்தக் குழந்தை உள்ளத்தின் ஆனந்தத்தைக் கவி அறிந்திருந்தாரா? அது போன்ற ஒரு ஆனந்தம்தான் அவருடைய கவிதையிலும் ஒலிக்கிறது....இல்லாவிட்டால் தன் கவிதையை விட அந்தக் குழந்தையின் சிரிப்பு முக்யமானது என்று அறிந்து ஒப்புக்கொள்ளத் தைரியம் இருந்தது அந்தக் கவிக்கு என்றுதான் அர்த்தமா இந்த சம்பவத்துக்கு?" என்று யோசித்தாராம் எஸ்ரா பவுண்டு என்ற பிரபல கவி.....

> "கோயிலில் தெய்வ சன்னிதானத்திலிருந்து குழந்தை தெருப்புழுதியில் அளைய ஓடிவிட்டது;
>
> பூசாரியின் கைகளிலிருந்து தப்பிக் கடவுளும் குழந்தையைப் பின்தொடர்ந்து போய்விட்டார்."

சில குறிப்புகள்

1

கவிதை

'வாழ்க்கை' என்ற பகுதியிலே, கவியின் ஒரு முப்பது கவிதைத் திரட்டுகளின் பெயர்கள் இடம் பெற்றிருக்கின்றன. இவைதான் கவியின் எழுத்திலே சிறந்தவை என்றோ, முக்ய மானவை என்றோ, பெரும்பகுதி என்றோ சொல்லுவதற்கில்லை. எட்டாவது வயதிலிருந்து எண்பதாவது வயது வரையில் அவர் ஓயாமல் கவிதை எழுதியிருக்கிறார்....எல்லாம் சிறந்தது என்றோ, படிக்கவேண்டியவை என்றோ சொல்ல முடியாது. ஒரு பாதிக்குமேல் கவிதையாகத் தேறாது என்றுதான் பல வங்க விமர்சகர்களும், எட்வர்ட் தாம்ப்ஸனும் அபிப்பிராயப்படுகிறார்கள்....ஒரே சிந்தனை, ஒரே உவமை அவருடைய கவிதைகள் பலவற்றில் உருவம் பெற்றிருக்கின்றது. அவருடைய கவிதை எல்லாவற்றை

யும் சேர்ந்தாப்போலப் படிப்பது என்பது முடியாத காரியம். அவ்வளவு நிறைய இருக்கிறது என்பது மட்டுமல்ல ; வாசகனின் மனம் சலித்துப் போய்விடும்....தாகுரே மொழி பெயர்த்திருக்கும் கபீரின் நூறு பாடல்களில் தாகுரின் கவிதையின் வித்தெல்லாம் இருப்பது போலத் தோணுகிறது....சம்ஸ்கிருதத்திலும், சரி, மற்ற இந்திய பாஷைகளிலும் சரி — விஷயத்தைப்பற்றிய மட்டும் ஒரே ஒரு குறை இருக்கத்தான் இருக்கிறது; பழமை என்ற தளையை எந்த இந்தியனும் மீறி எழுந்துவிட முடியாது. கவி என்றால் ராதையையும் கிருஷ்ணனையும், நக்ஷத்திரங்களையும் கங்கையையும் பற்றிப் பாடித்தான் ஆகவேணும்....இந்த விஷயத்தில் கவி ரவீந்திரர் ஒரு விதி விலக்கல்ல....தவிரவும் ரவீந்திரர் உணர்ச்சிவேகம் இல்லாதபோதுகூட கவிதைகள் கட்டியிருக்கிறார். இந்தக் கவிதைகள் எல்லாம் அவருடைய சிறந்த கவிதைகளுடன் இடம் பெறமாட்டாதவை........

இவ்வளவும் குறைகள்தான். ஆனால் இப்படி அவருடைய உண்மையான கவிதைகளில் இடம் பெற மாட்டாதவை எல்லாவற்றையும் ஒதுக்கிவிட்டுப் பார்க்கும்போதுகூட அவர் கவிதையில் ஒரு பெரும்பகுதி தேறும். அப்படித் தேறும் பகுதி உலகில் மற்ற எந்தக்

கவியினுடைய எழுத்துக்கும் ஈடானது; சில சமயம் மேலானது என்று கூடச் சொல்லத் தோணுகிறது. வங்க கவிதை லக்ஷணத்தையே மாற்றி அமைத்திருக்கிறார் கவி. மற்ற எந்த வங்க கவியையும்விட கவிதை உத்திகளுக்கு ஒரு புது மெருகும், புது இடமும் தந்து கையாண்டிருக்கிறார். வங்க கவிகளிலே அவர் தான் சிறந்தவர் என்பதில் சந்தேகத்துக்கு இடமேயில்லை. ஆனால் உலக கவிகளின் வரிசையிலே அவருக்கு உள்ள இடத்தை நிர்ணயிப்பது சற்றுச் சிரமமான காரியம்தான். ஆங்கிலத்தில் மொழிபெயர்க்கப்பட்டிருக்கும் அவருடைய கவிதைகள்தான் அவர் எழுத்திலே சிறந்தவை என்று சொல்ல முடியாது. அவைகளில் பெரும்பகுதி ஒரு இந்தியனுக்கு ரஸிக்காதவையாகவே இருக்கலாம்; ஏனென்றால் அவையெல்லாம் மேல்நாட்டு வாசகனை ஞாபகத்தில் வைத்துக்கொண்டு மொழிபெயர்க்கப்பட்டவை....அது எப்படியானாலும், யோசிக்குமிடத்து, ரவீந்திரரின் சிறந்த கவிதை ஷேக்ஸ்பியர், டாண்டே, கம்பன் இவர்களில் சிறந்ததுக்கு ஈடானதாகத்தான் தோணுகிறது....

அவர் கவிதையிலே இயற்கைத் தேவியின் அருள் இருக்கிறது. வங்கத்தின் நதிகளையும்,

ருதுக்களையும், பூமியையும், ஆகாயத்தையும் அவர் உணர்ந்து வர்ணித்திருப்பதுபோல வேறு எந்த கவியும், எந்த தேசத்திலும் செய்த தில்லை என்று சொல்லலாம். இயற்கையை வர்ணித்திருப்பதுபோல அவர் மனிதனின் சோகங்களையும் அறிந்து, உணர்ந்து, வர்ணித் திருக்கிறார். "ரவீந்திரர்தான் உலகத்திலேயே சோகத்தின் மிகச்சிறந்த கவி" என்று ஒரு ஜெர்மன் விமர்சகர் சொல்லுகிறார்....அவர் முகத்திலே இருந்ததுபோல அவர் கவிதையிலே யும் கருணையும், சகோதர பாவமும், அன்பும் நிறைந்திருக்கிறது....

அவர் கவியாக வங்கத்துக்கோ, இந்தியா வுக்கு மட்டுமோ உரியவர் அல்ல. அவருடைய முப்பதாவது வயதுக்கு முன்னரே அவர் அந்தக் குறுகிய எல்லையைத் தாண்டிவிட்டார். அவர் உலகுக்கே உரியவர் என்பதில் சந்தேகத் துக்கிடமில்லை. பிரசங்க மேடையில் மட்டு மின்றி கவியாகவும் அவர் மேல் நாட்டுக்குக் கீழ் நாட்டின் தூதர்.....

2

கவிதையும் சங்கீதமும்

ஆங்கிலத்தில் சாஸருக்குமுன் கவிதை யைப் பாடத்தான் பாடுவார்கள். இதாலியில்

டாண்டேயின் காலத்திலும்,பிரான்சில் அதற்கு முன்னும் கவிதை என்ருல் பாட்டுடன்தான் சேரும்.... இந்தியாவிலே இன்றும் சிறந்த கவிதை என்பது எல்லாம் சங்கீதமாகவும் இடம் பெறக்கூடியவைதான். கம்பனையும் காளி தாஸனையும் நாம் படித்து அறிந்துகொள்ள வில்லை: பாடியே அறிந்து கொள்ளுகிருேம் என்று சொல்லலாம்.

கவி ரவீந்திரர் இந்தியாவுக்குச் சொந்த மானவர். அவருடைய வங்க கவிதைகள் எல் லாமே — அநேகமாக எல்லாமே — பாடப் படக் கூடியவைதான். இசையுடன் இயைந்தே அவர் கவிதை செய்திருக்கிருர்.

3

சமயமும் பாடலும்

ஹிந்துக்களுக்கு சமயம் என்பது வாழ்க் கையிலிருந்து ஒதுக்கி வைக்கப்படவேண்டிய விஷயம் ஒன்றல்ல. அது வாழ்க்கையுடன் ஒட்டியே உள்ள ஒரு விஷயம். ஒருவிதத்தில் சமயமே வாழ்வு என்றுகூடச் சொல்லிவிட லாம்....கடவுளுக்கு மனிதன் எவ்வளவு அவசியம் என்பதை கவி ரவீந்திரர் அநேக இடங்களில் இசைத்திருக்கிருர்....மேல்நாட்டவருக்கு சமயம், மதம், கொள்கை, வாழ்க்கை இதெல்லாம் தனித்

தனியே கவனிக்கப்படவேண்டிய விஷயங்கள். இதனால் அவர்களுக்கிடையே பக்திப் பாடல்கள் குறைவு. வேறு சில்லரை விஷயமான பாடல்கள்தான் அதிகம்........ஆனால் இந்தியாவிலே பக்திதான். மனித உள்ளத்துக்கும் கடவுளுக்கும் உள்ள தொடர்புதான், கவிதைக்கு முக்ய மான விஷயம். நமது இலக்கியத்தில் சிறந்த கவிதைகள் எல்லாம் பக்தி மயமானவை. கவிகள் சில சமயம் வேறு விஷயங்களைப்பற்றிப் பாடுவார்கள் ; அவ்வளவுதான்....இந்தியாவின் இந்தக் கவித் தத்வத்தை மேல்நாட்டார் அங்கீகரிக்கும்படிச் செய்தது ரவீந்திரரின் பெருமைகளில் ஒன்று.

4

நாடகங்கள்

தாகுரின் நாடகங்கள் பலவகைப்பட்டவை — வசனம், சங்கீதம், கவிதை இவைகளை உதவியாகக்கொண்டு ரவீந்திரர் பல நாடகங்களை எழுதியிருக்கிறார். நாடகங்களாக இவைகளுடைய உருவத்தில் குறைகள் நிறைய இருக்கத்தான் இருக்கின்றன. மேல்நாட்டு நாடக இலக்கியத்துக்கும், கீழ் நாட்டு நாடக பாணிக்கும் சமரஸம் செய்துவைக்கக் கவி பல தரம் முயன்றார் ; முடியவில்லை. நாடகமாகச்

சிறக்காத அவருடைய நாடகங்கள் எல்லாமே சங்கீதம், நடிப்பு, காட்சி ஜோடனை, கவிதை, நாட்டியம் போன்ற கலைகளின் முன்னணியில் நிற்கத் தக்கவையாக அமைந்தன. இதற்கு கவியின் எழுத்தைக் காரணமாகக் கொள்ள முடியாது. கவியின் முயற்சியும், அவருடைய ஜீவனவேகமும்தான் (Personality) முக்ய காரணம்....

தன்னுடைய நாடகங்களிலே அவர் கவிதைக்கும், சங்கீதத்துக்கும், அந்தரார்த்த தத்வ விசேஷத்துக்கும் அளித்த முக்யம் பாத்திரங்களுக்கோ, கதைக்கோ தரவில்லை. அவரால் அப்படி முக்கியத்வம் தந்து உலகிலே மிகச் சிறந்த நாடகாசிரியர் என்று பெயர் வாங்கியிருக்க முடியும் என்பதற்குப் போதிய சாக்ஷி அவருடைய எழுத்திலே இருக்கிறது. ஸதி, கர்ணனும் குந்தியும், மாலினி, சித்ரா போன்ற நாடகங்கள் நாடகங்களாகவும் நன்ருகவேஇருக்கின்றன. இதிலே பண்டைய இந்திய நாடக மரபு அற்றுப் போய்விடவில்லை. மேல் நாட்டு பாணியில், அவர் இயந்திர சாதனங்களை நம்பி, நாடகமேடை அமைக்கவில்லை. அவருடைய நாடகங்களில் அநேகமாக எல்லாம் வெட்ட வெளியிலே நடித்தால்தான் சோபிக்கும்; நாடகக் கொட்டகைகளில் அவ்வளவாக ரஸிப்பதில்லை என்று எட்வர்ட் தாம்ப்ஸன் கூறுகிருர்.

5

கதைகளும் நாவல்களும்

அவருடைய நாடகங்களிலிருப்பது போலவே கவியின் கதைகளிலும் நாவல்களிலும் கவிதை அம்சங்கள்தான் அதிகமாக இருக்கின்றன. மேல் நாட்டாருக்கு அவருடைய கதைகளோ, நாவல்களோ அதிகமாகப் பிடிப்பதில்லை என்பதற்குக் காரணம் இருக்கிறது. இவைகளிலெல்லாம் கவி தற்கால ஹிந்து சமூக சம்பிரதாய விஷயங்களைப்பற்றித்தான் எழுத முயன்றிருக்கிறார். மேல் நாட்டில் ஒரு டால்ஸ்டாயோ, டாஸ்டாவ்ஸ்கியோ, செக்காவோ, ரோலந்தோ, லாகர்லாவோ செய்ய முயலுவது போல அவர் மனித ஜாதியின் உள்ளத்தை, உள்ளத்தில் என்றும் உள்ளதைத் தீட்ட முயல வில்லை. வங்கத்தில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் கடைசிப் பகுதியில் சமூகத்திலே இருந்த பல குறைகளைச் சீர்திருத்தப் பலர் முயற்சித்துக் கொண்டிருந்தனர். கவியின் இளமையிலே இந்த விஷயங்கள்தான் அவர் மனதில் ஆழ்ந்து பதிந்தவை. மேலெழுந்த வாரியான சமூகவாழ்க்கையின் உண்மைகளே அவருடைய கதைகளிலும் நாவல்களிலும் முக்யத்வம் பெற்றன. நித்யமான அம்சங்கள் அவ்வளவாக இடம் பெறவில்லை. இது பத்தொன்பதாம் நூற்

ளூண்டில் வங்க இலக்கியத்துக்கே உள்ள ஒரு குறை என்று (வங்க இலக்கியத்திலிருந்து தமிழில் இன்று மொழிபெயர்க்கப்பட்டு வெளிவந்திருக்கும் நாவல்களினின்றும்) தோணுகிறது.

நாடகங்களில் போலவே கதைகளிலும் தாகூரின் பெண்கள்தான் விசேஷமாக உருவகமாகி யிருக்கின்றனர்.

6

வசனம்

வங்காளியிலும் ஆங்கிலத்திலும் ரவீந்திரரின் வசனத்தில் பெரும்பகுதி அவ்வப் போதைய அரசியல், தேசீய விஷயமாக எழுதப்பட்டிருப்பதுதான். வங்கப் பிரிவினை காலத்தில் அவர் எழுதிய வசனத்தைப் போன்ற இலக்கியம் வேறு எந்த தேசத்திலும், பாஷையிலும் கிடையாது என்று வங்காளிகள் சொல்லிக்கொள்ளுகிறார்கள். பின்னர் பஞ்சாப் படுகொலையைக் கண்டித்து ஸர் பட்டத்தைத் துறந்து வைசிராய்க்கு ஆங்கிலத்தில் எழுதிய கடிதத்திலே எவ்வளவு வேகமும், உணர்ச்சியும், உண்மையும் துடிக்கிறது என்பது ஒவ்வொரு இந்தியனுக்கும் தெரிந்திருக்கும்....அமெரிக்காவிலும், ஜப்பானிலும் சுற்றுப் பிரயாணம் செய்யும்போது அவர் இந்தி

யாவைப் பற்றிச் செய்த பிரசங்கங்கள் இந்திய சரித்திரத்திலே இடம்பெறக் கூடியவை. பிரிட்டிஷ் ஆட்சி முறையின் கோர உண்மையை எவ்வளவு தெளிவாக விளக்கியிருக்கிறார்!.... 1920-க் கப்புறம் அவர் நமது நாட்டு விஷயமாகவும், வெளிநாட்டு விஷயமாகவும் எழுதியிருப்பதெல்லாம் ஆணித்தரமான கட்டுரைகள். சகோதர மனிதனின் துயரத்தையும், கஷ்டத்தையும் கேட்டும், பார்த்தும், உடன் அனுபவித்தும் அவர் எழுதியிருக்கிறார்....இதிலும் அவருடைய கவி உள்ளம்தான் பேசிற்று....சமீபத்தில் ராத்போன் என்ற ஆங்கில மாதுக்கு அவர் விடுத்த பதிலை இந்தியனோ, ஆங்கிலேயனோ எளிதில் மறந்துவிட முடியுமா என்ன?....

ரவீந்திரரின் வசனத்திலே இன்னொரு முக்யமான பகுதி உண்டு. உலகுக்கு பண்டைய இந்தியாவின் நாகரிகத்தையும், கவி அறிந்தவரையில் இந்தியாவின் உண்மைகளையும் தத்வத்தையும் எடுத்து சொல்லியிருக்கும் பகுதிதான் அவருடைய கவிதைகளையும்விட முக்யமானது என்று சொல்லுகிறவர்கள் இருக்கலாம். அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை. வாழ்க்கையின் சாதனை என்று அவர் செய்த பிரசங்கங்களில் ஆரம்பித்து, மனிதனின் மதம் வரையில் பல கட்டுரைகள் தத்வ விசாரத்

துக்கே ஒரு புது குறிக்கோள் கொடுக்க முயன்றன. சிருஷ்டி லயம் என்ற புஸ்தகம் அவருடைய ஆங்கில வசனத்தின் சிகரம். அது பலருடைய வாழ்விலே முக்யமான மாறுதல்கள் செய்திருக்கிறது என்று சொல்லலாம். வெளிநாட்டவருக்கு மட்டுமின்றிப் பல இந்தியர்களுக்குங்கூட அவரே "இந்தியாவின் தூதராக" வந்தார்.

அவருடைய வசனத்திலே மூன்றாவது பகுதியும் முக்யமானதுதான். இலக்கிய விசாரம் இந்தியாவுக்கே புதுசு. மேல்நாட்டு பாணியில், நிறைய, தெளிவாக இலக்கிய விசாரம் செய்திருக்கிறார் கவி.

வான சாஸ்திரம், கவிதை லக்ஷணம், சரித்திரம் முதலியவைகளைப்பற்றி அவர் வெகு அருமையான பாட புஸ்தகங்கள், நூதன முறையில் அமைத்து, எழுதியிருக்கிறாராம்.

நான் வேலை செய்யும்போது கடவுள்
என்னைக் கௌரவிக்கிறார்;
பாடும்போது என்னைக் காதலிக்கிறார்.

— தாகூர்.

விசுவபாரதி

பத்தொன்பதாம் நூற்றாண்டின் மத்தியிலே பிரும்ம சமாஜிகள் என்றால் ஆங்கிலேயருக்குச் சமானமானவர்கள்; இந்தியர்கள் என்ற பதவியைவிட்டு முன்னேறி இன்னும் ஆங்கிலேயர் என்ற சாயுஜ்ய பதவியை அடையாதவர்கள் என்று அர்த்தம். பழக்கவழக்கங்களில் எல்லாம் அவர்கள் ஆங்கிலேயர்களைப் போலத்தான். ஹிந்துக்கள் அவர்களை ஹிந்துக்களாக மதிப்பதில்லை. அவர்களும் ஹிந்துக்களைத் தங்கள் சகோதரர்களாக மதிப்பதில்லை. இந்த பிரும்ம சமாஜத்திலே அப்பொழுது தலைமை வஹித்தது தாகுர் குடும்பம். ஆனால் குடும்பத்தின் தலைவராகிய தேவேந்திரநாத தாகுர் பிரும்ம சமாஜிதான் என்றாலும், பழக்க வழக்கங்களில் அநேகமாக ஆங்கிலேயர்தான் என்றாலும், அவரையும் அறியாமலே அவர் உள்ளத்திலே பண்டைய இந்தியப் பண்பு வேரோடி இருந்தது. பழைய காலத்து மஹரிஷிகளைப்போல வாழ்ந்த தேவேந்திரநாத தாகுர்

கல்கத்தாவிலிருந்து தொண்ணூறு மைலுக்கப் பால் இருக்கும் போல்பூருக்கு அருகாமையில் 1863-ல் கொஞ்சம் நிலம் வாங்கி அதில் ஒரு ஆசிரமமும்,கோயிலும் அமைத்துக்கொண்டார். அதற்குஅவரிட்டிருந்த பெயர்தான்சாந்தி நிகே தனம். குடும்பத்திலும், தான் தலைமை வஹித்த பிரும்ம சமாஜத்திலும், ஏதாவது ஒரு மூடமான பிரச்னையோ, தாங்கமுடியாத நிலைமையோ வந்தால் மனச் சாந்தி பெற அவர் சாந்திநிகே தனம் சென்றுவிடுவாராம்.

ரவீந்திரருக்கும் சாந்திநிகேதனம் ஆரம்ப முதலே ரொம்பவும் பிடித்திருந்தது. கல்கத் தாவிலே முன்னெல்லாம்போல வாழ்வதும் சுலபமாக இல்லை. ஆங்கிலேயர்கள் இந்தியா வுக்கு வந்த புதுசில் தாகுர் குடும்பத்தார் ஏற்கனவே தங்களுக்கிருந்த திரண்ட செல் வத்தை வியாபாரத் துறையிலீடுபட்டுப் பெருக்கி னார்கள். ஆனல் மஹரிஷியின் காலத்திலேயே குடும்பத்துக்குப் பணச் சோர்வு ஏற்பட்டுவிட் டது. அவருக்குப்பின் குடும்பத்தில் கலைச் செல்வம்தான் விருத்தியாயிற்றே தவிர, பொருள் பெருகவில்லை. கவிக்கு சாந்திநிகே தனத்தில் வசிப்பது சுலபமாக இருந்தது. அதே சமயம் அக்கால (தற்கால?) இந்தியக் கல்வி முறைகளைப்பற்றி ஒரு அதிருப்தியும், அதைச்

சீர்திருத்தவேணும் என்ற ஓர் ஆவலும் கவிக்குத் தோன்றியது. சாந்திநிகேதனத்தில் ஒரு புதுமாதிரியான வித்யாலயத்தை அமைத்தார் கவி.....அந்த வித்யாலயம் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்து விருத்தியடைந்தது. குழந்தைகள் கஷ்டப்படாமல், சந்தோஷமாக, இயற்கையுடன் ஒட்டி வாழ்ந்து, கல்வியும் கற்றார்கள். சகோதரத்வமும், ஓர் உன்னத லக்ஷியமும் கொண்டு வாழக் குழந்தைகளை சிறு வயதிலேயே பழக்க வேணும் என்று எண்ணினர் கவி.

கவியின் புகழ் பெருகப் பெருக, அவர் வித்யாலயத்தின் லக்ஷியம் விளங்க விளங்க, இக் காரியத்தில் பலர் அவருடன் ஒத்துழைக்க முன்வந்தார்கள். ஆரம்ப முதலே கவியுடன் இதில் உழைத்தவர்களில் பிரம்மாணந்த உபாத்யாய, ஜகதானந்தராய் இருவரையும் முக்யமாகச் சொல்லவேணும். கவியும் அவருடன் சேர்ந்தவர்களும் தேசீய இயக்கத்தில் நெருங்கிய சம்பந்தமுள்ளவர்களாக இருந்தபடியால் சர்க்காரிடமிருந்து அவர்களுக்கு இந்தக் காரியத்தில் எவ்விதமான உதவியும் கிடைக்கவில்லை. பொதுஜனங்களுக்கு கவி என்ன செய்ய முயன்று கொண்டிருந்தார் என்பது

சரியாக விளங்காததால் அவர்களும் சரியாக ஒத்துழைக்கவில்லை. சதீஷ் சந்திரராய் (இருபதாவது வயதில் 1904லேயே இறந்துபோனார்); மோஹித சந்திரஸேனர்; அஜீத்குமார் சக்ரவர்த்தி முதலியோர் பின்னர் சேர்ந்து கவியுடன் பாடுபட்டனர்....1912க் கப்புறம் வித்யாலயம் வெகு வேகமாக வளர்ந்தது. ஆண்ட்ரூஸும், பியர்ஸனும் சாந்திநிகேதனம் வந்தடைந்தார்கள். ஒரு சின்ன வங்க பள்ளிக்கூடமென்ற நிலையிலிருந்து அது 'விசுவபாரதி' யாக உருவெடுக்க அப்பொழுதே ஆரம்பித்து விட்டது. வில்லீ பியர்ஸனும், சார்லீ ஆண்ட்ரூஸும் தங்கள் கடைசி நாள் வரையில் சாந்திநிகேதனத்தின் லக்ஷியங்களுக்காக உழைத்தனர்.....கவியின் சகோதரர் மஹரிஷி துவிஜேந்திரநாத தாகுர் சாந்திநிகேதனத்திலேயே தன் நாட்களை யெல்லாம் கழித்தார்.

1918-ல் தான் விசுவபாரதி என்ற வார்த்தையை கவி முதல் முதலாக உபயோகிக்க ஆரம்பித்தார். ஆனல் அப்போதும் அதைக் கீழ்நாட்டு நாகரிகங்களின் கோயிலாக மட்டும் தான் அமைப்பதாகக்கவி உத்தேசித்திருந்தார். சம்ஸ்கிருதம், பாலி, ப்ராக்ருதம் (பின்னர்) திபெத்தியன், சீன முதலிய பாஷைகளையும்

இலக்கியங்களையும் கற்று ஆராய்ச்சி செய்ய சாந்தி நிகேதனத்தில் 1919-ல் கவி ஏற்பாடு செய்தார். இந்தப் பகுதிக்கு வித்தியாபவனம் என்று பெயர். இது பல பெரிய புலவர்களின் தலைமையில் நடந்து வருகிறது.

கலை, சங்கீதம் முதலியவற்றிலும் சரியான படி தேர்ச்சியும் ஆராய்ச்சியும் செய்யக் கிட்டத் தட்ட அதே சமயத்தில் நந்தலால் வஸு எனும் மிகச் சிறந்த வங்க கலைஞனின் தலைமையில் கலாபவனம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. அஸித் ஹல்தார், அபநீந்திரநாத தாகுர் இவர்களெல்லோரும் சாந்திநிகேதனத்தின் கலா பவனத்தைச் சேர்ந்தவர்கள்தான். வங்கக் கலைஞர்கள் மட்டுமின்றி வேறு பல தேசத்துக் கலைஞர்களும் இந்தக் கலாபவனத்தை ஒரு வெற்றியாக்குவதற்குப் பாடுபட்டிருக்கின்றனர்....பெண்களின் முன்னேற்றத்திலே ஆர்வங் கொண்ட கவி, பெண் கல்விக்கென்று ஆரம்ப முதலே பாடுபட்டார். நாரீபவனம் என்று ஒரு பகுதி விசுவபாரதியில் தோன்றிற்று.... அந்தக் காலத்தில் சாந்திநிகேதனத்தில் பல நாள் தங்கிய ஒரு ஆங்கில மாது "சாந்திநிகேதனம் ஒரு நவீன பிருந்தாவனந்தான். கவியே அதன் கிருஷ்ணபகவான்" என்று எழுதியிருக்

கிறார்.....அருகில் சுரூள் என்ற இடத்தில் எல்ம் ஹர்ஸ்ட் எனும் ஆங்கிலேயரின் தலைமையில் புனருத்தாரண வேலை ஸ்ரீநிகேதனம் என்று தனிப்பகுதியாக ஆரம்பித்தது........எல்லாப் பகுதிகளும் கவியின் லக்ஷியத்துக்காக, கவியைத் தலைவராகக்கொண்டு, ஒத்துழைத்து பல விதமாகவும் சேவை செய்தன.....

1920-க்கப்புறம் விசுவபாரதி வங்கத்துக்கோ இந்தியாவுக்கோ மட்டும் உரிய சொத்தல்ல; அது இந்த உலகுக்கே உரிய சொத்தாகிவிட்டது. பேராசிரியரும், ஆராய்ச்சியாளருமான ஸில்வேன் லெவி முதல் பல மேதைகளும் கலைஞர்களும் கவியின் விருந்தினர்களாக சாந்திநிகேதனத்தில் வந்து பல நாள் தங்கி தங்களாலானதைச் செய்தனர் .... விசுவ பாரதியின் பகுதிகளும் பெருகின. பணத்துக்கு அவசியமும் அதிகரித்தது. கவி நோபல் பரிசாகத் தனக்கு வந்ததை எல்லாம் விசுவ பாரதிக்கு அளித்தார். தன் வங்காளி புஸ்தகங்களிலிருந்து வந்த வருவாயெல்லாவற்றையும் விசுவபாரதிக்கே தந்துவிட்டார். ஆங்கிலப் புஸ்தகங்களிலிருந்து வந்ததுகூடப் பாதிக்கு மேல் விசுவபாரதிக்காகத்தான் செலவாயிற்று. தேசம் தேசமாகத் திரிந்து விசுவ

பாரதியைப்பற்றிப் பிரசாரம் செய்து அதற்காகப் பணந் திரட்டுவதையே தன் வாழ்நாளில் கடைசி லக்ஷியமாகக் கொண்டார் கவி. இறக்குமுன் தாகுர் கல்கத்தா மாளிகையில் தனக்குரிய பகுதியை விசுவபாரதிக்கு எழுதிவைத்துவிட்டார். அப்படியும் விசுவ பாரதி என்ற லக்ஷியம் வெற்றிபெறப் பணம் போதவில்லை....

ராமன் என்ற இலக்ஷிய புருஷனைப்போல விசுவபாரதியும் ஒரு கவியின் கனவு. பின்னர் பட்டம் கொடுப்பது, கல்கத்தா சர்வ கலா சாலைப் பரீக்ஷைகளுக்கு மாணவர்களைப் படிப்பிப்பது போன்ற சில்லரைக் குறைகள் இந்த லக்ஷியக் கனவிலே தோன்றிவிட்டன எனினும் சரஸ்வதிக்கு உண்மையான தொண்டு இன்னமும் சாந்திநிகேதனத்திலேதான் நடக்கிறது என்று சொல்லவேணும். இலக்கியமும், கலையும், இயற்கையும், வாழ்க்கையுடன் ஒட்டி இருக்கவேணும் என்று சுலபமாகச் சொல்லி விடுகிறோம்....அது இந்தப் பரந்த உலகில் சாந்திநிகேதனத்தில் தவிர வேறு எங்கும் நடப்பதாகத் தெரியவில்லை. சாந்திநிகேதனம் உண்மையிலேயே ஒரு சர்வகலாசாலைதான்.

தாகூரின் மரணத்தைக் கேட்ட மகாத்மா காந்தி, "சாந்திநிகேதனமும் ஸ்ரீநிகேதனமும் கவி தாகூர் இந்தியாவுக்கும், உலகத்துக்குமே வைத்து விட்டுப் போயிருக்கும் சம்பத்து. அதைப் போற்றிப் பரிபாலிப்பது நமது கடமை" என்று சொல்லியிருக்கிறார்.

தோட்டியை மணந்த அரசகுமாரி

முதலிய கதைகள்

தி. நா. சுப்பிரமணியன் எழுதியவை.

(சரித்திர சம்பந்தமான கதைகள்.)

பொருளடக்கம்

பெதர் வெயிட் காகிதம் :: கலிகோ பைண்ட்

ரூ. 1-6-0

அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.

தக் கோவை" — இதைப்பற்றிய புகழுரைகள்

லர் கல்வி :— நவரசங்களேயும் தனித்தனியாகவும் ஒன்று ம் காணக்கூடிய பல கதைகள் உள்ளன. * இக்காலத்தில் மிழ் நூல்களை அச்சிட்டு, தமிழ்மொழியின் வளர்ச்சிக்குப் ம் உழைத்துவரும் அல்லயன்ஸ் கம்பெனியார் இவ்வளவு ா புத்தகத்தை வெளியிட்டிருப்பது மிகவும் போற்றத்தக்க

he Free Press :—A Notable Book. No Library dern Tamil Literature will be complete, it can ely affirmed, *without this excellent volume*.

ரசண்ட விகடன் :—* கதைக் கோவையைப் போலவே, ழம் கருத்தையள்ளும் வகையில் வெகு அழகாகப் பதிக்கப் க்கிறது. * இப்புத்தகம் தமிழ் மக்கள் ஒவ்வொருவர் திலும் இருக்கவேண்டியது அவசியம்.

க்தி :—தமிழிலக்கிய நவமலர்ச்சியின் கொழுந்து இந்நூல். நூல் ஒவ்வொரு தமிழர் வீட்டிலும் இருக்கவேண்டும். இது மல்ல, உண்மை.

பாரத தேவி :— 40 - பேர்கள் எழுதிய சிறந்த சிறுகதைகளை ாம் திரட்டித் தமிழருக்கு இப்புத்தகத்தின் மூலம் தந்திருக் அல்லயன்ஸ் கம்பெனியாரின் ஊழியம் முதலில் பாராட்ட டியதாகிறது. * இக்கதைக் கோவையை ஒவ்வோர் தமிழரும் யம் படிக்கவேண்டியது. இப்புத்தகத்தைப் படிக்கத் தவறிய தமிழ் இலக்கியத்தில் வளர்ச்சிபெற்று வரும் புதிய வித்தை பார்த்து இன்புறத் தவறிவிட்டவர்களே யாவார்கள்.

The Indian Express:—All the Stories are good of them exquisite and some profound. * The is neatly printed and remarkably well got-up.

Sri *T. K. Chidambaranatha Mudaliar, B. A., B. L., ed Endowment Commissioner* :—*It is really a ure to see a book like your கதைக் கோவை. neans of the publication, you have in a way ged the literary talents of the Tamil Nad. I tily congratulate you on the publication.

லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர், சென்னை.